

தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் அஸ்வின்

பக்கம் 18


# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 323 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 29, புதன் 15.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


## இலங்கை மீன்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை?

கொழும்பு, ஒக்.15
இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன் வகைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளது என்று தெரிய வருகின்றது.
ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு இலங்கை மீன் வகைகள் பிரவேசிப்பதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றிய மீன்பிடி மற்றும் கடற்றொழில் விவகார ஆணையாளர் மாரியா தமனாகாய் தெரிவித்துள்ளார்.
மூன்று மாத காலப்பகுதிக்குள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தவறினால், இலங்கை

22 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்கே வளங்களை உங்களுக்கு தருகிறோம்

## நெடுந்தீவில் தெரிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15
நெடுந்தீவை வெற்றி கொள்வதற்கோ, அல்லது வடக்கு மாகாணத்தை வெற்றிகொள்வதற்கோ நாங்கள் உங்களுக்கு வளங்களைத் தரவில்லை. மாறாக சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்கும், சர்வதேச ரீதியில் நீங்கள் புகழ் சேர்ப் பதற்குமே இவற்றை உங்களுக்கு வழங்குகின்றோம். – இவ்வாறு நேற்று நெடுந்தீவில் வைத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி.
வடக்குக்கான அவரது பயணத்தின் இறுதிநாளான நேற்று நெடுந்தீவுக்குச் சென்றிருந்த அவர் அங்குள்ள மக்களைச் சந்தித்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது,
"இலங்கையின் நகர்ப்பகுதி பாடசாலைகளில் செல்வந்தர்களின் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளும் அனைத்து வசதிகளையும், கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுப்போம். நான் உ ங்களைப் போன்று கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். கொழும்பில் பிறந்தவர்களை விட கிராமத்தில் பிறந்த என் போன்றவர்களுக்கே கிராமங்களைப் பற்றித் தெரியும்.
பாடசாலை மாணவனாக இருக்கும் பொழுதும், அரசியலில் இருக்கும் பொழுதும் பல தடவைகள் நெடுந்தீவுக்கு வந்திருக்கிறேன். ஆனால் ஜனாதிபதியாக வருவது இதுவே முதற்தடவையாகும். வடக்கு மாகாணத்தில் மஹிந் தோதய திட்டத்தின் கீழ் 96 பாட சாலைகளில் ஆய்வு கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளோம். கொழும்பில் இருக்கும் பாடசாலைகளில் செல்வந்தர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே கிடைக்கும் வசதிகள் கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் வழங்குவோம்.
மாணவர்களே உங்களுக்கு சமூகத்தில் நற் பெயர் கிடைக்க வேண்டுமானால் அதற்கு முக்கியமான தேவை கல்வியாகும். அறிவை எவரும் களவாட முடியாது. உங்களுடைய பெற்றோர், ஆசிரியர்களை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். நாம் நெடுந்தீவை வெற்றி கொள்வதற்காகவோ, வடக்கு மாகாணத்தை வெற்றி கொள்வதற்காகவோ, இலங்கையை வெற்றி கொள்வதற்காகவோ இந்த வளங்களை உங்களுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்காகவும், சர்வதேச மட்டத்தில் நீங்கள் புகழ் பெறுவதற்காகவுமே நாங்கள் இந்த வளங்களை பெற்றுக் கொடுக்கின்றோம். அறிவுதான் மிகப் பெரும் ஆயுதம். அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள்"– என்று தெரிவித்தார். (ற-5,7)

## ஆசிரியர் பற்றாக்குறை எனது ஊரிலும் உள்ளது

### அது தேசிய ரீதியில் தீர்வு காண வேண்டிய பிரச்சினை என்கின்றார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஒக். 15
"முக்கிய கட்டாய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை வடக்கில்மட்டும் இருக்கவில்லை. எனது ஊரிலும் இதே பிரச்சினை இருக்கின்றது. இதற்கு நாம் தேசிய ரீதியில் தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ.
வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.
வடக்கில் ஆசிரிய வளம் ஒழுங்காகப் பகிரப்படாமை தொடர்பில் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டது. இதன் போது யாழ். மாவட்டத்தில் ஆசிரிய வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண ரீதியில் கணித பாடத்திற்கு 64 வெற்றிடங்களும், விஞ்ஞான பாடத்திற்கு 137 வெற்றிடங்களும், ஆங்கில பாடத்திற்கு 760 வெற்றிடங்களுமாக 961 வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆளணி 15 ஆயி

22 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் கரிசனையின்றி திரும்பினார் மஹிந்த

### வடக்கு சிவில் சமூகத்தினர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக்.15
"வலி.வடக்கு மக்களின் மீள் குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற் போனோர் விவகாரம் உள்ளிட்ட தமிழ் மக்களின் அத்தியவசிய பிரச்சினைகள் தொடர்பில் கரிசனை காட்டாது, ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தனது வடக்குப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளார். தமிழ் மக்களின் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு அவர் எள்ளளவும் அக்கறை காட்டவில்லை" – இவ்வாறு தெரிவித்துள்ளனர் வடக்கு சிவில் சமூகத்தினர்.
வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, நேற்றுடன் தனது பய

22 ஆம் பக்கம் பார்க்க



போப்பாண்டவர் வருகை கேள்விக் குறியாகியுள்ளது

பக்கம் 12



நெடுந்தீவு மக்களின் வசதி கருதி ரெலிகொம் நிறுவனம் கம்பியில்லாத இணைய வசதியை (புறோட்பான்ட்) நேற்றுமுன்தினம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் நெடுந்தீவுக் கடற்படை பொறுப்பதிகாரி ஜெயவர்த்தன, ரெலிக்கொம் பிரதம பிராந்திய முகாமையாளர் ஏ.கிருபாகரன், பிராந்திய முகாமையாளர் சி.சிவானந்தன், உதவிப் பொது முகாமையாளர் என். நவநீதன் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ற-7)

## வீதி விளக்கு கட்டணத்தை மின்சார சபை ஏற்கட்டும்

### அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 15
வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளுக்கு பிரதேச சபைகள் கட்டணம் செலுத்தவில்லையாயின், நாட்டின் ஏனைய பகுதிகளில் மின்சார சபை குறித்த கட்டணச் செலவை ஏற்றிருப்பதைப் போல் இங்கு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.
கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டுள்ள வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அப்போது ஜனாதிபதி, அதற்கு யார் பொறுப்பு என்று கேட்ட போது, கரைச்சிப் பிரதேச சபை என்று பதிலளிக்கப்பட்டது. கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதிலளித்தார்.
குறித்த வீதி விளக்குகள் பிரதேச சபை மின்சார சபைக்கு கட்டணம் செலுத்தாமையால் ஒளிர

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குப் பயணத்தை முடித்து கொழும்பு சென்றார் மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக். 15
வடக்குக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, தீவகத்துக்கான நேற்றைய பயணத்துடன், வடக்குப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பினார்.
நெடுந்தீவுக்கு உலங்கு வானூர்தி மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை சென்றார். முதன் முதலாக ஜனாதிபதி ஒருவர் நேற்றே நெடுந்தீவுக்குச் சென்றுள்ளார். அங்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தை திறந்து வைத்த பின்னர், நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் மஹிந் தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தையும் அவர் திறந்து வைத்தார்.
நெடுந்தீவுப் பயணத்தை முடித்துக் கொண்டு மதியம் 12.30 மணியளவில், வேலணைக்கு வருகை தந்த ஜனாதிபதி, அங்கு வேலணை பிரதேசசெயலகத்தை திறந்து வைத்தார். அதன் பின்னர் வேலணை

22 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவனை கோடரியால் வெட்டி கொள்ளை ஒரு வருடம் கழித்து சந்தேக நபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக் 15
கடந்த வருடம் இணுவில் பகுதியில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர் ஒருவரை கோடரியால் வெட்டிக் கொலை செய்து, அந்த மாணவனின் பெற்றோருக்கும் வெட்டுக் காயங்களை ஏற்படுத்தி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கோடரி போன்ற ஆபத்தான ஆயுதங்களும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.
விசேட பொலிஸ் பிரிவின் குமாரசிங்க தலைமையிலான குழுவினரே யாழ்ப்பாணத்தில் வைத்து இருவரையும் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் சுழிபுரத்தைச் சேர்ந்த 37

22 ஆம் பக்கம் பார்க்க

## விபத்துக்களால் 717 பேர் சாவு

கொழும்பு, ஒக்.15
வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வாகன விபத்துக்களால் 717 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவிக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் விபத்துக்களால் 2,300 பேர் காயமடைந்ததுள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றது.(ற)

# குடும்ப அரசியலை ஒழிக்க அனைவரும் இணைய வேண்டும்

## அழைப்பு விடுக்கின்றார் பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர்

கொழும்பு, ஒக்.15
நாட்டுக்குள் நிலவும் குடும்ப அரசியலை இல்லாதொழிப்பதற்கு தமிழ் சிங்கள இனத்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது பொதுபல சேனா அமைப்பு. அந்த அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனாவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"நாட்டுக்குள் நிலவும் குடும்ப அரசியலை இல்லாதொழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இலங்கையை ஆட்சி செய்யும் கறுப்பு வெள்ளையர்களை விரட்டியடிக்கவும் இந்து சிங்கள இனத்தவர்கள் ஒன்றிணைய வேண்டும்.
அதேபோன்று, இந்த நாட்டின் மீதும் இனத்தின் மீதும் பற்றுள்ள தமிழ் சிங்கள இளைஞர், யுவதிகளை அரசியலில் அறிமுகப்படுத்த வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)


# 2 லட்சம் கப்பம் கோரி 2 வயதுக் குழந்தை கடத்தல்

## பொலிஸாரின் துரித முயற்சியால் 3 மணி நேரத்தில் அது மீட்பு
## வவுனியாவில் பரபரப்புச் சம்பவம்



வவுனியா, ஒக்.15
வவுனியா, பஸார் வீதியில் வைத்து இரண்டு வயதுக் குழந்தை ஒன்று கடத்தப்பட்டு, பணயத் தொகையாக 2 லட்சம் ரூபா கேட்கப்பட்டிருந்த நிலையில், விரைந்து செயற்பட்ட பொலிஸார், மூன்று மணி நேரத்துக்குள் குழந்தையை மீட்டெடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.
குழந்தையை மீட்கும் நடவடிக்கைக்குத் தலைமை வகித்த குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக இது குறித்துத் தெரிவிக்கையில்;
வவுனியா சமணன்குளம் பகுதியில் வசிக்கும் கேதீஸ்வரன் தர்சினி என்பவருக்குக் கட்டாரில் இருக்கும் அவரின் கணவனுடன் பணிபுரிபவர் எனக் கூறப்படும் அரசடி செட்டிகுளத்தைச் சேர்ந்த மரிய சூசை கயேந்தினி என்பவரால் தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டிருந்தது. "நான் வவுனியா நகருக்கு இன்று வருகின்றேன். நகைக் கடை ஒன்றில் சில நகை எடுக்க வேண்டியிருப்பதால் நீங்களும் வந்தால் நகைகளைப் பார்த்து எடுக்க முடியும்"- என்று அந்தப் பெண் கூறியுள்ளார்.
அதையடுத்து இருவரும் வவுனியா நகர் பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் சந்தித்துள்ளனர். அப்போது தர்சினி தனது 2வயதுக் குழந்தையையும் அழைத்து வந்துள்ளார். தர்சினி நகைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது திடீரென குழந்தை மாயமாகியுள்ளது. அந்தப் பெண்ணையும் காணவில்லை. தர்சினி உடனே அந்தப் பெண்ணுக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போது "குழந்தை என்னிடம் தான் உள்ளது. உனது கணவருக்கு கட்டார் நாட்டில் வைத்து நகைகள் மற்றும் பணம் கொடுத்துள்ளேன். எனவே இரண்டு இலட்சம் பணம் தந்தால் குழந்தையைத் தருகின்றேன்" என்று அவர் கூறியுள்ளார்.
பதற்றமடைந்த தர்சினி வவுனியா பொலிஸாருக்கு இது குறித்துத் தெரியப்படுத்தினார். உடனடியாகத் துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார் குழந்தையுடன் பெண் சென்ற ஓட்டோ மற்றும் வீதிகள் போன்ற தரவுகளை துரிதமாகப் பெற்று வவுனியா தாலிக்குளம் பகுதியில் அந்தப் பெண்ணை மடக்கிப் பிடித்தனர்.
மடக்கிப் பிடிக்கப்பட்ட பெண் தற்போது வவுனியா பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். கடத்தப்பட்ட குழந்தை மருத்துவப் பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது- என்று தெரிவித்தார். (ற-421)

## சனல்–4 இன் 'போர் தவிர்ப்பு வலயம்' ஆவணப் படம் விருதுக்கு பரிந்துரை




பிரிட்டன், ஒக்.15
பிரித்தானியாவின் சனல்-4 ஊடகத்தால் வெளியிடப்பட்ட 'போர் தவிர்ப்பு வலயம்' (நோ பயர் ஸோன்) என்னும் ஆவணப் படம் அமெரிக்க விருது ஒன்றுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
2014ஆம் ஆண்டுக்கான சர்வதேச 'எம்மி விருது' வழங்கும் விழாவில் நோபயர் ஸோன் ஆவணப்படம் விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 24ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில் வெற்றியாளர்கள் அறிவிக்கப் படுவர். இலங்கையின் இறுதிக் கட்ட போர் தொடர் பில் சனல்-4 ஊடகத்தின் கலம் மெக்ரேவால் தயாரிக்கப்பட்ட 'நோ பயர் ஸோன்' ஆவணப்படம் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அந்த ஆவணப்படத்தின் குற்றச்சாட்டுக்களை அரசு நிராகரித்துள்ளது. (ற)











வடக்குக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இறுதி நாளான நேற்று நெடுந்தீவுக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.





## விபத்துகள்

தெல்லிப்பழை

### மரத்தில் இருந்து விழுந்து சிறுவன் காயம்

மரத்தில் ஏறி விளாம்பழம் பிடுங்க முற்பட்ட சிறுவன் கீழே தவறி விழுந்து பாதிப்புக்கு உள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் தெல்லிப்பழையில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த தரம் 9 இல் கல்வி கற்கும், சாந்தகுமார் வத்சலன் (வயது-14) என்ற மாணவனே கை, கால், இடுப்புப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ளார். (ற-36)

இளவாலை

### லாண்ட்மாஸ்ரர் சில்லில் சிக்கி இளைஞர் காயம்

ஓடிக்கொண்டிருந்த லாண்ட்மாஸ்டரின் ஆசனப் பகுதியிலிருந்து குதித்தவரின் கால், அதன் பெட்டியின் சில்லுக்குள் சிக்கியதால், கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பி.ப.2 மணியளவில் இளவாலையில் நடந்துள்ளது. அதில் சென்யூட் இளவாலையைச் சேர்ந்த டான்சன் பயஸ் மிதுஜன் (வயது-19) என்பவரே காயமடைந்தவராவார். (ற-36)

### மோ.சைக்கிள் ஸ்ராண்ட் தடுக்கி விபத்து


மோட்டார் சைக்கிளின் 'ஸ்ரான்டை' சரியான முறையில் எடுத்துவிடாது பயணித்தவர், அது வீதியில் தடக்கியதால் தூக்கி வீசப்பட்டு காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. காயமடைந்தவர் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-36)

வவுனியா

### தீ விபத்தில் பொருள்கள் நாசம்

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வெல்டிங் கராஜ் ஒன்றில் நேற்று மதியம் 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மதிய உணவுக்குச் சென்று திரும்பிய உரிமையாளர், கடையில் தீ பரவியதைக் கண்டு பொலிஸாருக்கும் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினருக்கும் அறிவித்தார் என்றும், அதையடுத்து இடர்முகாமைத்துவ பிரிவினர், பொதுமக்களுடன் சேர்ந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தீ விபத்தால் 5 லட்சம் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிய வருகின்றது. (ற-402)





# வாழ்வின் எழுச்சியிலிருந்து தேசத்தின் எழுச்சிக்கு




## வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் 6 ஆம் கட்டம்

குடும்பத்தின் பொருளாதாரம் மற்றும் போஷாக்கை மேம்படுத்தும் இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

2014 ஒக்டோபர் 20ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.07 இற்கு வரும் சுபவேளையில் கிழக்குத் திசையை நோக்கி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் ஆரம்பமாவதுடன் அதனுடன் இணைந்ததாக நாடெங்கும் 14,022 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் காய்கறி விதைகள், காய்கறி, பழங்கள், தென்னங்கன்றுகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், நிரந்தர பெருந்தோட்ட பயிர்கள், மூலிகை செடிகளை நடுதல், கடற்றொழில் மற்றும் கால் நடை பிரிவுகள் உள்ளடங்கலாக இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் நிகழ்வுகள் நடைபெறும்.





**மேலதிக தகவல்களுக்கு**

பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் அல்லது குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களை நாடுங்கள்.

**தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்கு**

பிரதேச விவசாய ஆலோசகர்கள் அல்லது 1920 கமத்தொழில் நிவாரண உதவிகள் மற்றும் விவசாய ஆலோசனை சேவைப் பிரிவை அழையுங்கள்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

(சி/16972)

## மரண அறிவித்தல்



**திருமதி லலிதாதேவி கந்தையா**

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதாதேவி கந்தையா 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தையா- கனகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மருமகளும், கந்தையாவின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பிரதேச சபை-ஒட்டுசுட்டான்,முல்லைத்தீவு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான திருமதி நாகேஸ்வரி, கனகசுந்தரம் மற்றும் துரைசிங்கம், இராசசுந்தரம், திருமதி ராஜேஸ்வரி அரியநாயகம், திருமதி புஸ்பராணி நடராசா, காலஞ்சென்ற தர்மபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபிலன் (கனடா), கமலன் (கனடா), கலியுகன்(B.A.(Hons),PGDE, M.Phil, M.Ed(Rede) ஆசிரியர், யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாரும்,கலாறஞ்சினி (கனடா), றஜித்தா(கனடா), சிறீரங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், தவரூபன், தர்மிஷா, தர்நிஷா, பூமிஜா, பூமிகா, ஜெயந்தன், ஜெனார்த்தன், ஷிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2014)புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'லலிதவாசர்'
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (53205)(5.8.3)

தகவல்: கந்தையா (கணவர்)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி நாகேஸ்வரி நவரட்ணராஜா
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி அழகேஸ்வரி நாகரத்தினம்**

கொழும்பில் (30.09.2014) இறைபதமடைந்துவிட்டார்.
அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (சி/17001)(5.3.6)
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அகஸ்ரின் யேசுரட்ணம்
(நவஜீவா)
(ஓய்வுநிலை கட்டட திணைக்கள ஊழியர் - யாழ்ப்பாணம்)

மலர்வு 02 . 01 . 1946

உதிர்வு 15 . 10 . 2009



"மரணம் நித்திய மாளிகையின் தங்கத் திறவுகோல்"
- மில்டன் -

பாரினில் பூத்த புஷ்பம் பரமன் பாதம் சேர்ந்ததோ
கலைகளின் களஞ்சியம் காற்றாய் கரைந்ததோ
சிரிப்பின் சின்னம் - இன்று சிந்திக்க வைத்ததோ
பாசத்தின் பாலம் பட்சியாய் பறந்ததோ பகைமையை புதைக்கும் பந்தம்
பவ்வியமாய் பதுங்கியதோ மரியாதையில் மறையா மேகம்
மரணத்தால் மோட்சத்தில் மலர்ந்ததோ ஆண்டுகள் ஐந்து ஆனபோதும்
வேதனைகளும், மனக்காயங்களும் வந்தபோதும் உங்கள் நினைவுகளே
நான் வாழும் ஆலயம்.....

(53158)(7.6.3)

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

அன்புடன் மனைவி
யே.பத்மாவதி (தயா)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கந்தப்பிள்ளை இராசரத்தினம்**

மலர்வு 30 . 11 . 1954

உதிர்வு 03 . 10 . 2007



அன்போடும் பண்போடும் அவனிதனில் வந்துதித்த அப்பாவே
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை உங்கள் நினைவு
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால் மீள வந்து சேர்ந்திடப்பா! - நீங்கள்
இல்லாமல் போகவில்லை இறைவனோடு இணைந்துவிட்டீர்கள்.
என்றும் உங்கள்

(47271)(7.6.3)

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

# முன்பள்ளிச் சிறார்களுக்கு போட்டிகள்

வரணி பொது நூலகத்தில் இடம்பெற்றுவரும் தேசிய வாசிப்பு மாதநிகழ்வுகளைமுன்னிட்டுமுன்பள்ளிச்சிறார்களுக்கானபோட்டிகள் இன்று முற்பகல் 9 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம் பெறும் என்று நூலகர் பொ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். முன்பள்ளிச் சிறார்களுக்கான அபிநயப் பாடல், கதை கூறல், பேச்சு ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கூட்டம்

வரணி, இயற்றாலை மகளிர் விவகார அமைப்பினரின் பொதுக்கூட்டம் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வரணி இயற்றாலை கிராம அலுவலர் காரியால யத்தில் இடம் பெற உள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார். 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (வ-122)

◆◆◆

சாவகச்சேரி பொது நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையின் கூட்டம் இன்று பி.ப 3 மணிக்கு நூலக மண்ட பத்தில் இடம்பெறும். சாவகச்சேரி நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ள கூட்டத்தில் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (வ-9)

## பரிசளிப்பு

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல்1.30மணிக்குகல்லூரிஅரங்கில்இடம்பெறும். அதிபர் வ.நடராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர் இ.பரமேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-9)

◆◆◆

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தி யாலய கலையரங்கில் கல்லூரி அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசாவும், வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ.சிவானந்தராசாவும், அல்லைப்பிட்டி கிராம அலுவலர் சி.இரட்ணேஸ்வரனும் கலந்து கொள்வர். (வ-ரி)

## சிரமதானம்

வரணி மாசேரி கிராம அலுவலர் பிரிவில் சிரமதான மூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கை நாளை வியாழக் கிழமை இடம்பெறவுள்ளதாக பிரிவுக்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.நஜீபா அறிவித்துள்ளார். டெங்கு ஒழிப்பு நடவடிக் கை களின் ஒரு அம்சமாக இந்த சிரமதான நிகழ்வு இடம் பெறவுள்ளது என்றும் இதன் மூலம் ஒரு கி.மீ.தூரம் வரை யான பகுதி துப்புரவு செய்ய உத்தேசிக் கப்பட் டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அன்றைய தினம் பிற் பகல் 3 மணிக்கு மாசேரி கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் அரு கில் இதற்கென பொது மக்களை ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-122)

## சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 15 . 01 . 1932

மறைவு 01 . 10 . 2014



கடந்த 01.10.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது
அமரர் **செல்லையா செல்வரத்தினம்**

அவர்களின் சபிண்டீக்கரணம் நாளை (16.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

முத்துமாரி அம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (53221)(12.3)

செல்லையா.

## 16ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 01 - 1912

மண்ணின் மடியில் 30 - 09 - 2014



திருமதி
**தில்லைராஜேஸ்வரி இராமலிங்கம்**

பால்நிலா வடிவழகி
எங்கள் பாட்டி அம்மா
பக்கத்தில் இருந்தாலோ
பல கதைகள் பேசிடுவார்
வந்தோர் முகம் பார்த்து
நிலையறிந்து உதவிடுவார்
வாடுகிறோம் பாட்டியம்மா
உங்கள் வண்ணமுகம் காணாது
தேடித்தான் பார்த்தாலும்
பாட்டியின் அன்பிற்கு நிகருண்டோ
தெய்வத்தை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்மசாந்திக்காய்

(53214)(5.3)

2,செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Dr.ச.சோமசுந்தரம்
(மனப்புலி அண்ணா)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 15.09.2014 திங்கட்கிழமை
கனடாவில் சிவபதமடைந்த எமது
மகள் **சியாமளா கமலநாதன்** அவர்களின்
31 ஆம் நாள் நினைவாக இன்று
(15.10.2014) புதன்கிழமை சப்பச்சி
மாவடி விநாயகர் ஆலயத்தில் பூசை
யும் அதனைத் தொடர்ந்து மாகேஸ்வர
பூசையும் (அன்னதானம்) நடை
பெறவுள்ளது. அனைவரையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**அப்பா:** வி.இராசையா
**அம்மா:** இ.பூமாதேவி
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(47312)(3.6.4)

# பாடசாலைப் பருவத்திலேயே அ.அட்டை பெறுதல் அவசியம்

## ஆட்பதிவு திணைக்களத்தின் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15

அடையாள அட்டை என்பது மிகவும் அவசியமான ஒன்று. 16 வயதை அடைந்தாலே ஒருவர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர் ஆகின்றார். எனவே பாடசாலையில் படிக்கும் போதே மாணவர்களுக்கு அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அதிபர், ஆசிரியரின் கடமை. இவ்வாறு குறிப்பிட்டார் ஆட்பதிவுதிணைக்களத்தின் அதிகாரி ஆர்.எம்.எஸ் சரத்குமார.

நேற்று முன்தினம் ஆட்பதிவு திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு வருடமும் 6 லட்சம் பேர் அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கின்றனர். அவர்களில் படம் தெளிவில்லாமை, பின்பக்கச் செய்தி முறையாக இல்லாமை, இளமைத் தோற்றம் மாறுபட்டிருத்தல் போன்ற காரணங்ளுக்காக ஒரு லட்சம் பேர் விண்ணப்பிக்கின்றனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தொலைந்து போனால் அல்லது இல்லாமல் இருந்தால் திருமணச்சான்றிதழ் அல்லது குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் அல்லது கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தும் அடையாள அட்டையைப் பெற முடியும்.

அடையாள அட்டைகள் இல்லாதவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாகவே இருக்கின்றனர். கல்வி அறிவின்மை, அடையாள அட்டையால் கிடைக்கும் அனுகூலம் பற்றிய தெளிவின்மையே இதற்கான காரணங்களாக காணப்படுகின்றன என்ற அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-ரி)

### வாடகைக்கு

ஹைஏஸ் வான், ஓட்டோ, படிவாகனம், கூலர் வாகனம் என்பன இளவாலை சண்டிலிப்பாய் பகுதியில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
Kay Farm (pvt) Ltd
தொடர்பு: 078 880 3483/077 160 4059
(ƒ/15631) (4.6.3)

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய், பளை ஆகிய பிரதேசங்களில் புறொயிலர் இறைச்சிக்கோழி, ஊர்ப் பேட்டுக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
Kay Farm (pvt) Ltd
தொடர்பு: 078 880 3483, 021 492 4233
(53222) (4.6.3)

# ஸ்கந்தவரோதயாவில் சாரணர்கழக பொன் விழா



வலி.வடக்கு, ஒக். 15

சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் சாரணர் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு கல்லூரி அதிபர் சு. ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெற்றது.

சாரணர் கழக பொறுப்பாசிரியர் ம.சிவானந்தனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர் எஸ். சற்குணராஜா பிரதம விருந்தினராகவும், காங்கேசன்துறை முன்னாள் மாவட்ட ஆணையாளர் ந. இரவீந்திரன், ந. சிவகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ஆங்கில ஆசிரியரான தெய்வதவபாலன் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சாரணர் கழகத்தை இந்தக்கல்லூரியில் ஆரம்பித்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-86)

# மூக்கை பதம் பார்த்த கத்தி

தென்மராட்சி, ஒக்.15

பற்றையை வெட்டிச் சுத்தப்படுத்திய மகளின் கையிலிருந்த கத்தி, தவறுதலாக அருகில் நின்ற தாயின் முகத்தில் பட்டு தாயைக் காயப்படுதியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடியில் இடம்பெற்றது. தாயும் மகளும் இணைந்து வளவு துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த தாகவும் மகள் வெட்டிப் போடும் பற்றைக்களை தாய் அப்புறப்படுத்திக் கொண்டிருந்ததாகவும் அதன் போது தவறுதலாக கத்தி தாயின் மூக்கில் பட்டு காயப்படுத்தியது. காயமடைந்த தாயை சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதித்துள்ளார் மகள். (வ-9)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

54, நெடுங்குளம் வீதி,
கொழும்புத் துறையில் உள்ள
வீட்டுடன் 4 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 918 8141 (ƒ/15631) (4.6.3)

### மனிதவள முகாமையாளர்

மனிதவள முகாமைத்துவத்தில் முன் அனுபவமுள்ள, துறைசார் கல்வித்தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 20.10.2014

முகாமையாளர்,
154, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி17002) (12.3)

### ஸ்ரீ சக்தி ஜோதிடம்

உங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற எல்லா பிரச்சினைகளுக்கும் குறிப்பாக தொழிலில் நஷ்டம், குடும்பப் பிரச்சினை, வெளிநாடு தடை, திருமணத்தடை, வசியம், தோஷம் போன்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத்தீர்வு காண
தொடர்பு:075 683 9678
(53219) (4.6.3)

### உடனடி வேலைவாய்ப்பு

மேற்பார்வையாளர்

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவும் மேற்பார்வையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

மேற்குறிப்பிட்ட துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமையுள்ளவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை 20.10.2014ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

கிளீன்வெல் பிறைவேட் லிமிட்டெட்,
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி17003) (12.3)






விவசாய உள்ளீட்டுப் பொருள்களின் தன்னாதிக்கத்தை வலியுறுத்தும் வகையில் விதை தன்னாதிக்கப் பாதுகாப்பு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட, விவசாய உள்ளீட்டுப் பொருள்கள் மீது அரசு திணித்துவரும் அடாவடித்தனத்துக்கு எதிரான பேரணி கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில் இருந்து கொழும்பு வரை நடைபெற்றது. இதன்போது வவுனியா நகர்ப் பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இது. (த-421)

# பராமரிப்பு எதுவுமின்றி ஓமந்தை பொதுச்சந்தை

வவுனியா, ஒக்.15

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு உட்பட்ட ஓமந்தைப் பொதுச் சந்தைக் கட்டடம் நீண்டகாலமாகப் பராமரிப்பு இன்றி இருந்து வருகின்றது.



மேற்படி பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் தோட்டச் செய்கையாளர்களின் பொருள்களை விற்பனை செய்யும் வகையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் நீண்ட காலமாகச் சந்தைச் செயற்பாடுகள் இடம் பெறாமலும், புல் பூண்டு நிறைந்த பகுதியாகவும் காணப்படுகின்றது.

இந்தச் சந்தை தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

ஓமந்தைப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள சந்தை அந்தப் பகுதி மக்களின் நலன் கருதியே அமைக்கப்பட்டது.

இந்த நிலையில் 2011ஆம், 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் என்பன ஒப்பந்த அடிப்படையில் மேற்படி சந்தை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண் டன..

இவ்வாறான நிலையில் சந்தையை தொடர்ந்து நடத்துவதால் தமக்கு நட்டம் ஏற்படுவதாகக் கூறி இரண்டு திணைக்களங்களும் கைவிட்டுள்ளன.

இந்த நிலையில் இவர்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததுடன் துரிதமாக இந்தச் சந்தை செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-421)

# மாணவர்கள் கல்வியில் முன்னேறி நாட்டுக்குப் பெருமை சேர்க்கவேண்டும்

## வட்டக்கச்சியில் தெரிவித்தார் ஜனாதிபதி

கிளிநொச்சி, ஒக் 15

மாணவர்கள் கல்வியில் முன்னேறி நாட்டுக்குப் பெருமை சேர்க்கவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறந்துவைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்தக் கல்லூரிக்கு இரண்டாவது தடவையாக வந்திருக்கின்றேன். மாணவர்களுக்கு பால் கொடுக்கும் திட்டத்தை இந்தக் கல்லூரியில் ஆரம்பித்துத்தான் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கொடுக்க ஆரம்பித்தோம்.

ஏனெனில் இப்பிரதேசம் தென்னிலங்கையில் பிரசித்திப் பெற்றதாக இருந்தது.

நான் இந்தப் பிரதேசம் எதற்காக பிரசித்திப் பெற்றது என்று கூறியிருந்தால் நீங்கள் கரகோஷம் செய்திருக்கமாட்டீர்கள். இந்தப் பகுதிதான் அந்தக் காலத்தில் சித்திரவதை முகாமாக இருந்தது. அதன் காரணமாகத்தான் தென்னிலங்கையில் இந்தப் பகுதி பிரபல்யம் பெற்றிருந்தது.

இந்தப் பகுதியில் மகிந்தோதய விஞ்ஞான தொழில்நுட்ப கூடமொன்றை அமைத்துக் கொடுத்திருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



தென்னிலங்கையில் நானும் இதேபோன்று ஒரு கிராமத்தில் தான் பிறந்தேன். எமது பகு தியில் ஒரேயொரு பாடசாலை யில் தான் விஞ்ஞான ஆய்வுகூடம் இருந்தது. விஞ்ஞானப் பாடம் படிக்க வேண்டுமென்றால் குறிப்பிட்ட அந்தப் பாடசாலைக்குத் தான் செல்லவேண்டியிருந்தது.

1970 - 1980 ஆண்டுகளில் விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆய்வுகூடங்கள் இருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் 1000 விஞ்ஞான ஆய்வுகூடங்களை நாடு பூராகவும் உருவாக்கப் பாடுபட்டுவருகின்றோம். வடமாகாணத்துக்கு மட்டும் 96 விஞ்ஞான ஆய்வுகூடங்களை பெற்றுக் கொடுத்திருக்கின் றோம். நான் திறந்து வைத்திருக்கின்ற இரண் டாவது ஆய்வுகூடம் உங்கள் பாடசாலை ஆய்வுகூடமாகும்.

நாம் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். தாய் தந்தையர் எதிர்பார்ப்பதும் ஒன்றே ஒன்றுதான். மாணவர்கள் நன்றாகப் படிக்கவேண்டும் என்பது தான். கடந்த பல்கலைக்கழகத் தெரிவில் வடமாகாணப் பிள்ளைகள்தான் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தார்கள்.

நடைபெறும் பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்களின் விகிதம் குறைந்து வருகின்றது. இந்தப் பகுதியில் இருக்கும் ஆசிரியர், அதிபர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடமாகாணத்தின் அபிவிருத்திகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. 25 ஆண்டுகளுக்கு பிறகு யாழ்தேவி யாழ்ப்பாணம் பயணிக்கவுள்ளது. அபிவிருத்திகளை பெற்றுக்கொடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். எவராலும் கவர முடியாத கல்வியை மாணவர்கள் சிறப்பாக பெற்றுக் கொள்ளவேண்டும்-என்றார். (த-18)

IHCA
INTERNATIONAL HEALTH CARE ACADEMY

உங்களுக்கு CANADA வில் தொழில் மற்றும் குடியேறுவதற்கான ஒரு சுலபமான வழிமுறை. எங்கள் Academy யில் பராமரிப்பாளர் (Live -IN CAREGIVER PROGRAM திட்டத்தில் பதிவு செய்யுங்கள்

தகுதி: A/L Simple Pass
ஆங்கிலம்

இது பற்றி ஒரு இலவச கருத்தரங்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

18 th October 2014 at Hotel Nelly Star
2nd Cross Street Vavuniya Srilanka
(9 am onwards)

19 th October 2014 at Tilco Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna, Srilanka.
(9 am onwards)

முன் கூட்டிய பதிவுகளுக்கு உடனடியாக அழைக்கவும்

தொலைபேசி இலக்கம்:
077 192 3430/077 192 5 727

No.3, Charlemont Road, Colombo- 6
Tel: + 94112501416
www.ihcasrilanka.com
email ihcacolombo@gmail.com
(சி/16969)(4,3,6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி 2014 இந்தோனேசியா பாலி நகரில் வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்ட யாழ்/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன்



தனராஜ் சுந்தர்பவன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

Congratulation
சபேஸ் போட்டோ
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
(47901)(4.3.6)

யா/புனித யோண் பொஸ்கோவின்
அதிபர், ஆசிரியர்
கௌரவிப்பு விழா - 2014

முன்னைய ஆண்டுகளை விட உயர்சித்திப் பெறுபேற்றினைப் பெற்று 140 பேரை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைத்து வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டிக் கொண்டமையை முன்னிட்டும், அதிபருக்கான நல்லதிபர் விருதான

பிரதீபா பிரபா

விருது கிடைத்தமையை ஒட்டியும் பாராட்டு விழாவும், ஆசிரியர் தின விழாவும் இன்று பாடசாலையில் இடம்பெறவுள்ளன. இவ் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

இடம்: பாடசாலை பிரதான மண்டபம்
காலம்: இன்று (15.10.2014) புதன்கிழமை
நேரம்: காலை 9.30

Welcome
(C17004)(12.3.6)

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC)
பெற்றோர் மற்றும் மாணவச் செல்வங்கள்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை 2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி ரா.பிரணவி 168 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். அவரைக் கற்பித்த ஆசிரியை திருமதி ஜெ.சிவரூபி அவர்களுடன் பாடசாலை அதிபர் சோ.புஸ்பாகரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி/15193) (4.3.6) பாராட்டி வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்

மண்டபம் வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபம், (இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) சைவசமய நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகளுக்கும் நிபந்தனைகளுடன் வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு: இரா.செல்வவடிவேல்,
செயலாளர், சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.
021 222 7678
(53227)
(12.3.6)

காணி விற்பனைக்கு

தென்மராட்சி தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கொல்வில்லைப் பெருமாளம் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 10 உடைய காணி விற்பனைக்குண்டு.

(51964)
(12.3.6)
தொடர்பு: 077 603 4341

# பஸ்களை கையளித்தார் மஹிந்த



யாழ்ப்பாணம், ஒக்.15
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாணத்தில் உள்ள டிப்போக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றவெளியில் வைத்து சம்பந்தப்பட்ட டிப்போக்களுக்கு இந்த புதிய பஸ்களைக் கையளித்தார். வடக்கில் உள்ள ஒவ்வொரு டிப்போக்களுக்கும் பத்து பஸ்வண்டிகள் வீதம் வழங்கப்பட்டன.
அரசால் வழங்கப்பட்ட இந்த பஸ்கள் கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களில் உள்ள டிப்போக்களுக்கு எடுத்து வரப்பட்டிருந்தன.
இந்த பஸ்களில் சில சம்பந்தப்பட்ட டிப்போக்களினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இந்த புதிய பஸ்களின் முன்பக்கத்தில் உள்ள பெயர்ப் பலகையில் இடங்களின் பெயர்கள் டிஜிற்றல் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (த-17)

# கமலாசனி வித்தியாலயத்தின் மாணவருக்குக் குடிதண்ணீர்

தென்மராட்சி.ஒக்.15
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் மாணவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிய குடிதண்ணீர்ப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.
வித்தியாலய சமூகம் விடுத்த வேண்டுகோளையடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வழங்கிய நிதியுதவியுடன் பாடசாலை வளாகத்தில் 63 அடி ஆழத்துக்குக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழாய்க் கிணறு எதிர்வரும் 21 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.
ஏற்கனவே வித்தியாலய வளாகத்தில் தண்ணீர் தாங்கியுடன் குழாய்க்கிணறு அமைத்து வழங்கப்பட்டதாகவும், அந்தக் குழாய்க்கிணறு தற்போது பாவிக்க முடியாத நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
வித்தியாலய மாணவர்கள் தடிது தேவைகளுக்கு வீடுகளிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதாகவும், பாடசாலை தேவைக்கு அருகில் உள்ள குடியிருப்புக்களில் பெற்றுப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் 30 மில்லியன் ரூபா செலவில் சந்தைக் கட்டடத் தொகுதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்படவுள்ளது. அதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளும், சாவகச்சேரி நகரசபைத் தலைவர், செயலாளர் ஆகியோரும் கட்டடங்கள் அமையவுள்ள இடங்களைப் பார்வையிட்டனர். (த-9)

## தபால்மா அதிபருக்கு வந்தது சோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.15
உலகதபால்தினநிகழ்வில்பங்கு கொள்வதற்காகக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த தபால்மா அதிபர் உட்பட சுமார் 200 பேரின் பயணம் அன்றைய தினம் இடம்பெற்ற ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாகப் பெரும்சவாலுக்கு உள்ளாகியது.
தபால் திணைக்களம் தனது சரித்திரத்தில் முதன்முதலாக உலக தபால் தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தது.
இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பில் இருந்து சுமார் 200 பேர் வரையான திணைக்கள உயர் அதிகாரிகள் கொழும்பு ரயிலில் இரண்டு பெட்டிகளை ஒதுக்கீடு செய்து அதில்பிரயாணம்செய்து யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.
ஒக்ரோபர் 9 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் இவர்கள் பங்குபற்றிய பின்பு தாம் திட்டமிட்டபடி அன்றையதினம் திரும்பிச்செல்ல ஆயத்தமானவேளை ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாகக் குறித்த பயணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.
இதன் பின்பு இவர்கள் நான்கு தனியார் பஸ்களை வாடகைக்கு அமர்த்தித் தமது பயணத்தை தொடர்ந்ததாகக் கூறப்பட்டது. (த-122)

# மருந்துகள் இல்லை என்று கைவிரிக்கிறார் மருத்துவர்

### தனியார் மருந்தகத்தில் வாங்குமாறு பணிப்பு

பளை, ஒக்.15
பளைப் பிரதேச மருத்துவமனையில் மருந்துகள் முடிவடைந்துவிட்டதால் பிரதேச நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்குச் சாவகச்சேரி மருத்துவமனைக்கு வருகின்றனர்.
தற்போது பரவிவரும் வைரஸ் காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காகச் சாவகச்சேரி மருத்துவமனைக்கு வருகை தந்து சிகிச்சை பெறுகின்றனர்.
பளையிலிருந்து வந்த நோயாளர்களுடன் கலந்துரையாடிய போது, பளை மருத்துவமனைக்குச் சென்று மணிக் கணக்கில் காத்திருந்து மருத்துவரிடம் சிகிச்சை பெறச் சென்றால் மருந்துகள் முடிந்துவிட்டன. பளை நகர்ப் பகுதியில் உள்ள தனியார் மருந்தகத்தில் வாங்குமாறு மருந்துக்கான சிட்டை எழுதி வழங்குகிறார்.
ஆதாரமருத்துவமனையில் சிகிச்சைபெறக்காலை8மணிக்குச் சென்று வெளிநோயாளர் பிரிவில் தங்கியிருந்தாலும் 25 இற்கும் மேல் நோயாளர்கள் சேர்ந்த பின்னரே மருத்துவர் அங்கு வந்து சேர்கின்றார்.
இதனால் நாங்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறோம் எனத் தெரிவித்தனர்.
இது குறித்து மருத்துவரிடம் கேள்வி கேட்போரை விடுதியில் நிற்குமாறு கூறி கிளிநொச்சி மருத்துவ மனைக்கு அம்புலன்ஸில் அனுப்பி விடுகிறார். இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் உட்பட உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவித பயனும் கிடைக்கவில்லையெனத் தெரிவித்தனர். (த-9)

# தமிழ்க் கூட்டமைப்பின் கோப்பாய்க் கிளை தெரிவை ஒருபோதும் ஏற்கவே முடியாது

அச்சுவேலி,ஒக்.15
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கோப்பாய் பிரதேச கிளைத் தெரிவுதமிழரசுக்கட்சியையோ, கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள ஏனைய கட்சிகளையோ அழைக்காமல் அறிவிக்காமல் ஒரு கட்சியினால் நடத்தப்பட்டது. இதனை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது எனக் கோப்பாய் பிரதேச தமிழரசுக் கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
கோப்பாய்ப்பிரதேசதமிழ்த்தேசியக்கூட்டமைப்புகூட்டம்மற்றும் நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக இலங்கைத்தமிழரசுக்கட்சியின் கோப்பாய் பிரதேச கிளையின் செயலாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அ.பரஞ்சோதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த 4ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான கோப்பாய் பிரதேச கிளைத் தெரிவுகள் செய்யப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்து வியப்படைந்தேன். ஏனெனில் பல கட்சிகளின் கூட்டமைப்பாக நாம் செயற்படுவதாகத் தேர்தல் ஆணையகத்தில் ஏற்கனவே நாம் பதிவு செய்துள்ளோம்.
அதில்தமிழரசுக்கட்சியினராகிய நாம்பிரதான அங்கம் வகிக்கின்றோம். அப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதேசக் கிளை ஒன்றை அமைப்பதானால் அதில் தமிழரசுக் கட்சியின் பிரசன்னம் அவசியம் என்பது கூட்டமைப்பின் சகலருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால் தமிழரசுக்கட்சியின் கோப்பாய்த் தொகுதிச் செயலர் என்ற முறையில் மேற்படி கிளை அமைக்கும் போது கூட்டமைப்புத் தலைமையினால் எனக்கு அறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.
இது சம்பந்தமாகக் கூட்டமைப்பு தலைமையோடுகலந்தலோசித்த போது, பிரதேச மட்டத்தில் அப்படி ஒரு கிளை அமைப்பதாகத் தீர்மானிக்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்கள். அத்துடன் கூட்டமைப்பில் உள்ள எந்தக் கட்சியையும் அழைக்காமல், கூட்டமைப்பின் தலைமையின் தீர்மானம் இன்றியே ஒரு கட்சியினால் கூட்டப்பட்ட இந்தக் கூட்டம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க அல்ல என்பதை கோப்பாய்ப் பிரதேச கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (த-11)

# காக்கைதீவில் திண்மக் கழிவு கொட்டுவதற்கு கடும் எதிர்ப்பு

### பிரதேச சபை உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானம்

வலிதென்மேற்கு, ஒக். 15
பொதுமக்களுக்கு மட்டுமல்ல வயல் நிலங்களுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்தையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும் வகையில் காக்கைதீவுப் பகுதியில் திண்மக் கழிவுகளையும்மலக்கழிவுகளையும்கொட்டுவதற்குக் கடும் ஆட் சேபனை தெரிவித்துள்ளவலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் இதற்கான தீர்மானத்தை ஏகமனதாகநிறைவேற்றியதுடன் இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குஅறிவிக்குமாறுதவிசாளரைக் கோரியுள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் காக்கைதீவுப் பகுதியில் திண்மக் கழிவுகளையும் மலக் கழிவுகளையும் சுகாதார விதிமுறைகளுக்கமையமக்களுக்கு இடையூறு ஏற்படாத முறையில் அகற்றுவதுதொடர்பாக மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
திண்மக் கழிவுகளையும் மலக் கழிவுகளையும் அகற்றுவது சம்பந்தமாக நல்லூர் பிரதேச சபைக்கும் யாழ்.மாநகர சபைக்கும் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் நிரந்தரத் தீர்வை எட்டும் நோக்குடன் நடைபெற்ற இந்தக் கலந்துலையாடலில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.ஜக்சீல், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பி.வசந்தகுமார், வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவகுமார்,உள்ளூராட்சிஅமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ஜோ.லோறன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இந்தக் கலந்துரையாடலின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்தும் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குஅறிவிக்கப்பட்டிருந்தது.
இந்தத் தீர்மானம் குறித்து வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்த உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.
காக்கைதீவுப் பகுதியில் சபையின் அனுமதியின்றி தினசரி கொட்டப்பட்டுவரும் திண்மக் கழிவுகளினாலும் மலக் கழிவுகளினாலும் அந்தப் பகுதியை அண்டியுள்ளகிராமங்களில்வசிக்கும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். கிணற்று நீர் மாசடைந்து வருவதினால் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.
திண்மக் கழிவுகளை எரியூட்டுவதினால் ஏற்படும் புகை மண்டலத்தினாலும் கழிவுப் பொருள்களிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்தினாலும் இலையான் தொல்லையினாலும் மக்கள் நிம்மதி இழந்துள்ளார்கள்.
இந்தப் பகுதியிலுள்ள வயல் நிலங்கள் காற்றோடு அள்ளப்பட்டுவரும் பொலித்தீன் பைகளினால் நிறைந்து காணப்படுவதினால் காலபோக நெற்செய்கையில்துடங்கல்ஏற்படுகின்றது.
மேய்ச்சல் தரைகள் மாசடைவதினால் கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன.
இவ்வாறான பல தீங்குகள் நாளாந்தம் ஏற்படுவதனால் எக்காரணம் கொண்டும் திண்மக் கழிவுகளையோ மலக்கழிவுகளையோ கொட்டுவதற்கு அனுமதிக்க முடியாதென்றும் இது தொடர்பாக மக்களின் உதவியுடன் போராட்டம் நடந்துவோம் என்றும் சூழ் உரைத்தனர். இதையடுத்து இதற்கான தீர்மானமும்ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-115)

# கிளிநொச்சி வீதி மின் விளக்குகள் மஹிந்தவால் மீண்டும் ஒளிர்ந்தன

## கடந்த 10 மாதங்களின் பின்னர்

கிளிநொச்சி, ஒக் 15

கிளிநொச்சி நகர் வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் நேற்று முன்தினம் இருள் சூழும் வேளை திடீரென ஒளிரத் தொடங்கின.

கடந்த 10 மாதங்களாக ஒளிராதிருந்த கிளிநொச்சி நகர் ஏ-9 வீதியில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் நேற்று முன்தினம் மாலையாகியதும் திடீரென ஒளிர்ந்தமையால் மக்கள் பெரும் வியப்படைந்தனர்.

ஏ-9 வீதி புனரமைப்புடன் கிளிநொச்சி நகரில் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் வரை வீதியின் நடுவே உயர் ரக வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுச் சில மாதங்கள் ஒளிர விடப்பட்டன.

பின்னர் கரைச்சிப் பிரதேச சபையால் வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் 12 இலட்சம் ரூபாவுக்கும் மேல் செலுத்தப்படவில்லை என்று கூறி மேற்படி வீதி விளக்குகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதனால் கடந்த 10 மாதங்களாக மேற்படி வீதி விளக்குகள் ஒளிராமல் கிளிநொச்சி நகர் இரவில் இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மஹிந்த கிளிநொச்சிக்கு வந்து சென்றதை அடுத்து மறுநாள் திங்கட்கிழமை மாலை மேற்படி வீதி விளக்குகள் ஒளிர்ந்தன.



மேற்படி வீதி விளக்குகள் ஒளிர்வது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நா.வை.குகராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

கிளிநொச்சி நகரில் மின் விளக்குகள் திடீரென ஒளிர்வதைத் தானும் கண்ணுற்றதாகவும், மேற்படி மின் விளக்குகள் ஒளிர்வது குறித்து தமக்கு ஒன்றும் தெரியாது எனவும், 12 லட்சம் ரூபா வரை மின்சார சபைக்குப் பணம் செலுத்தப்படவேண்டியிருப்பதாகவும். மேற்படி வீதி விளக்குகளுக்கான மின்சாரச் செலவு அதிகமாகவுள்ளமையால் அந்தப் பணத்தை மக்களின் வேறு அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார். (த-426)

---

# சில கிராமங்கள் அபிவிருத்தியில் பின் தங்கிய நிலையில்



வவுனியா, ஒக் 15

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சில கிராமங்களில் அபிவிருத்திப் பணிகள் பின்தங்கிய நிலையில் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மகாரம்பக்குளம், காத்தார் சின்னக்குளம் சமயபுரம், கணேசபுரம், இராசேந்திரங்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், சுந்தரபுரம், தாலிக்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதியில் உள்ள வீதிகள், கால்வாய்கள் பல புனரமைக்கப்படாமையால் மழை காலத்தில் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இந்தப் பகுதியில் மின் விளக்குகள் இல்லாமையால் இரவு வேளையில் பயணிக்கும் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வீதி விபத்து, திருட்டுச் சம்பவங்களுக்கு மின் விளக்குகள் இன்மை வாய்ப்பாக அமைவதாகவும், வறியவர்கள் பலர் இந்தப் பிரதேசத்தில் நிவாரணங்கள் இன்றி வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிக்குரிய வீதிகள், கால்வாய்கள் புனரமைக்கப்படுவதுடன் விவசாயத்துக்குரிய உதவிகளையும், வறிய மக்களுக்குரிய நிவாரண உதவியை அல்லது சுய தொழில்களை வழங்குமாறும், இரவுவேளை மின் விளக்குகள் ஒளிர செய்யு மாறும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

---



அக்கராயன் வைத்தியசாலையில் அமெரிக்க அரசின் நிதி உதவியுடன் அமைக் கப்பட்ட விடுதிகளைத் திறந்து வைத்துவிட்டு ஜனாதிபதி சென்ற பின்னர் அங்கு ஜனாதிபதியை வரவேற்பதற்காகக் கட்டியிருந்த வாழைக் குலை இது. இதுதான் ஏழைகளின் அப்பிள் என்று சிறுவயதில் படித்தது ஞாப கத்துக்கு வருகிறதல்லவா. (த- 21)

---

# மன்னார் பொது மைதானத்தில் அடிப்படை வசதிகள் இல்லை

## இடிந்து விழும் நிலையில் நீர்த்தாங்கி

மன்னார், ஒக் 15

மன்னார் பொது விளையாட்டு மைதானம் கடந்த பல வருடங்களாக எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றிக் காணப்படுவதாகவும், இதனால் குறித்த விளை யாட்டு மைதானத்தில் இடம் பெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்குச் செல்லும் வீரர்களும், பயிற்சிகளுக்காகச் செல்லும் வீரர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரில் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த விளையாட்டு மைதானமாக மன்னார் பொது விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த மைதானத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை. குறிப்பாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை, மலசல கூட பிரச்சினை என்பன தீர்க்கப்படவில்லை.

குறித்த மைதானத்தில் இடம் பெறுகின்ற விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்தும், ஏனைய கிராமங்களில் இருந்தும் வரும் விளையாட்டு வீர வீராங்கனைகள் விளையாட்டு மைதானத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்றே தமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

அது மட்டுமின்றி குறித்த மைதானத்துக்கு வரும் வீராங்கனைகள் ஆடை மாற்றுவதற்கான வசதிகள் கூட இன்றிப் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், மைதானத்தில் மறைவான இடங்களுக்குச் சென்றே ஆடை மாற்ற வேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் பொது விளையாட்டு மைதானத்தினுள் பழைமை வாய்ந்த அதி உயரம் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று காணப்படுகின்றது. குறித்த நீர்த்தாங்கி சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இந்த நீர்த்தாங்கியை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக மன்னார் நகர சபை பல மாதங்களாகத் தெரிவித்து வருகின்றபோதும் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை.

எனவே குறித்த மைதானத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமை தொடர்பில் மன்னார் நகர சபை உரிய கவனம் செலுத்திப் தேவைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட வீரர்கள் தெரிவித்துள்ளனர். (த-56)



---

# பெயர்ப்பலகைக்கு கழிவு ஒயில்; விசமிகள் சிலர் கைவரிசை



மன்னார், ஒக் 15

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள பேசாலைக் கிராமத்தை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களினால் கழிவு ஒயில் பூசப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து பேசாலைக்குச் செல்லும் வீதியில் அந்தக் கிராமத்தின் எல்லையை அடையாளப்படுத்தும் வகையில் சிமெந்தினால் குறித்த பெயர்ப் பலகை அமைக்கப்பட்டு வீதியோரத்தில் நடப்பட்டுள்ளது. அதில் பேசாலை என மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே குறித்த பெயர்ப்பலகை கழிவு ஒயில் பூசப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பேசாலை கிராம முக்கியஸ்தர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (த-56)

---

# போதைப் பொருள் பாவனையால் வடபகுதியில் பலர் பாதிப்பு

வவுனியா, ஒக் 15

வடபகுதியில் அதிகரிக்கும் போதைப் பொருள் பாவனையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி. இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போது பெருமளவான கஞ்சா, ஹெரோயின் போன்ற வற்றை மீட்டெடுத்தோம்.

இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் கஞ்சா, ஹெரோயின், கள்ளச் சாராயம், கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மது விற்பனை, வயது குறைந்தவர்களுக்கான விற்பனை உட்பட பல்வேறு போதைப் பொருள் குற்றங்களுக்காக 139 வழக்குகளை தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த ஜீலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்க ளில் கஞ்சா வைத்திருந்த 24 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து மூன்று கிலோ 35 கிராம் கஞ்சாவை மீட்டெடுத்தோம்.

இதேவேளை ஹெரோயின் வைத்திருந்த 10 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் வைத்திருந்த 1065 மில்லி கிராம் ஹெரோயினையும் மீட்டெடுத்தோம். பொலிஸாரின் ஒத்துழைப்பும் எமக்கு கிடைத்தது.

அந்த வகையில் அண்மைக் கால மாக போதைப் பொருள் பாவனை வடமாகா ணத்தில் அதிகரித்து இருக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்த சகல தரப்பினரும் முன் வர வேண்டும்- என்றார். (த-402)

## இ.தொ.கா - ஐ.தே.க. இணையுமாம்

*- வசந்த பண்டார*

கொழும்பு, ஒக்.15
இந்தியாவின் அழுத்தம் காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐ.தே.கட்சியில் இணையும் அது போல் முஸ்லிம் காங்கிரஸ், த.தே. கூட்டமைப்பு இணக்கப்பாட்டுடன் இணையும் என்று தெரிவித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்க பொதுச் செயலாளர் வசந்த பண்டார.

"மஹிந்த ராஜபக்ஷவிற்கு இம்முறை இலகுவாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்ட முடியாது. இந்தமுறை சர்வதேசமும் ஜனாதிபதியை தேர்தலில் தோற்கடிக்க முயற்சி செய்து வருகின்றது. சீனாவுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த அரசைக் கவிழ்க்க வேண்டிய தேவையுள்ளது. அமெரிக்காவும் மற்றும் சர்வதேச நாடுகளும் இந்த அரசை தோற் கடிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.



இந்த நிலையில் 50 சதவீத வாக்குகளை பெற முடியாத நிலை ஜனாதிபதி தேர்தலில் ஏற்படலாம் அப்போது இ.தொ.கா, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் பேரம் பேசும் சக்தியாக மாறலாம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்கு அலுவல்கள் பிரதி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், அஸ்கிரிய மஹாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரரையும், சியாமா உபாலி மஹா நிகாயே மல்வத்தை பீடாதிபதி திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரையும் நேற்றுச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

## சமூக வலைத்தளங்களை முடக்கும் முயற்சியில் அரசு

### குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.15
சமூக ஊடக வலையமைப்புக்களை முடக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று ஜே.வி.பி குற்றஞ்சுமத்தியுள்ளது. அரசு, சமூக ஊடக வலையமைப்புக்களுக்கு அஞ்சி செயற்பட்டு வருகின்றது என்றும் -அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:
"பேஸ்புக் போன்ற சமூக வலையமைப்புக்களை, மக்கள் பயன்படுத்த தடை செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் இவ்வாறு அரசு நடந்து கொள்கின்றது.

புதிய ஊடகத்தின் ஊடாக மக்கள் தகவல்களை பெற்றுக் கொள்வதை அரசால் தடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே ஏதேனும் ஒரு வழியில் சமூக ஊடக வலையமைப்புக்களின் நடவடிக்கைகளை தடுக்க அரசு முயற்சித்து வருகின்றது. அண்மையில் பண்டுவஸ்நுவர தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற ஜனாதிபதி சமூக வலையமைப்புக்களின் ஊடாக பாடசாலை மாணவர்களை சில அரசியல்வாதிகள் பிழையாக வழிநடத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சுமத்தியிருந்தார். ஆயினும் அரசு அரசியல் தேவைகளுக்காக பல சந்தர்ப்பங்களில் ஆயிரக் கணக்கான பாடசாலை மாணவ, மாணவியரை பயன்படுத்திக் கொண்டுள்ளது. ஊவா மாகாண சபைத் தேர்தலின் போதும் பாடசாலை மாணவ, மாணவியர் பயன்படுத்தப்பட்டனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அடக்குமுறை அரசியலை புறக்கணிக்க வேண்டும்

## மக்களைக் கோருகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஒக்.15
அடக்குமுறை அரசியலை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.

அந்தக் கட்சியின் காலி மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஆட்சியாளர் தற்போதே வன்முறைகளை ஆரம்பித்துள்ளார். அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடு



முழுவதிலும் இவ்வாறான சம்பவங்கள் வியாபிக்கத் தொடங்கியுள்ளன. இந்த விடயம் குறித்து மக்கள் தெளிவுடன் இருக்க வேண்டும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அடக்குமுறை அரசியவாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும். அவர்களுக்கு எந்த வித ஒத்துழைப்புக்களையும் மக்கள் வழங்கக் கூடாது"- என்று அவர் தெரிவித் துள்ளார். (ற)

## பெண்களுக்கு தனியான வங்கிச் சேவை

கொழும்பு, ஒக்.15
பெண்களுக்குத் தனியானதொரு வங்கிச் சேவையொன்று அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் டீ.பீ. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் யாபஹுவை தொகுதியில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிரணி பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"அடுத்த வருடம் ஜனவரி தொடக்கம் பெண்களுக்கென தனியான வங்கிச் சேவையொன்று அறிமுகப்படுத்தப்படும். இது முற்று முழுதாக பெண்களைக் கொண்டு பெண்களுக்காக மட்டுமே இயங்கும் வங்கிச் சேவையாக இருக்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்படும் இந்த வங்கிச் சேவை பெண்களின் சேமிப்பு மற்றும் சுயதொழில் முன்னேற்றம் போன்றவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## பட்டினி நிலையில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, ஒக்.15
பட்டினி நிலையில் இலங்கை இன்னும் அபாய கட்டத்திலேயே இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் கடந்த வருடத்தில் உலகளாவிய ரீதியில் 43 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த வருடத்தில் 39வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. (ற)

## அரசுடைய விருப்பத்துக்கு ஏற்றவாறே அரசமைப்பு

### குற்றஞ்சாட்டுகின்றார் சஜித்

கொழும்பு, ஒக்.15
தற்போதைய அரசு தனது விருப்பத்துக்கு ஏற்றவாறு அரசமைப்பைச் செயற்படுத்துகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ.



லுனுகம்வெஹேர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போதைய ஜனாதிபதிக்கு மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியுமா? அல்லது முடியாதா? அது அரசமைப்புக்கு ஏற்புடையதா? சட்டத்துக்கு உட்பட்டதா? என்பது தொடர்பிலானவிவாதங்களும் சூடுபிடித்துள்ளன.

ஆனால் இன்று எமது நாட்டில் அரசமைப்பு வெளிப்படையாகவே மீறப்படுகின்றது. நாட்டில் சட்டம் செயற்படுவதில்லை. இன்று நாட்டில் காட்டுத் தர்பாரே காணப்படுகின்றது. தமது தேவைக்கு ஏற்றவாறு அரசமைப்பு மற்றும் சட்டத்தை செயற்படுத்தும் காலப் பகுதியிலேயே நாம் வாழ்கின்றோம்.

நாட்டில் அரசமைப்பு செயற்படவில்லை என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்பவே அரசமைப்பு செயற்படுத்தப்படுகின்றது. அரசமைப்பில் காணப்படும் விடயங்களை குப்பையில் போட்டு, தமக்கு நன்மை ஏற்படும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது."- என்று தெரிவித்துள்ளார்.(ற)

## 1, 10 சத நாணயக் குற்றிகளுக்கு மவுசு!

கொழும்பு, ஒக்.15
இலங்கையில் புழக்கத்தில் இருந்த ஒரு சதம் மற்றும் 10 சதம் நாணயக் குற்றிகளை அதிக விலைகொடுத்து கொள்வனவு செய்துவரும் வெளிநாட்டு நபர் ஒருவர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு புறம் தென்னை மரத்தையும் மறுபுறம் ராணி விக்டோரியாவின் புகைப்படத்தையும் கொண்ட இந்த நாணயங்களில், ஒரு சதத்துக்கு மூவாயிரம் ரூபாவும் 10 சத்துக்கு ஆறாயிரம் ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. வெளிநாடொன்றிலிருந்து வந்து இலங்கையில் நங்கூரமிட்டுள்ள கப்பலொன்றைச் சேர்ந்த வெளிநாட்டவர் ஒருவரே, இலங்கையின் பழைமை வாய்ந்த இந்த நாணயங்களை விலைகொடுத்து வாங்கி



வருகிறாராம். இவர், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்த நாணயக் குற்றிகளைச் சேகரித்து வருவதாகவும் இவர் தொடர்பில் பொலிஸார் தகவல் திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# 13க்கு அப்பால் செல்லாது ஐ.தே.க.

## ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்காலத்தில் ஆட்சியமைத்தால் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் 13இற்கு அப்பால் ஒருபோதும் செல்லாது - இவ்வாறு அறிவித்திருக்கிறார் அந்தக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க.

'ஜனசெத பெரமுன'வின் தலைவர் வண. பத்தரமுல்ல சீலரத்ன தேரரை தனது அலுவலகத்தில் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்தார்.

இதன்பின்னர் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள், மத தலைமைகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு நடத்தி வருகிறது. பொது வேட்பாளராக ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒருவரே களமிறங்குவார்.

எதிர்காலத்தில் அமையும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்யும்.

நீதித் துறை, பொலிஸ், லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, தேர்தல் ஆணையம், பொதுச் சேவை ஆணைக்குழு என்பவற்றின் சுதந்திரமான செயற்பாடுகளை உறுதி செய்யும். இதன் மூலம் நாட்டில் இடம்பெறும் மோசடிகள், ஊழல்கள் மற்றும் லஞ்சம் என்பவை முடிவுக்கு கொண்டு வரப்படும். அத்துடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள், விவசாயம், சுகாதாரம், கல்வி என்பன நாட்டின் அனைத்து மக்களையும் சென்றடையும் வழிவகை செய்யப்படும். அத்துடன் அனைத்து நாடுகளும் பொதுவான - ஏற்றுக் கொள்ளக்கூடிய - வெளிநாட்டுக் கொள்கை பின்பற்றப்படும் - என்றார். (ற)











கொலிவூட்டின் முன்னணி கதாநாயகர்களான விஷால், ஆர்யா, கார்த்தி, ஜீவா, ஜெயம் ரவி ஆகியோர் ஒரே படத்தில் சேர்ந்து நடிக்கப் போகிறார்கள். அதுவும் சம்பளம் வாங்காமல் நடிக்கப் போகிறார்களாம்.

இவர்கள் நடிக்கும் இந்தப் படத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தை தென்னிந்திய நடிகர் சங்கத்திற்காக புதிய கட்டடம் அமைப்பதற்கு வழங்கவுள்ளனர்.

இது பற்றி விஷால் கூறுகையில், ஆர்யா, கார்த்தி, ஜீவா, ரவி மற்றும் நான் எல்லோரும் இணைந்து ஒரே படத்தில் சம்பளம் வாங்காமல் நடிக்க முடிவு செய்துள்ளோம். இதன் மூலம் கிடைக்கும் தொகையை நடிகர் சங்க கட்டடம் கட்ட வழங்க முடிவு செய்துள்ளோம். நடிகர் சங்கத்திற்கு நிரந்தரமான கட்டடம் கட்டுவதற்கு பணம் தேவைப்படுகிறது. அதனால் சமீபத்தில் சங்கத்தின் பொதுக் குழு கூட்டத்தின்போது சந்தித்துகொண்ட நாங்கள் இது போன்று படம் செய்ய முடிவு செய்தோம் என தெரிவித்துள்ளார்.

தற்போது சுந்தர்சி இயக்கும் ஆம்பள படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் விஷால்.

அதனைத் தொடர்ந்து சுராஜ் இயக்கத்தில் நடிக்கும் படத்திற்கு பின் இந்த புதிய படத்தின் பணிகளை தொடங்க உள்ளனராம். இந்த 5 கதாநாயகர்கள் இணையும் இந்தப் படத்தை யார் இயக்கப் போகிறார் என்பது இன்னும் முடிவாகவில்லை.

## ஒன்றிணையும் குட்டி கதாநாயகர்கள்

## ரிலாக்ஸா வாசியுங்க



வீதிகளில் உலாவும் நாய் ஒன்றும், வீட்டில் சகல மரியாதைகளுடன் வளர்க்கப்பட்ட நாய் ஒன்றும் சந்தித்தன.

வீதி நாய் : ஏண்டா ! நீ இப்படி சும்மா சாப்பிட்டு, குடிச்சுட்டு சும்மாவே இருக்கிறியே. இதெல்லாம் ஒரு பிழைப்பா?. ஏண்டா இப்படி இருக்கிறாய்?

வீட்டு நாய் : நான் ஒன்றும் உன்னைப்போல் அல்ல. ஒரு உயரிய இலட்சியத்திற்காக தான் இங்க இருக்கேன்

வீதி நாய் : என்னடா அது ?

வீட்டு நாய் : இந்த வீட்டுப் பொண்ணு ஒரு பையனை காதலிக்கிறாள்.



வீதி நாய் : அதனால் உனக்கு என்னடா ?

வீட்டு நாய் : அந்த விடயம் அவள் அப்பாவுக்கு தெரிந்து விட்டது.

வீதி நாய் : அதுக்கு நீ என்னடா செய்ய முடியும் ?

வீட்டு நாய் : அவள் அப்பா அவளிடம் 'உன்னை ஒரு நாய்க்கு கட்டி வச்சாலும் வைப்பேன். ஆனால் இவனுக்கு மட்டும் கட்டி வைக்க மாட்டேன் என்று சொல்லிட்டாரு. அதுக்காகத்தான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு காத்திருக்கின்றேன்.

## முகநூலுக்காக வயதைக் குறைத்த மூதாட்டி


அமெரிக்காவில் மூதாட்டி ஒருவர் 15 வயதை குறைத்து பேஸ்புக்கில் இணைந்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள அன்னா ஸ்டோஹெர் என்ற 113 வயது பாட்டிக்கும் பேஸ்புக்கில் சேர வேண்டும் என்ற ஆசை உண்டானது. எனவே, தானும் பேஸ்புக்கில் சேர்வது என்று அன்னா முடிவு செய்தார். ஆனால், 1905 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களால் மட்டுமே பேஸ்புக்கில் சேர முடியும் என்பது நிபந்தனை. எனவே, தனது வயதை மாற்றி பதிவு செய்து கணக்கைத் தொடங்கினார்.

1900 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிறந்த அன்னா, இந்த மாதம் 15 ஆம் திகதி தனது 114 ஆவது பிறந்தநாளை கொண்டாட இருக்கிறார். ஆனால், பேஸ்புக் கணக்குப் படி தனது வயதை 15 வருடங்கள் குறைத்துப் பதிவு செய்தார்.

114 ஆவது வயதை நெருங்கும் வேளையில், பேஸ்புக்கில் இணைந்தது தனக்கு உற்சாகம் ஏற்படுத்துவதாக கூறியுள்ளார். தனது 15 வயதைக் குறைத்துப் பேஸ்புக்கில் இணைந்துள்ள அன்னாவை, சமூக வலைதளங்களில் வயதான இளையதலைமுறை என்று மற்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.







## அதிபயங்கர சாகசம்

மலேசியாவில் வானிலிருந்து குதிக்கும் சாகச வீரர்கள் மூவர், உயரமான கட்டடத்தின் மேலிருந்து கீழே உள்ள நீச்சல் குளத்தில் குதித்துள்ளது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் வானிலிருந்து குதிக்கும் வீரர்கள் ஜான், மாட் மற்றும் அண்டி ஆகியோர் ஆயிரத்து 100 அடி உயரமுள்ள கட்டடத்தின் மேலிருந்து கீழே உள்ள நீச்சல் குளத்தில் குதித்துள்ளனர்.

இவர்கள் குதித்த இந்தக் காட்சி அவர்களது தலையில் மேல் உள்ள கமெராவில் பதிவாகியுள்ளது.

மனதை உலுக்கும் இந்த காணொலி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இவர்கள் மூவரும் கட்டடத்தின் உயரத்தில் இருந்து குதித்து பின்னர் பரசூட் மூலம் நீச்சல் குளத்தில் குதித்துள்ளனர். நீச்சல் குளத்தை சுற்றி இருந்த பார்வையாளர்கள் இவர்களை கைதட்டி வரவேற்றுள்ளனர்.

## சின்னத்திரை தயாரிப்பாளர் சங்க தலைவராக ராதிகா

தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் சென்னையில் கடந்த 11 ஆம் திகதி நடந்தது. கூட்டத்திற்கு தலைவர் ராதிகா சரத்குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 2014 - 2016 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் அனைவரும் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சங்கத்தின் தலைவராக ராதிகா சரத்குமாரே மீண்டும் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செயலாளராக குஷ்பு சுந்தரும், பொருளாளராக டி.ஆர்.பாலேஷ்வரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நடிகை குட்டி பத்மினி, சுஜாதா விஜயகுமார் ஆகியோர் துணை தலைவர்களாகவும், ஈ.ராம்தாஸ், டி.வி.சங்கர் ஆகியோர் இணை செயலாளர்களாகவும், பி.ராதா, சுஜாதா கோபால், வினயா கிருஷ்ணன், ரவி, கே.ஜி.ஜெயவேல், ஆர்.சதீஷ், பி.சீனிவாசன், எஸ்.சுந்தர், பி.சீனிவாசலு, ஏ.எஸ்.வெங்கடாசலம், ஜி. ஜெயகுமார் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏவிஎம்.சரவணன், டி.ஜி.தியாகராஜன், அழகன் தமிழ்மணி ஆகியோர் சங்கத்தின் காப்பாளராக நியமிக்கப்பட்டனர்.



## தன்னியக்க ரயில்

தற்போது சாரதிகள் இல்லாமல் தன்னியக்க வாகனங்களை தயாரிப்பதில் பல முன்னணி நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன. இவற்றின் ஓர் அங்கமாக சாரதிகள் அற்ற ரயிலை லண்டனில் 2022 இல் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட குளிரூட்டும் வசதி உட்பட வேகமாகவும், இலகுவாகவும் பயணம் செய்யக்கூடிய வகையில் இந்த ரயில்கள் வடிவமைக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது



# புலமைப் பரிசில் பாராட்டுச் சிறப்பிதழ் - 2014

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வட இந்து ஆரம்ப பாடசாலையில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம் (2014)




| | |
|---|---|
| 01.கோ.ஷிபாவி - 186 | 08.நே.கிரிஜா - 171 |
| 02.அ.கிவானி - 180 | 09.க.அனுராஜி - 170 |
| 03.வ.அபிசா - 176 | 10.ஜெ.வைஸ்ணவி - 169 |
| 04.ரா.அஸ்விகா - 176 | 11.ந.தமன்ஜா - 169 |
| 05.ர.கம்ஷா - 174 | 12.மு.றம்மியா - 164 |
| 06.வ.ஒர்சிவி - 174 | 13.ந.மகிழினி - 164 |
| 07.ந.லக்ஷவா - 173 | 14.கி.நிமேதா - 158 |

இவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
பாடசாலைச்சமூகம்.

(சு/15191)(3.6.4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

ந.நிருசாந் - 170 ஜெ.ஜெதுசன் - 169
இ.புத்மராஜ் - 165 ச.பிரியங்கா - 159

ஆகியோரையும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற

| | | |
|---|---|---|
| 01) உ.ருசாந்தினி - 156 | 02) கே.துசானி - 143 | 03) சி.ஜெனுஜன் - 140 |
| 04) பி.யதுசிகா - 136 | 05) செ.கிந்துசா - 132 | 06) சோ.வசிகலா - 129 |
| 07) ஜெ.தனுசன் - 122 | 08) பா.சிலம்பரசி - 122 | 09) த.ஜெனனி - 115 |
| 10) சி.சிவலக்சன் - 114 | 11) சு.டிஸ்னியா - 110 | 12) த.லக்சிகன் - 109 |

ஆகியோரையும் பாராட்டுவதோடு, இவர்களது வெற்றிக்கு உழைத்த அதிபர் திருமதி.பு.இராசநாயகம், ஆசிரியர் செ.சத்தியரூபன் இவர்களோடு சேர்ந்து வழிகாட்டிய ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், வேலணை.

(C/15194)(12.3.6)

## யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் கரவெட்டி
### 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


செல்வி சொ.கோவர்த்தனி 182 புள்ளிகள்


செல்வன் உ.பிரவீன் 178 புள்ளிகள்


செல்வி ஜெ.தனோஜா 174 புள்ளிகள்


செல்வி தெ.வித்தகி 167 புள்ளிகள்


செல்வி சி.ஒளிநிலா 162 புள்ளிகள்


செல்வி சி.சுகைநிலா 158 புள்ளிகள்



18 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 14 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். ஒருவர் 99 புள்ளிகள் பெற்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| ச.வினுசன் - 147 புள்ளிகள் | வே.தனுஷா - 126 புள்ளிகள் | சி.சிவப்பிரியா - 99 புள்ளிகள் |
| கு.யனார்த்தனா - 134 புள்ளிகள் | மு.ஐஸ்வரியா - 125 புள்ளிகள் | |
| சி.பவ்யசாங்கரி - 134 புள்ளிகள் | இ.கம்ஷா - 118 புள்ளிகள் | |
| செ.சஜீவன் - 127 புள்ளிகள் | பி.ஜெயபிரதாப் - 108 புள்ளிகள் | |

★ தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை கற்பித்த ஆசிரியை திருமதி சாமினி சுதர்சன் அவர்களுக்கும் தரம் 5 ஆசிரியை திருமதி கனகாம்பிகை இராஜலிங்கம் அவர்களுக்கும் பயிற்சி வினாத்தாள்களைப் பெற பணஉதவி வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(C/15192) (7.6.3)

## மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை - புதுக்குடியிருப்பு
### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2014
### சித்தியடைந்தோருக்கான பாராட்டுவிழா
காலம்: இன்று (15.10.2014) புதன்கிழமை



இருப்பவர்கள் இடமிருந்து வலமாக

| | |
|---|---|
| அ.சாருஜா | 162 |
| யோ.அனோஜினி | 165 |
| ஆ.பஸ்மிதா | 177 |
| பி.பிரியங்கா | 159 |
| த.கோபியா | 175 |
| உ.தரணிகா | 158 |
| சி.கோபிகா | 169 |
| ர.அர்ச்சனா | 160 |
| சு.டதுர்சிகா | 169 |
| ச.சதுர்சிகா | 160 |

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக

| | |
|---|---|
| ஜெ.எழிலிசா | 166 |
| ம.கிஷாளினி | 163 |
| இ.பிருந்தா | 166 |
| சௌ.சிலக்சன் | 158 |
| லோ. கிருஸ்ணப்பிரசாத் | 167 |
| ஜெ.திவானுஜன் | 162 |
| மோ.அஜய் | 163 |
| பா.அட்சஜன் | 172 |
| லோ. கிருஸ்ணப்பிரகாஸ் | 170 |
| ஆ.கனலரசன் | 157 |
| பா.சஜீந் | 166 |
| ர.நிசா | 159 |
| அ.வர்சி | 166 |
| ச.தமிழினி | 182 |

சாதனை நாயகர்களுடன் இடமிருந்து வலமாக
திருமதி.சி.சந்திரமோகன்(ஆசிரியர்), சி.சிவநாதன்(ஆசிரியர்), இ.செல்வநாயகம்(அதிபர்), இ.சிவகுமார்(பிரதி அதிபர்), ந.அமலசேகர்(ஆசிரியர்)ஆகியோர்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.தே.கட்சியும் 13 + உம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு நாடு சுதந்திரமடைந்த பின்னர் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அரசமைப்பின் மூலம் உறுதிசெய்யப்பட்ட ஒரே ஒப்பந்தம் ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம்தான். அதனால்தான் அது பலவீனப்படுத்தப்பட்ட நிலையிலும் இன்னமும் உயிரோடிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் சிருஷ்டிகர்த்தா இந்தியா. அதனால் ஒப்பந்தத்தை ரத்துச்செய்து மாகாணசபை ஆட்சி முறைமையை ஒழித்துக்கட்டுவது சுலபமான விடயம் அல்ல. அதனால்தான் அதனைச் சிதைத்து பலமிழக்கச் செய்ய அரசு முயற்சிக்கிறது.

இந்த ஒப்பந்தம் உயிர்வாழ்வது இந்தியாவின் கையில் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அதே சமயம் இந்த ஒப்பந்தம் போன்று வேறு ஓர் ஒப்பந்தமும் நீண்டகாலமாக சர்ச்சையை எதிர்நோக்கியது கிடையாது. 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம் கூட குறுகிய காலத்தில் அஸ்தமித்துவிட்டது.

1987இல் ராஜீவ்காந்தியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தம் செய்துகொண்டபோது விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். 1988 இல் நடைபெற்ற வடக்கு - கிழக்கு இணைந்த முதலாவது மாகாணசபைத் தேர்தலையும் அவர்கள் பகிஷ்கரித்தனர். இதுதான் மாகாணசபையின் ஆரம்பம். இன்று மாகாணசபைகளுக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் வழங்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை. திவிநெகும சட்டமூலம் ஊடாக பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. அப்படி இருந்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படைகளில் ஒன்றாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும் மாகாணசபை ஆட்சி முறைமையும்தான் இதுவரை இனம்காணப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாக வைத்து அரசியல் பேச்சுகளை ஆரம்பிக்கமுடியும் என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று (13+) தீர்வுகாண்பதன் மூலமே தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முடியும். ஆனால் 13+க்கு எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியும் ஆதரவில்லை. இடதுசாரித் தலைவர்கள் வாய்ப்பேச்சில் மட்டுமே உள்ளனர்.

ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஞான சேதபெரமுனைத் தலைவர் பத்தரமுல்லை சீலரத்தன தேரருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து ஐ.தே.கவின் நிலைப்பாட்டை முதல் தடவையாக வெளிப்படுத்தியுள்ளார். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கும். ஆனால் 13+க்கு ஆதரவு வழங்காது. இதுதான் ஐ.தே.கவின் நிலைப்பாடு. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. ஆகவே இதற்கு ஆதரவு வழங்குவது ஐ.தே.கவின் கடப்பாடு. இதனை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்கிறது ஐ.தே.க. முழுமையாக எனும்போது மாகாணசபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்து ஐ.தே.க. தெளிவுபடுத்துவது அவசியமாகும். மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறித்து ஐ.தே.க்வுக்குள் கருத்து ஒருமைப்பாடு கிடையாது. ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க முன்னர் ஒரு தடவை கருத்துத் தெரிவிக்கையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தம் அவசரத்தில் கொண்டுவரப்பட்டது என்று கூறினார். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒழிக்கப்படக்கூடாது; ஆனால் அதில் உள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும். நாடாளுமன்ற அதிகாரங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் மாகாண சபைகள் இயங்கமுடியாது என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாலும், எதிரணி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்து வருவதாலும் 13 குறித்தும் மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் குறித்தும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு ஐ.தே.க. தெளிவுபடுத்துவது அவசியமாகும். 2002 டிசெம்பர் ஒஸ்லோ பிரகடனத்தில் ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சி முறைமை குறித்துப் பேசுவதற்குத் தயாராக இருந்த ஐ.தே.க. தற்பொழுது 13+க்கு எதிர்ப்புத் தெரிவிப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

# போப்பாண்டவர் வருகை கேள்விக்குறியாகியுள்ளது

## தூதுவர் நோனிஸ் மீதான தாக்குதல்: மேலும் விவரங்கள்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து கோகுலன்



பிரிட்டனுக்கான முன்னாள் தூதுவர் கிறிஸ்நோனிஸ் வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தனவால் நியூயோர்க் புறநகர் நியுஜேர்ஸியில் இரவு உணவு வைபவமொன்றில் வைத்துத் தாக்கப்பட்டார் என்ற சம்பவம் அரசதரப்பு உறுப்பினர்களுக்கு கடந்தவாரம் தான் ஓரளவுக்கு வெளிப்படையாயிற்று.

கடந்த வாரம் வியாழக்கிழமை அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தலைமை வகித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ராஜபக்ஷ நோனிஸ் விடயத்தைப் பற்றிக் கூறுகையில், அவர்கள் புதுமாதிரியான ஆள்கள் என்று குறிப்பிட்டார். தாம் இந்த நிகழ்வுபற்றி வெளியுறவு அமைச்சின் செயலாளர் சேனுகா செனவிரட்ண, வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் விருந்தளித்த வரான டிலான் ஆரியவன்ச ஆகிய எல்லோரிடமும் விசாரித்து விட்டதாகவும் அவர்கள் அனைவருமே அவ்வித தாக்குதல் எதுவும் நடக்கவில்லையென்றே கூறினார்கள் என்றார் ஜனாதிபதி.

அப்படிக் கூறுவது சரியல்ல என்றார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. தூதுவர் நோனிஸ் நாட்டை தற்காத்துச் செயல்பட்டவர். அவரது பங்களிப்பை உயர்வாகப் பாராட்டும் ஒரு தரப்பினர் இருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த நிலையில் அவரை வைத்துப் பார்க்கிறார்கள் என்று கூறிய பஸில், தூதுவர் நோனிஸ் மதிப்புள்ள மனிதராகக் கணிக்கப்படுபவர். எனவே இந்த விடயத்தை முழுவதுமாகக் கைவிட்டுவிடமுடியாது என்றார். பர்குபாடற்ற விதத்தில் இது தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜே.வி.பி. தரப்பில் இந்த விடயம் நாடாளுமன்றத்தில் கிளப்பப்படவிருந்த போதிலும் அது சாதகமாய் அமைய வில்லை. அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தலையீட்டை அடுத்து வெளியுறவு பதில் அமைச்சர் நியோல் பெரேரா அவசியமேற்படுமானால் சுருக்கமாக ஓர் அறிக்கையை வெளியிட வேண்டும் என்று அரசதரப்பு உறுப்பினர்கள் கருதினார்கள். அவ்வாறான அவசியம் ஏற்படாது போனதால், நாட்டின் உயர்மட்ட தூதுவர் ஒருவரின் முறைப்பாடு பொதுமக்களுக்கு அவசியமற்றது என்ற வகையில் அரசால் கைவிடப்பட்டுவிட்டது.

நியூயோர்க்கில் வைத்து தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துவிட்டு திரும்பியிருந்த கிறிஸ் நோனிஸ் பேர்மிங்ஹாமில் நடந்த பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்குப்போய் இருந்தார். அந்தச் சமயத்தில் அவருடைய பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அங்கு வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கான வரவேற்பு நிகழ்வு ஒன்றில் நடந்த சம்பவத்தை பார்வையாளர் ஒருவர் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் பிலிப் ஹமோன்ட், நோனிஸ் இருந்த இடத்துக்கு சென்று 'நாங்கள் ஏன் இலங்கை மீது மனித உரிமை மீறல்கள் குறித்து அழுத்தங்கள் கொடுக்கிறோம் என்று இப்பொழுது உணர்கிறீர்களா?' எனக் கேட்டுள்ளார். அங்கிருந்த முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மொகமது நஷீத், 'மாலைதீவில் எனக்கு என்ன செய்கிறார்களோ, அதுதான் உங்களுக்கு இலங்கையில் செய்யப்படுகிறது' என்று கூறினார். முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளரும் தூதுவருமான ரஞ்சன் மத்தாய் கூறுகையில்; 'எனக்கு இது அதிர்ச்சியாய் இருக்கிறது' என்றார். அங்கு வந்திருந்த இன்னொரு தூதுவர் பார்வையாளருக்கு பெயர் தெரியவில்லை - நோனிஸைப் பார்த்து 'எலும்புகள் எதுவும் முறிந்துபோனதா? என்றார். சிரிப்பு பலமாக ஒலித்தது.

சம்பவம் பற்றி மேலும் தகவல்கள் வந்துள்ளன. சம்பவத்தை நேரடியாகப் பார்த்த ஒருவர் கூறுகையில், நோனிஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது ஐ.நா. தூதுவர் காரியவாசம் தான் இருவரையும் விலக்கியுள்ளார்' என்று தெரிவித்துள்ளார். தாக்குதல் இடம்பெற்ற வேளையில் வெளியுறவு செயலாளர் செனவிரட்ண "போங்கள் கிறிஸ், போங்கள் கிறிஸ்" என்று குரல் கொடுத்திருக்கிறார். நோனிஸ் தனது இருப்பிடம் திரும்பி சிலமணி நேரம் கழித்து நியூயோர்க் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் மோசமான அபாயத்திலிருந்து தப்பியிருக்கிறார் என்று கூறியுள்ளார்கள். நோனிஸ் ஜனாதிபதி தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தபோது அவர் வெளியேறிக் கொண்டிருப்பதைக் கண்டுள்ளார். அப்போது நடந்த சம்பவத்தை அவரிடம் கூறியதுடன், தாம் பதவி விலக விரும்புவதையும் தெரிவித்துள்ளார். அவ்வாறு செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, ஒரு மணி நேரத்தில் தாம் திரும்பிவருவார் என்றும் கூறியிருக்கிறார். ஐ.நா. பொதுச்சபையின் 69 ஆவது மாநாட்டில் உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி போய்க்கொண்டிருந்துள்ளார். வேறொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் பதவிவிலகல் கடிதத்தைக் கொடுத்துவிட்டு நோனிஸ் லண்டன் திரும்பினார்.

நடந்த சம்பவம் பற்றி இலங்கையர் பலரிடமிருந்தும் அவருக்கு பலவிதமான கேள்விகள் பறந்தன.

அவருடைய கருத்தை அறிய தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, "நடந்த விடயம் என்னவென்றால், சட்டத்துக்கு மாறான முறையில் நான் தாக்கப்பட்டுள்ளேன். நான் தாக்கப்பட்ட பிறகும் கலந்துகொண்ட நிகழ்வுகளில் இலங்கையின் சார்பில் நான் செயல்பட்டிருக்கிறேன். பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை நாட்டையும் தலைவர்களையும் புகழ்ந்து கூறிவந்துள்ளேன் என்பதைத் தவிர வேறெதுவும் கூறுவதற்கில்லை" என்றார்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த வாரம் பத்திரிகையாளர் சந்திப்பின்போது அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கேட்கப்பட்டது.

அவர் பதில் அளிக்கையில், "முதலாவதாக இந்தச் சம்பவம் அதிகாரபூர்வமான நிகழ்வொன்றில் இடம்பெறவில்லை. நண்பர்கள் சிலர் கூடியிருந்த தனிப்பட்ட நிகழ்வு" என்று பதில் கூறியிருந்தார்.

"கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பவத்தின்போது பலத்த வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றதாகக் கூறியதாக செயலாளர்(சேனுகா செனவிரட்ண) கூறுகிறார். தாக்குதல் ஏதும் நடைபெறவில்லையென்று விருந்தளித்தவர் சொன்னதோடு இந்தப் பிரமுகர் (நோனிஸ்) விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் சொல்கிறார். ஐ.நா. கூட்டத்தின்போது நடந்திருந்தால் பெரும் தாக்கமாக இருந்திருக்கும். இது ஒரு வீட்டில் நடந்த சம்பவம். இரண்டு தரப்பினரிடமிருந்தும் வாக்குமூலங்கள் பெறப்படுகின்றன. அமைச்சு இது தொடர்பாக செயல்பட்டு வருகிறது. அதனால் இதற்குமேல் விவரம் தரமுடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று விரைவில் நடைபெறவிருக்கும் நிலையில் இப்படியானதொரு அவதூறு ஏற்படுத்தும் நிகழ்வு வெளிப்பட்டிருப்பதான செய்தி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தரப்பினருக்கு நல்ல செய்தியாக இருக்க மாட்டாது. அதேசமயம் ஒருவகையில் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இன்னமும் உட்கட்சிப் பூசல்களிலேயே நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறது. இப்போதுள்ள சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதாகத் தெரியவில்லை.

### போப்பாண்டவர் வருகை

ஜனாதிபதி வத்திக்கானுக்கு சென்று போப்பாண்டவரைச் சந்தித்துப் பேசிய விடயங்களின் விவரங்கள் இன்னமும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. தேர்தல்கள் விரைவில் இடம்பெறவிருப்பதே இதற்குக் காரணம் என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள். நிதியமைச்சராகவும் பதவி வகிக்கும் ஜனாதிபதி ஒக்ரோபர் 24 ஆம் திகதி அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வார் என்று அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. கடந்த வருடங்களைவிட இது குறைந்தது மூன்று வாரங்களாவது முன்கூட்டி இடம்பெறுகின்றது.

தேர்தல்கள் இடம்பெறவிருக்கும் ஒரு நாட்டுக்கு ஒரு மாதம் முன்னதாக அல்லது ஒரு மாதம் பின்னராக மட்டுமே போப்பாண்டவர் பயணம் மேற்கொள்வது வழக்கம் என்று வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன. போப்பாண்டவர் பிரான்சிஸ் ஜனவரி 13 ஆம் திகதி இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அவரது வருகை பெரும்பாலும் இரத்துச் செய்யப்படலாம் என்பது சாத்தியமே. ஆனால் அதிகாரபூர்வமாக போப்பாண்டவர் வருகை பட்டியலிட்டபடியே இருக்கின்றது. அவரது வருகைக்கான ஏற்பாடுகளை கொழும்பு பேராயரும், கத்தோலிக்க பேராயர் திருச்சபையின் தலைவருமான கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார். வத்திக்கான் பேராளர்கள் குழுவொன்று இறுதி ஏற்பாடுகளைக் கவனிக்க நவம்பரில் இங்கு வரவிருக்கின்றது. இப்போதைக்கு போப்பாண்டவர் வருகையில் எதுவித மாற்றமும் காணப்படவில்லை என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள்.

# சுதந்திரமாக உலவும் ஊழல் அரசியல்வாதிகள்

## இலங்கை தொடர்பாக சில சர்வதேச ஊடகங்களின் கருத்து

சிங்களமூலம்
லங்காதீப
தமிழில் - சரா





உலகிலேயே பலம் பொருந்திய பயங்கரவாதஅமைப்பொன்றை வேரோடு பிடுங்கியெறிந்து வெற்றிவாகை சூடிக்கொண்ட அரசியல் தலைவரொருவர் என்ற வகையில் நியூயோர்க்கில் மஹிந்தவுக்கு இம்முறையும் பெருத்த வரவேற்புக் கிட்டியிருந்தது. ஆனால் ஜனாதிபதி எதிர்கொண்டிருக்கும் பல்வேறு சவால்களை வெற்றி கொள்வதற்கு இன்னமும் அவரால் இயலாமல் இருப்பதற்கு அவரது அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் நிலவும் பலவீனங்களே காரணம் எனவும், நடுநிலையான வெளிநாட்டுக்கொள்கையொன்றைக் கடைக்கொள்ள அவரது அரசு திறன் பெற்றிருக்கவில்லை எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பத்திரிகைகளான த ஹிந்து, ஹிந்துஸ்தான் ரைம்ஸ், சவூதி அரேபியாவின் கல்ப் நியூஸ் பத்திரிகை போன்றே ஷின்ஹுவா போன்ற ஊடகங்கள் 2015 ஜனவரியில் இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மூன்றாவது தடவையாகவும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் அமர்வதற்குச் சந்தர்ப்பமுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

முக்கியமாக எதிர்க்கட்சிகளிடையே காணப்படும் ஒற்றுமையில்லாத தன்மையே அவர் வெற்றியடைவதற்கான வாய்ப்புக்களை வழங்கவுள்ளதாகவும் இந்தப் பத்திரிகைகள் கருத்து வெளிப்படுத்தியுள்ளன. ஆனாலும், கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதிய நியூயோர்க் ரைம்ஸ், பத்திரிகை மஹிந்த ராஜபக்ஷ மீண்டுமொரு தடவை ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொள்வது சந்தேகத்துக்குரியதெனத் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க; இலங்கைக்கு எதிராகச் செயலாற்றி வந்துள்ள தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டுள்ள கதி பற்றியும் சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. ஊழல், மோசடி, சொத்துக் குவிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் அவருக்குத் சிறைத் தண்டணை கிடைத்திருப்பதன் மூலம் இலங்கை எதிர்கொண்டிருந்த மிகப் பெருத்த சவாலொன்று - தலையிடியொன்று அற்றுப் போயிருப்பதாக த ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது. இதே கதி எதிர்காலத்தில் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்திக்கும்கூட ஏற்படுமெனவும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் மக்கள் பணத்தைச் சூறையாடியுள்ள குற்றங்களுக்காக அவர்கள் நிச்சயமாக சிறை செல்ல வேண்டி நேரும் எனவும் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த பிரமுகரான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்திருப்பதாக செப்ரெம்பர் 30ஆம் திகதிய த ஹிந்து பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி ,சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டுக்களுக்கு மேலாக ஜெயலலிதாமீதுள்ள குற்றச்சாட்டுக்களில் முறையற்ற விதத்தில் அரச சொத்துக்களைத்தன்னிச்சையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தமை மற்றும் தகுதிகள் தராதரங்கள் இல்லாத தனது சொந்த பந்தங்களுக்கு தமிழ்நாடு மாநிலத்தில் உயர் பதவிகளை வழங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களுக்கு அவர் பாத்திரமாகியுள்ளார்.

ஆனால் அண்டை நாடான இலங்கையில் இதுபோன்ற குற்றங்களைப் புரியும் எந்தவொரு அரசியல் வாதிக்கும் இதுபோன்ற தண்டனைகள் வழங்கப்பட்டதுண்டா? இதுபோன்ற எண்ணிலடங்காத ஊழல் மோசடிகளில் தொடர்புடைய அரசியல்வாதிகள் இலங்கையில் இருப்பதொன்றும் இரகசியமல்ல எனவும் இந்த அரசியல்வாதிகளுக்கு மிக உயர் மட்டத்தின் ஆதரவு கிடைத்திருப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் நீதித்துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பானது சுதந்திரமாக இயங்குவதுடன் நியாயத்தையும் நீதியையும் நிலைநிறுத்தி வருவதாகவும் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.


# எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கையின் கல்விச் சீர்திருத்தம்

குமாரசாமி யோகன்ராஜ்

இலங்கை அரசு தற்பொழுது எதிர் கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஆளுமையும் ஆற்றலும் உள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு க.பொ.த உயர்தர பாடப் பிரிவில் தொழில்நுட்ப பாடத்துறையை உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பாடத்துறையைக் கலைத்திட்டத்தில் சேர்த்ததன் மூலம் மாணவர்கள் இலகுவாக வேலை வாய்ப்பினையும் பெறமுடியும். இது குறித்து மேலும் தகவல்கள் இங்கு உள்ளடக்கப்படுகின்றன.

ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வியை உயர்ந்தளவில் பெற்றுக் கொடுக்க இலங்கை விரும்புகின்றது. அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அத்திவாரமொன்றும் வழங்கப்படுகின்றது. கல்வியில் சமத்துவத்தையும் தரத்தையும் அடைந்து கொள்வதில் அரசு அதன் மஹிந்த சிந்தனை மற்றும் மஹிந்த சிந்தனை - எதிர்காலத்துக்கான தொலை நோக்கி- என்ற கொள்கை ஆவணத்திலும் எதிர்பார்த்தவாறான அறிவு மையத்தை உருவாக்குகின்ற விதத்தில் நாட்டை மாற்றியமைக்கும் கல்வியையும் அறிவு முறைமைகளையும் பொருத்தமான விதத்தில் மீளமைக்கின்ற அரசின் நோக்கம் காரணமாக இலங்கை, உலகில் முக்கிய அறிவு மற்றும் பயில்தலுக்கான மையமாக மாறும். இது கல்விச் சிந்தனையின் கருதுகோள் மாற்றமொன்றுக்கு வழிவகுக்கும். அத்துடன் இது இந்தத் துறையில் பெரிய செயல்விளைவுகளைக் கொண்ட மாற்றங்களைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மாற்றத்துக்கு ஆற்றல் மிக்க உயர்கல்வி முறையினூடாகவும், அங்கீகாரம் மற்றும் தொழில் வாய்ப்புத்தன்மை என்பவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி துறைகளினதும் ஆதரவு அவசியமாகும். சமமான மூலவளப் பங்கீடு மற்றும் வாய்ப்புக்களை வலுப்படுத்துவதற்காக அரசு அண்மைய ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கல்வி அமைச்சு தேசிய கல்வி முகவர்களுடன் இணைந்து இலங்கையில் கல்வி நிலையை உயர்த்துவதற்கான நடுத்தர காலக் கல்வித்துறை அபிவிருத்திக் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் (2012-2016) ஆகியவற்றை வடிவமைத்திருக்கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது வாய்ப்புக்களை மேம்படுத்துவதனூடாக ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக் கல்வியைப் பெறுவதற்கு உதவுவதோடு பள்ளிக்கூடக் கல்வியை மாற்றியமைக்கின்ற செயற்றிட்டத்துக்கும் ஆதரவு அளிக்கின்றது.



பாடசாலைக் கல்வியை மாற்றியமைக்கின்ற செயற்றிட்டமானது கல்விக்கான வாய்ப்புக்களையும் அதன் தரத்தினையும் மேம்படுத்துவதனூடாக ஆரம்ப மற்றும் இர்ணடாம் தரக் கல்வியைப் பெறுவதனை ஊக்குவிக்கின்றது. அதே வேளை கல்விப் பணிகளின் ஆளுகையினையும், வழங்கலையும் வலுப்படுத்துகின்றது. சிறப்புக் கல்வித் தேவைகளுடன் பிள்ளைகளுக்குப் போதுமான வசதிகளுடன் கல்வி வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. ஆயிரம் இரண்டாம் த்ரப் பாடசாலைகளையும் 5000 ஆரம்பப் பாடசாலைகளையும் உருவாக்குவதன் மீதான கல்வி உபாயத்தின் கீழான சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் 2013இல் இருந்து தொடர்கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வறுமைச் சுட்டெண்ணின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகள் க.பொ.த. உயர்தரத்தில் அனைத்துப் பிரிவுகளுடனும் இரண்டாம் தரம் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும். இரண்டாம் தரப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 20 புதிய பாடசாலைகளின் கட்டுமான வேலைகள் நிறைவடைந்துள்ள வேளையில் கட்டுமானத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 415 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களின் கட்டுமான வேலைகள் 2013 ஜூனிலிருந்து ஆரம்பமாகியுள் ளன.

மேலும் 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டு 1580 ஆகக் காணப்பட்டது. அத்தகைய பாடசாலைகளின் மூலவள அளிப்பு தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் சமநிலையற்றதாகக் காணப்படுவதானது ஏற்கனவேயுள்ள வளங்களின் பயன்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தினைப் பிரதிபலிக்கின்றது.

2013 இல் க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடநெறி அறிமுகப்புடுத்தப்பட்டதால் இலங்கையின் கல்வித்துறையில் மிகப் பெரும் மாற்றமொன்று இடம்பெற்றது. இது மூன்றாம் நிலையில் பல்கலைக்கழக அல்லது தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வியைத் தொடர எதிர்பார்க்கின்ற மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பினை விரிவடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப அறிவு மிக விரைந்த வளர்ச்சியொன்றினைத் தொடர்ந்து 2016அளவில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப அறிவில் 75 சதவீதத்தினை அடைந்து கொள்ளுதல் என்ற இலக்கினை நோக்கிப் பயணிக்கின்றது. இலங்கையின் வலை யமைப்பு ஆயத்த நிலை சுட்டெண்ணின் தர நிலை குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்பட்டது. கல்வி அமைச்சுக்கும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சிற்குமிடையில் கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் காரணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தினை க.பொ.த.உயர்தரம் மற்றும் க.பொ.த.சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேசிய தொழிற்பயிற்சி தகைமையினை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சியினை நடத்துவதற்கென 175 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டதுடன் பாடசாலைகளிலிருந்து விலகுவோருக்காக தேசிய தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்காக 47 மாகாண மற்றும் வலய தகவல் தொடர்பூட்டல் நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு கணினி ஆரம்ப அடிப்படைப் பயிற்சி, கணினி உதவியுடனான பயில்தல் மற்றும் பன்னாட்டு தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப கற்பித்தல் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேலும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அலுவலர்களுக்கும் பயிற்சி புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு குறுங்கால தொழில்சார் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள், பாடசாலை விட்டுச் சென்றமாணவர் களும் பெறுவதற்கு புலமைப் பரிசில்கள் வழங் கப்பட்டன

(தொடரும்)

## எல்லைக்குள் தவறுதலாக நுழைந்த பாக். முதியவர்

இந்திய எல்லைக்குள் தவறு தலாக நுழைந்த 80 வயது முதியவரை திரும்பவும் பாகிஸ்தானுக்கு அனுப்புவதில் சிக்கல் எழுந்துள்ளது.



மருந்து வாங்குவதற்கு என்று வந்த அந்த லாகூரைச் சேர்ந்த 80 வயது முதியவர் தவறுதலாக இந்திய எல்லைக்குள் நுழைந்து விட்டார். அவரை இந்திய இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது அவர் ஏதும் அறியாத அப்பாவி என்றும், அவர் தவறுதலாகத்தான் இந்திய எல்லைக்குள் நுழைந்துள்ளார் என்பதும் உறுதியாகியுள்ளது.

இந்தநிலையில் அவரை மறுபடியும் பாகிஸ்தானுக்கு அனுப்ப வீரர்கள் முயன்றுள்ளனர். ஆனால், அது பயனற்றுப் போனது. பாகிஸ்தான் தமது நாட்டு முதியவரை தமது நாட்டுக்கு அழைத்துக் கொள்ள மறுத்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இந்தியத் தரப்பு இன்னமும் முயற்சிகளைக் கைவிடவில்லை என்றும் தெரிய வருகிறது. (வ)



ஹுட்ஹுட் புயல் இந்தியாவின் விசாகப்பட்டினம் மற்றும் ஆந்திராவில் பலத்த அழிவை ஏற்படுத்தியுள்ளது. விசாகப்பட்டினத்தில் புயலின் கோரத்தாண்டவத்தில் மரங்கள் முறி வடைந்து வீதியின் குறுக்காகவும் மக்களின் குடியிருப்புகள் மீதும் வீழ்ந்து கிடப்பதைக் காணமுடிகின்றது. சூறாவளியால் வீடுகளை இழந்த மக்கள் ஆடைகளை வீதியோரங்களில் காயவிட்டிருப்பதையும் சிறுவர்கள் வீதியோரங்களில் அமர்ந்திருந்து தமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பதையும் இங்கு காணலாம். (வ)

## ‘சர்வதேச பெண் சமாதான காவலர்’ இந்திய பெண் பொலிஸ் அதிகாரிக்கு

வொஷிங்டன், ஒக்.15

இந்தியப் பெண் பொலிஸ் அதிகாரியான சக்திதேவி என்பவர் ஐ.நா. அமைதிப் படையில் தமது விதிவிலக்கான சாதனைகளால் ‘சர்வதேச பெண் சமாதான காவலர்’ என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த விருது பெண்கள் பொலிஸ் சர்வதேச சங்கக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டது.



அவர் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பான வழக்கில் மக்களுக்கு உதவி செய்துள்ளார்.

பெண் பொலிஸின் நிலை முன்னேற்றம் அடையவும், மற்றும் ஆப்கானிஸ்தானில் காவல்துறை யில் ஜனநாயக கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவும் உதவியுள்ளார்.

இதேவேளை அமைதி காக்கும் நடவடிக்கை தொடர்பாக ஐ.நா, 110 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவுக்கு வழங்க முன்வந்துள்ளது. இது இரண்டாவது மிக உயர்ந்த தொகையாக விளங்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## ஜார்கண்டில் நக்சல் அதிகாரி கைது

ஜார்கண்ட் மாநிலத்தில் நக்சல் கமாண்டர் முகலால் மஹதோ என்ற மோசுபகத்தை பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

அவர் மாவோயிஸ்ட் மண்டல குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

பொகாரோ மாவட்டத்தில் ஜுமரா மலைப் பகுதியில் பொலிஸார் அவரை கைது செய்தனர்.



அவரிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் உரையாற்ற மோடிக்கு அழைப்பு



டில்லி, ஒக்.15

ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த மாதம் பயணம் மேற் கொள்ளவுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் முதலாவது இந்தியப் பிரதமர் என்ற கௌரவத்தை அவர் பெறுகிறார்.

ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறார் மோடி. அப்போது இரு நாட்டு உறவுகளையும் மேம்படுத்துவது குறித்து ஆஸ்திரேலியா பிரதமர் டோனி அபோட்டுடன் பேச்சு நடத்த உள்ளார். ஜி-20 மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களில் பிரதமர் மோடி, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், சீன ஜனாதிபதி ஜின்பிங் ஆகியோருக்கு மட்டும் ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் பிரிட்டன் சீனத் தலைவர்கள் ஏற்கனவே ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளனர். ஆனால் இந்தியப் பிரதமர் ஒருவர் உரையாற்றுவது இதுதான் முதலாவது முறை என்பதால் இது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக அந்த நாட்டு அரசால் கருதப்படுகிறது. கடந்த 1986 ஆம் ஆண்டு அப்போதைய பிரத மர் ராஜீவ் காந்திக்கு பின்னர் ஆஸ்திரேலியா செல்லும் இந்தியப் பிரதமர் என்ற பெருமையும் மோடிக்குக் கிட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மீனவர்கள் தொடர்பில் காங். அக்கறையில்லை

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு

ரத்னகிரி, ஒக்.15

மீனவர்கள் பற்றி காங்கிரஸார் கவலைப்பட்டதில்லை என்று மகாராஷ்ட்ராவில் நடந்த தேர்தல் பரப்புரையின்போது பிரதமர் மோடி குற்றஞ் சாட்டினார்.

மகாராஷ்டிர சட்டமன்ற தேர்தலையொட்டி அந்த மாநிலத்தின் ரத்னகிரி, கன்காவ்லி, பால்கர் உள்ளிட்ட பகுதிகளில் பிரதமர் மோடி மேற்கொண்டு வரும் பரப்புரையின்போது மேலும் தெரி வித்ததாவது:

"பால்கர் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கும், குஜராத்துக்கும் இடையே ஒரு பந்தம் உள்ளது. எனது 60 நாள் ஆட்சி குறித்து கேள்வி எழுப்பும் காங்கிரஸார், பாகிஸ்தான் சிறைகளில் வாடும் மீனவர்கள் குறித்து எப்போதும் கவலைப்பட டதில்லை.

நான் பிரதமரானதும் இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தான் பிரதமரிடம் தீவிரமாகப் பேசினேன்.



கடந்த 10 ஆண்டுகளில் முதல் முறையாக, நமது 50 படகுகளையும், சிறையில் இருந்து 200 மீனவர்களையும் பாகிஸ்தான் விடுவித்தது.

மத்தியில் அரசு அமைத்ததும், நான் செய்த முதலாவது காரியம் இதுதான். எனது ஆட்சி குறித்து கணக்கு கேட்பவர்கள் (காங்கிரஸார்), வெளிநாட்டுச் சிறைகளில் ஏழைக் குடும்பங்களின் மகள்மார், இளைஞர்கள், மீனவர்கள் ஆகியோர் அடைக்கப்பட்டபோது அவர்களைக் கண்டு கொள்ளவில்லை.

மகாராஷ்டிரம் ஊழலில் சீரழித்து விட்டது. பணக்காரர்கள், ஏழைகள் என்று அனைவரையும் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் கொள்ளையடித்து விட்டன. போரில் வீரச்சாவு அடைந்த வீரர்களின் குடும்பத்தினருக்கான வீடுகளையும், பள்ளிக் குழந்தை களின் மதிய உணவையும் கூட அந்தக்கட்சிகள் விட்டு வைக்கவில்லை.

புதியதாக உருவாக்கப்பட்ட பால்கர் மாவட்டத்தை, மராட்டியத்தின் சிறந்த மாவட்டமாக மாற்ற நாம் முழு ஆதரவு அளிப்போம்.

2022 ஆம் ஆண்டு நாடு 75 ஆவது சுதந்திர தினவிழாவைக் கொண்டாட உள்ளது. அதற்குள் சொந்த வீடு இல்லாதவர்கள் யாருமே இந்தியாவில் இருக்கக் கூடாது.

அனைவருக்கும் சொந்த வீடு உருவாக்கிக் கொடுப்பதே எனது கனவாகும். நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். மக்களே எனக்கு எஜமானர்கள். நான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் உங்களுக்குப் பதில் அளிப்பேன்"- என்றார். (வ)

## 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால சிவலிங்கம் கண்டெடுப்பு

கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்கோயில் அருகே நடுக்கொள்ளிடம் ஆற்றில் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால சிவலிங்கம் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

காட்டுமன்னார்கோயில் அருகே கொள்ளிடம் ஆற்றங் கரையோரம் ஓமாம்புலியூர் கிராமம் உள்ளது. இங்கு சோழர் காலத்தில் கட்டப்பட்ட பிரணவ வியாக்ரபுரீஸ்வரர் என்ற கோயில் அமைந்துள்ளது.

மேலும் ஓமாம்புலியூர் கிராமத்தை ஒட்டி நடுக்கொள்ளிடம் ஆற்றில் தமிழக அரசின் மணல் குவாரி இயங்கி வருகிறது. அந்த மணல் குவாரியில் நேற்று முன்தினம் காலை மணல் அள்ளி லொறியில் ஏற்றிக் கொண்டிருந்தனர். அப்போது சுமார் 20 அடி ஆழத்தில் சிவலிங்கம் ஒன்று இருப்பது தெரிந்தது. பொக்லைன் இயந்திரம் மூலம் பள்ளத்தைத் தோண்டி அந்தச் சிவலிங்கத்தை வெளியே எடுத்தனர்.



அந்தச்சிலை 3 அடி உயரத்திலும் (110 செ.மீ), 3 அடி அகலத்திலும் அழகுற வடிவமைக்கப்படிருந்தது.

இதுதொடர்பாக, அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தொல்லியல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் கூறுகையில், இந்தச் சிலை கி.பி.10 நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்தைச்சேர்ந்தது. இந்தச்சிவலிங்கம் எவ்வித அலங்காரமும் இன்றி, எளிய வடிவில் காட்சியளிக்கிறது"- என்றார்.

மேலும் அவர் கூறுகையில், இந்தச் சிவலிங்கம் கொள்ளிடம் ஆற்றில் சுமார் 20 அடி ஆழத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளதால், அந்தப் பகுதியில் உள்ள கோயிலைச் சேர்ந்ததாக இருக்கலாம். வெள்ளத்தில் கோயில் சிதிலமுற்று, லிங்கம் நீரால் அடித்து வரப் பட்டு வந்து ஆற்றில் புதைந்திருக்கலாம். அதனால் கண்டெடுக்கப்பட்ட பகுதிகளில் கோயில் ஏதாவது உள்ளதா? என்றும் நாங்கள் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளோம் என்று தெரிவித்தார். (வ)

## பொருளாதாரத் துறைக்கான நோபல் பிரான்ஸ்காரருக்கு



இந்தவருடத்துக்கான பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசு, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் திரோலுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையின் வலிமை மற்றும் அதை முறைப்படுத்தும் விதங்கள் குறித்த இவரது தொடர் ஆராய்ச்சியை கௌரவிக்கும் வகையில் நோபல் பரிசு அளிக்கப்படுவதாக ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச சந்தைகளில் பலமுறை ஏற்பட்ட தோல்விகளுக்கான காரணங்கள் குறித்து ஜீன் திரோல் தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டார். தனிநபரோ அல்லது நிறுவனமோ சந்தை நிலைவரத்தில் ஆதிக்கம் செலுத்துவது மற்றும் பல நிறுவனங்கள் இரகசிய கூட்டுச் சேர்ந்து சந்தையைத் தீர்மானிப்பது ஆகியவற்றில் அரசு தலையிட வேண்டியதன் அவசியத்தை ஜீன் திரோனின் ஆய்வுகள் வலியுறுத்தின. இதையும் நோபல் பரிசுக் குழு தனது பாராட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசு 1969 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டில் இந்திய பொருளாதார நிபுணரான அமர்த்தியா சென் நோபல் பரிசு பெற்றார். கடந்த 45 ஆண்டுகளாக வழங்கப்படும் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை இதுவரை ஒரேயொரு பெண் மட்டுமே பெற்றுள்ளார். (வ)

# தாய் நாட்டை மீட்பதற்காக ஈராக்கியரே போராடவேண்டும்

## அமெரிக்கா தெரிவிப்பு



பக்தாத், ஒக்.15

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு படிப்படியாக முன்னேறிவரும் நிலையில், தாய் நாட்டை மீட்பதற்காக ஈராக்கியர்கள்தான் அந்த அமைப்புக்கு எதிராகப் போரிட வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி ஞாயிற்றுக்கிழமை எகிப்து தலைநகர் கெய்ரோவுக்கு சென்றிருந்தார். அந்தநாட்டு அதிபர் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சரை சந்தித்துப் பேசினார். அப்போது, போரால் பாதிக்கப்பட்ட பலஸ்தீனத்தின் காஸா பகுதியின் புனர்நிர்மாணத்துக்காக நிதி திரட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதன்பின்னர் கெய்ரோவில் செய்தியாளர்களிடம் ஜான் கெர்ரி கூறியதாவது:

"தாய்நாட்டை மீட்பதற்காக ஈராக்கியர்கள்தான் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக போரிட வேண்டும். குறிப்பாக ஐ.எஸ். அமைப்பினர் அன்பர் மாகாணத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றி உள்ளனர். அங்கு வசிப்பவர்கள் ஈராக்கியர்கள். அவர்கள்தான் அந்த அமைப்புக்கு எதிராகப் போரிட வேண்டும். அதே நேரம், ஈராக் ராணுவத்தின் பலத்தை அதிகரிக்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது. அதற்கு சிறிது காலம் பிடிக்கும்.

இதுபோல்சிரியாவின்கொபானே நகரையும் கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஐ.எஸ். அமைப்பு முயன்று வருகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்குக் கூட்டுப்படையை அமைக்கச் சிறிது காலம் பிடிக்கும் என்று முன்பிருந்தே கூறி வருகிறோம். இப்போது ஐ.எஸ். அமைப்பை எதிர்த்து போரிடுவதற்குத் தேவையான உதவியை அளிக்க 60 இற்கும் மேற்பட்ட நாடுகள் உறுதி பூண்டுள்ளன"- என்று அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் அன்பர் மாகாணத்தின் 80 சதவீத பகுதியை ஐ.எஸ். அமைப்பினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அந்தப்பகுதியில் அமெரிக்க ராணுவம் வான் வழித் தாக்குதல்களை நடத்தியும் பலன் கிடைக்கவில்லை. சிரியாவில் குர்திஷ்-இனத்தவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கொபானே நகரைக் கைப்பற்றுவதற்காக 3 வாரங்களாக ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அந்த நகரை ஐ.எஸ். கைப்பற்றினால் அதிக அளவில் மனிதப் படுகொலை நடக்கும் என ஐ.நா. எச்சரித்துள்ளது. (வ)



## மூக்கினுள் ஒரு மாதம் இருந்த அட்டைப் பூச்சி

### மருத்துவ சிகிச்சையில் அகற்றப்பட்டது

டுபாய், ஒக்.15

இளம் பெண் ஒருவரின் மூக்கின் உட்பகுதியில் இருந்த 3 அங்குல நீள அட்டை அகற்றப்பட்டது. அவர் நீச்சல் மேற்கொண்டபோது அது மூக்குக்குள் நுழைந்திருக்கலாம் என்று மருத்துவர் தெரிவித்தனர்.

பிரிட்டனைச் சேர்ந்த லிவரணி என்று 24 வயது இளம் பெண் ஒருவர் தென் கிழக்கு ஆசிய சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அவரது மூக்கிலிருந்து இரத்தம் வழிந்துள்ளது. ஒருமுறை மோட்டார் சைக்கிள் விபத்தில் கீழே விழுந்ததால்தான் இப்போது மூக்கிலிருந்து இரத்தம் வருகிறது என்று அவர் எண்ணியுள்ளார். ஒரு மாத காலம் இந்தப்பிரச்சினை அவருக்கு இருந்துள்ளது. அதன்பின்னர் பிரிட்டன் திரும்பியவுடன் மருத்துவ பரிசோதனை செய்தபோது மூக்கில் 3 அங்குல நீள அளவில் அட்டைப் பூச்சி இருப்பதை கண்டறிந்தனர். உடனடியாக சிகிச்சை செய்து அந்த அட்டையை அகற்றினர். (வ)

## 40 நாள்களுக்கு பின்னர் நேரில் தோன்றிய ஜனாதிபதி



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பொது நிகழ்ச்சியொன்றில் தோன்றியதாக தகவல் கள் தெரிவிக்கின்றன. 2011 ஆம் ஆண்டு பதவியேற்று இன்று வரை வடகொரிய ஜனாதிபதியாக விளங்கும் கிம் ஜாங் உன் சமீபத்தில் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும், சட்டசபைக்கு வருவதையும் தவிர்த்து வந்துள்ளார்.

இதனால் அவரது உடல்நலம் சரியில்லாததாகவும், இவரை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடத்தியிருக்கலாம் எனவும் அந்தநாட்டு ஊடகங்கள் செய்திகளைப் பரப்பி வந்தன.

அப்போது வடகொரியாவுக்கு எதிரியான தென் கொரியா எந்த நேரத்திலும் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் மக்களிடையே எழுந்திருந்தது.

இந்தநிலையில் சுமார் 40 நாள்கள் கழித்து, நேற்று முன்தினம் வீடமைப்புத் திட்டம் ஒன்றில் கலந்து கொண்டு அவரது உடல்நிலை மற்றும் அதிகாரம் குறித்து எழுப்பப்பட்ட யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

மேலும் அவரது வருகையைக் கண்டு அந்தநாட்டு மக்கள் மகிழ்ச்சியில் உறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு 17 பேர் உயிரிழப்பு

பக்தாத், ஒக்.15

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் மாலை 3 குண்டுகள் வெடித்தன. இந்தத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். 60 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து பொலிஸ் தரப்பினர் கூறுகையில்:

வடக்கு பக்தாத்தில் ஒரு பொலிஸ் சோதனைச் சாவடி அருகே நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

கிழக்கு பாக்தாத்தில் ஒரு புகழ்பெற்ற சந்தையின் அருகே வீதியோரத்தில் இடம்பெற்ற மற்றொரு குண்டு வெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர். 24 பேர் படுகாயம் அடைந்தனர். மேலும் பல கடைகள் முற்றிலும் சேதம் அடைந்தன. இதே போல் கிழக்கு பாக்தாத்தின் ஹபிபியா மாவட்டத்தில் இடம்பெற்ற மற்றொரு குண்டு வெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர் என்று கூறினர். (வ)

## லண்டனில் தாக்குதல் நடத்த ஐ.எஸ். திட்டம்

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு தனிநாடு உருவாக்கி உள்ளனர். தற்போது அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து அங்கு செல்லும் இளைஞர்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணைந்து சண்டையில் ஈடுபடுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறைக்கு தெரியவந்துள்ளது.

அதையடுத்து லண்டனில் பாதுகாப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் 5 பேரை ஸ்கொட்லாந்துபொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் தீவிரமாக விசாரணை நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு உண்டா? அல்லது லண்டனில் தாக்குதல் நடத்த திட்டம் உண்டா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தத் தகவலை லண்டன் மாநகர முதல்வர் பொலிஸ்ஜான்சன் தெரிவித்துள்ளார். (வ)

## எபோலா பாதித்த கினியாவில் படகு கவிழ்ந்து 18 பேர் சாவு

கோனாக்ரி, ஒக்.15

எபோலா நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கினியா நாட்டில் நடுக்கடலில் படகொன்று மூழ்கியதில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 20 பேரை காணவில்லை.

**சுமார் 61 பேர் ஒரு மரப்படகில் சுரங்கப் பணிகளுக்காக பெண்ட்டி நகருக்குச் சென்று கொண்டிருந்தனர்.**

கினியா நாட்டின் கடற்பிராந்தியத்தில் அமைந்திருக்கும் போர்காரியா பிராந்தியத்தில் இருந்துதான் கினியா, லைபீரியா மற்றும் சியர்ராலியோனி ஆகிய 3 மேற்கு ஆப்ரிக்கநாடுகளுக்கு எபோலா நோய் பரவியது.

இந்தநோய்த் தாக்கத்தால் இதுவரை 4 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக ஏற்கெனவே உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், போர்காரியா பிராந்தியத்தில் உள்ள பார்மோரியா நகரில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 61 பேர் ஒரு மரப்படகில் சுரங்கப் பணிகளுக்காக பெண்ட்டி நகருக்குச் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது கோன்டா என்ற பகுதியில் நீர்ச்சுழலில் சிக்கி அந்தப்படகு கவிழ்ந்தது.

இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 18 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். மேலும் 20 பேர் நீர்ச்சுழலில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போய்விட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த கினியா நாட்டின் கடலோர பொலிஸார் விரைந்து சென்று, நடுக்கடலில் சிக்கித் தவித்தவர்களை உயிருடன் மீட்டனர். படகு கவிழ்ந்த பகுதியில் கடந்த 3 தினங்களாக நடைபெற்ற தேடுதல் வேட்டையில் காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்று அந்தப்பிராந்திய மீன் வளத்துறை தலைவர் அலி தாம்பா கூறினார். (வ)

## கெய்ரோவில் 3 பஸ்கள் விபத்து 30 பேர் சாவு

எகிப்தில் மூன்று பஸ்கள் நேற்று முன்தினம் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 30 பேர் உயிரிழந்தனர். எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கும் ஆஸ்வான் நகருக்கும் இடையே பாலை வனத்தில் அமைந்துள்ள நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மேலும் 15 பேர் காயமடைந்தனர். மீட்புப் பணியில் 25 அம்புலன்ஸ்கள் ஈடுபடுத்தப்பட்டன. (வ)

## லிபியாவில் வன்முறையை முடிவுக்கு கொண்டு வருக

### பான் கீ மூன் வலியுறுத்து



லிபியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளனர்.

லிபியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பான் கீ மூன், அனைத்துத் தரப்பினரும் வேறுபாடுகளை களைந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

கடினமான முடிவுகளை எடுத்தால் மட்டுமே லிபியாவில் அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வர முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## காஷ்மீர் விவகாரம் தலையிட முடியாது

### ஐ.நா.அறிவிப்பு

நியூயோர்க், ஒக்.15

காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுமாறு பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐ.நா சபை நிராகரித்துள்ளது. காஷ்மீர் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காணக் கோரி ஐ.நா. சபைக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் கடிதம் எழுதியிருந்தார்.

பாகிஸ்தானின் இந்த கோரிக்கையை நிராகரித்துள்ள ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கீ மூனின் துணை செய்தி தொடர்பாளர் ஃபர்ஹான் ஹக், பிரச்னையை இருநாடுகளும் பேசி தீர்த்துக் கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளார். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பொருள் இழப்பும், சிறுசிறு உடல் உபாதைகளும் ஏற்படலாம். பிள்ளைகளால் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். இதுவரை இருந்து வந்த தீயோர் சகவாசம் முற்றிலும் நீங்கும். குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்தாலும் மகிழ்ச்சியான சூழ்நிலையே நிலவும்.

**இடபம்**: பல்வேறு நன்மைகள் நிகழும். உங்கள் முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். அதே வேளை பொருள் விரயமும் வேலை யில் பின்தங்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். அதே நேரத்தில் எந்தப் பிரச்சினைகளையும் முறியடிக்கும் வல்லமைகளும் பெறலாம்.

**மிதுனம்**:சற்று சிரத்தை எடுத்தால் சாதனைகள் செய்யலாம். குடும்பத்தில் அன்பு நீடிக்கும். ஆனால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். உத்தியோகம் பார்ப்பவர்கள் அனுகூலமான பலனை எதிர்பார்க்க முடியாது. வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்**: பல்வேறு திருப்பங்கள் நிகழும். சிற்சில குழப்பங்கள் வந்தாலும் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். அனைத்திலும் நன்மையே கிடைக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**சிங்கம்**: குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். கடந்த காலமாக தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கைகூடும். அதுவும் நல்ல வரனாக அமையும். குடும்பத்தில் நிலவிவந்த பிரச்சினைகள் தீரும். பிரிந்திருக்கும் குடும்பம் ஒன்று சேரும்.

**கன்னி**: உத்தியோகம் பார்ப்பவர்கள் பின்தங்கிய நிலை மாறி முன்னேற்றம் காண்பர். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு, சிலருக்கு முக்கிய பொறுப்பு கள் வந்து சேரும். வேலையின்றி தவிக்கும் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

**துலாம்**: பலவிதமான துறைகளில் முன்னேற்றம் கிடைக்கும். செல்வாக்கில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டாலும் அதை முறியடிக்கும் வல்லமை கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**: தெய்வ நம்பிக்கையில் அனைத்தும் சுபமாக நிகழும். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து சற்று சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். மேலதிகாரிகளிடம் அனுசரணையுடன் நடந்து கொள்ளவும்.

**தனுசு**: செயலில் வேகம் பிறக்கும். நிலம், வீடு ,மனை, வாகனம் போன்ற சொத்துக்கள் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக் கப் பெறுவார்கள். மாணவமணிகள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். கலைத்துறையினர் எண்ணம் ஈடேறும்.

**மகரம்**: உங்கள் திறமைகளுக்கு பாராட்டுகள் குவியும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகள் ஆக்கம் தரும். கூட்டுத் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்கள் அதிக லாபம் பெறுவார்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கைகூடி வரும்.

**கும்பம்**: வெப்பம் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள் ஏற்படலாம். கவனம் தேவை. மனைவி வழியில் உள்ள உறவினர்களுடன் கருத்துப் பரிமாற்றங்கள் செய்யும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை. முயற்சிகளில் தடைகளை முறியடித்து வெற்றிப் பாதையில் பயணிப்பீர்கள்.

**மீனம்**: செயல்களில் நிதானம் பின்பற்றுவது. நற்பயன் பெற உதவும். திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரம் சார்ந்த குறையை, பிறரிடம் சொல்ல வேண்டாம். பணவரவை விட, செலவு அதிகரிக்கும்.

## நாளை

**புரட்டாதி-30 வியாழக்கிழமை | 16.10.2014**

திதி: அட்டமி பி.ப.04.11 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் பி.ப.01.52 வரை

சுபநேரம்:07.32-09.02 வரை
இராகுகாலம்:01.32-03.02 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## வெற்றிக்கு வழி

## பிராணனை வசப்படுத்தல்

நம்பிக்கை நேரடியாக ஒரு மனிதனைக் குணமடையச் செய்கிறது என்று நம்பிக்கை வைத்தியர்கள் நினைக்கிறார்கள். அது தவறு. நம்பிக்கையால் மட்டுமே எல்லாம் நடந்து விட முடியாது. சில அசைக்க முடியாத அவனது நினைப்பே, நம்பிக்கையே வியாதியின் ஓர் அறிகுறி. பொதுவாக, நம்பிக்கை அவனைக் குணப்படுத்தும் என்றால்,இவன் குணமடைந்திருக்க வேண்டும். உண்மையில் பிராணனே அவர்களைக் குணப்படுத்துகிறது. பிராணனைக் கட்டுப்படுத்திய தூய மனிதன், அதைக் குறிப்பிட்ட அதிர்வு நிலைக்குக் கொண்டு வந்து, அதைப் பிறரிடம் செலுத்தி அவர்களிடம் அதுபோன்ற அதிர்வுகளை எழுப்புகிறான். நான் எவ்வளவு வெற்றிகரமாக அந்த நிலைக்கு மனத்தைக் கொண்டு வருகிறேனோ, அவ்வளவு தூரம் எனது பேச்சின் தாக்கம் உங்களிடம் மிகும். நான் ஊக்கத்துடன் பேசும்போது நீங்களும் என் பேச்சை மகிழ்ந்து அனுபவிப்பீர்கள். நான் சற்று ஊக்கம் குன்றிப் பேசினால் உங்களுக்கும் கேட்பதில் விருப்பம் இருப்பதில்லை. இது உங்களுக்குத் தெரிந்ததே. உலகையே அசைக்கின்ற மாபெரும் சங்கல்ப வலிமை பெற்ற தீரர்கள் உலகில் தோன்றுகின்றனர். அவர்கள்தங்கள்பிராணனை மிகவுயர்ந்த அதிர்வு நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். அது கணத்தில் மற்றவர்களைப் பற்றிக்கொள்கின்ற அளவுக்கு ஆற்றலும் வேகமும் உடையதாக இருக்கிறது, ஆயிரக்கணக்கானோர் அவர்பால் ஈர்க்கப்படுகின்றனர், உலகில் பாதிப்பேர் அவர்கள் நினைப்பது போலவே நினைக்கின்றனர். உலகின் மாபெரும் தீர்க்க தரிசிகள் பிராணனை அற்புதமாக வசப்படுத்தியிருந்தனர். இது அவர்களுக்கு மிகுந்த சங்கல்பத்தை அளித்தது. அவர்கள் தங்கள் பிராணனை இயக்கத்தின் மிகவுயர்ந்தநிலைக்குக்கொண்டு வந்ததால் உலகையே அசைக்கவல்ல ஆற்றல் பெற்றனர். பிராணனை வசப்படுத்துவதால் எல்லா ஆற்றல்களும் கிடைக்கின்றன. இந்த ரகசியத்தை மனிதன் அறியாதிருக்கலாம். ஆனால் இது தான் விளக்கம். நான் எவ்வளவு வெற்றிகரமாக மனத்தைக் கொண்டு வருகிறேனோ அவ்வளவு தூரம் என் பேச்சின் தாக்கம் உங்களை வெற்றிகரமான இந்த நிலையில் நான் வென்று விட்டேன் என்று கூறுகிறது.

# கடற்கரை அருகே மணல் திட்டில் மனித முகம்

தென் மேற்கு பிரிட்டனின் டேவொன் மாநிலத்திலுள்ள கடற்கரை நகரமான சல்கொம்பேயில் கடலுக்கு அண்மையிலுள்ள மணல் திட்டின் புகைப்படமே மேலே உள்ளது!



பார்க்க தாடி வைத்த அழகிய மனிதனின் முகம் போன்று தென்படும் இது இயற்கையாக அமைந்த அதிசயமாகும். இதனைப் புகைப்படம் எடுத்த ஜேம்ஸ் நோர்ட்டொன் என்பவர் தனது முகப்புத்தகத்தின் பக்கத்தில் பகிர்ந்ததன் மூலம் இது 500 இற்கும் மேற்பட்ட 'லைக்' களையும் பல பின்னூட்டங்களையும் பெற்று பிரபல்யம் அடைந்துள்ளது. மேலும் இந்த மனித முகம் லார்ட் ஓஃப் தி ரிங்க்ஸ் திரைப்படத்தில் வரும் புனைவுப் பாத்திரமான (Treebeard) ரீபேர்ட்டை நினைவு படுத்துவது போல் உள்ளதாகக் கூறப்படுகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 3 | 4 | 9 | 2 | | |
| | | 5 | | 7 | | 3 | 9 | 6 |
| | | | | 5 | | | | 7 |
| | 5 | | | 2 | | 4 | | 9 |
| 4 | | 9 | | | | 7 | | 3 |
| 7 | | 6 | | 9 | | | 5 | |
| 3 | | | | 8 | | | | |
| 2 | 8 | 7 | | 1 | | 9 | | |
| | | 4 | 7 | 3 | 2 | | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 9 | 6 | 1 | 3 | 4 | 5 | 7 |
| 5 | 1 | 6 | 7 | 4 | 9 | 3 | 8 | 2 |
| 4 | 7 | 3 | 5 | 2 | 8 | 6 | 9 | 1 |
| 6 | 5 | 2 | 3 | 9 | 7 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 2 | 6 | 1 | 7 | 3 | 5 |
| 1 | 3 | 7 | 4 | 8 | 5 | 9 | 2 | 6 |
| 7 | 2 | 5 | 8 | 3 | 4 | 1 | 6 | 9 |
| 3 | 9 | 4 | 1 | 5 | 6 | 2 | 7 | 8 |
| 8 | 6 | 1 | 9 | 7 | 2 | 5 | 4 | 3 |

## அருணோதய மாணவன் நெப்தலிஜொய்சன் சாதனை



யாழ்ப்பாணம்.ஒக்.15
இலங்கை பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 84ஆவது தேசிய மட்ட ஜோன் கப்பற் தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் க.நெப்தலிஜொய்சன் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 4.20 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். இதற்கு முன்னதாக 2012 ஆம் ஆண்டு அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் வலணன் 3.77 மீற்றர் உயரத்தைப் பாய்ந்தமையே சாதனையாக இருந்து வந்தது. தற்போது நெப்தலிஜொய்சன் இந்தச் சாதனையை முறியடித்துள்ளார்.

இதேவேளை- 2014 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் 3.90 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப் பெற்ற இவர், தங்கப்பதக்கத்தை வென்றிருந்ததுடன், தேசிய கனிஷ்ட மட்டப் போட்டியில் 3.96 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதிய சாதனையையும் நிலைநாட்டியிருந்தார். (ரி- 23)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 30ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட அணி சார்பாகக் கலந்து கொண்ட மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய மாணவன் ஜொர்ச் அன்ரு டிலக்சன், 21 வயது பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 1.90 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார். குறித்த மாணவன் பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட், உடற்கல்வி ஆசிரியரும் பயிற்றுவிப்பாளருமான ஆசிரியர் எஸ்.சிறிதேவகரன் மற்றும் உடற்கல்வி ஆசிரியை ஜே.றூபா தேவராசா ஆகியோருடன்

## ஞானமுருகன் வெற்றி

யாழ்ப்பாணம்.ஒக்.15
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## செபஸ்தியான், சென்.மேரிஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேறின

எதிரணிகளை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறின வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகம், கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் என்பன.

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகமும் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தின் முற்பாதியின் 14 ஆவது நிமிடத்தில் அலக்ஸும், பிற்பாதியில் 25 ஆவது நிமிடத்தில் வினித்தும் கோல்போட சென்.செபஸ்தியன் அணியின் வெற்றி உறுதியானது. தொடர்ந்தும் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதியபோதும் கோல்களைத் தொடர்ந்து அடிக்க முடியாத சூழ்நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் சென். செபஸ்தியார் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும், செம்பியன்பற்று சென் பிலிப் நேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் ஆட்டத்தின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென். மேரிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக அருமை ரஜனி மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் ராஜ்குமார் 2 கோல்களையும் அடித்தனர்.

சென்.பிலிப் நேரிஸ் அணி சார்பாக யஹல்ரன் ஒரு கோல் போட்டார். (ரி- 108)

## கோல் மழை பொழிந்தனர் திக்கம் இளைஞர்கள் பொற்பதி சென்.பீற்றர்ஸ் அணி பரிதாப தோல்வி

யாழ்ப்பாணம்.ஒக்.15
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி கோல் மழை பொழிந்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லையென நிரூபிக்கும் முகமாக கடுமையாக முட்டி மோதிக் கொண்டனர். இதனால் ஆட்டம் பார்வையாளர்களுக்கு விருந்தாக அமைந்தது. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரர் அகில தீபன் கோல் ஒன்றைப் போட ஆட்டம் மேலும் இறுக்கமடைந்தது. இதனை அடுத்து ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணி வீரர்களுடன் கடுமையாக மோதிக் கொண்ட போதும் அவர்களால் தமது அணிக்கான கோல்களைப் பெற முடியவில்லை. ஆட்டத்தின் 11ஆவது, 12ஆவது, 28ஆவது நிமிடங்களில் பெர்னாண்டோ, மைக்கல் ராஜ், வினோசாந் ஆகியோர் தமது அணிக்கான கோலை அடித்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்திய போது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் களம் இறங்கியதால் இரண்டாம்பாதி ஆட்டம் மேலும் விறுவிறுப்பு அடைந்தது. திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி வீரர்களான அரிகரன் 3ஆவது, 14ஆவது நிமிடங்களிலும், பார்த்தீபன் 8ஆவது நிமிடத்திலும், ஜோதாஸ் 10 ஆவது, 25ஆவது நிமிடங்களிலும், ஜெயராஜ் 16ஆவது நிமிடத்திலும் தமது அணிக்கான கோல்களை அடித்தனர். அதேவேளை ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி வீரர் ஞானதீபன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான ஒரேயொரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 10:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23-108)

## அரையிறுதியில் நவஜீவன்ஸ் அணி விசனத்தில் அல்வாய் நண்பர்கள்

ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தாலும் புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம். அதேவேளை மற்றொரு ஆட்டத்தில் போதிய வெளிச்சமின்றி தொடர்ந்து விளையாட மறுத்த அல்வாய் நண்பர்கள் கழகம் பார்வையாளர்களின் விசனத்துக்கு உள்ளாகியது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும், சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின.

இரு அணியினரும் அரையிறுதி ஆட்டத்துக்கு செல்ல வேண்டும் என்ற நிலையில் களமிறங்கியமை ஆட்டத்தின் விறுவிறுப்புக்கே குறைவில்லாமல் இருந்தது. இருபாதி ஆட்டங்களிலும் இரு அணியினரும் மாறி மாறி கோல் பிரதேசங்களை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் கோல் காப்பாளர்களின் அபார முயற்சிகளால் கோல் எதனையும் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைய இரு அணியினருக்கும் புள்ளி சமமாக வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

அடுத்த இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழகமும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதின. ஆட்டத்தில் முழுமையாகச் செல்வாக்குச் செலுத்திய யங்கம்பன்ஸ் அணி 3:0 என்று முன்னிலையில் இருந்த போது ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் இடைநிறுத்தக் கோரியது. ஆனால் விளையாடுவதற்கு போதிய வெளிச்சம் காணப்பட்டதால் தொடர்ந்து விளையாடுமாறு போட்டி நடுவர்கள் கேட்டபோதும் அல்வாய் நண்பர்கள் அணி விளையாட மறுத்தது. வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை யங்கம் பன்ஸ் அணிக்கு சாதகமான நிலை காணப்பட்ட போதும் எதிரணியினர் விளையாட மறுத்தமை தொடர்பாக பார்வையாளர்கள் விசனம் தெரிவித்தனர். (ரி- 108)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.15
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

கரணவாய்.ஒக்.15
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

* * *

வட மாகாண ரீதியில் யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது. இன்று நடைபெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில்- மாலை 4 மணிக்கு யாழ். மத்தியகல்லூரிஅணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும், பெண்களுக்கான ஆட்டத்தில் பி.ப. 3 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

## போராடி வென்றது வதிரி டயமன்ஸ்

கரணவாய்.ஒக்.15
விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 1:0 என்ற கோல் கணக்கில் கரவைச் சுடரை வீழ்த்தியது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும், கரவைச் சுடர் விளையாட்டுக்கழகமும் மோதின. இந்தப் போட்டியில் களமிறங்கிய வதிரி டயமன்ஸ் அணி பல களம் கண்டு வெற்றிவாகை சூடி பலம் பொருந்திய அணியாகக் கருதப்பட்டதுடன் அவர்களே இலகுவாக எதிரணியை வீழ்த்தி வெற்றி பெறுவார்கள் என பார்வையாளர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கும் வகையில் கரவைச் சுடர் அணியினரின் ஆட்டம் எதிரணியைத் திக்குமுக்காடச் செய்தது.

ஆனாலும் ஆட்டம் ஆரம்பமாகி 8 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் அரவிந்தன் கோல்போட ஆட்டம் மேலும் இறுக்கமடைந்தது. தொடர்ந்து இரு அணியினரும் ஆக்ரோஷத்துடன் மோதிய போதும் கோல் எதனையும் போட முடியாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (ரி- 108)



# உலகக் கிண்ண வாய்ப்பு குறைவு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி சம்பியன் பட்டம் வெல்ல வாய்ப்பு குறைவு என்று அந்த அணியின் மூத்த வீரர் சயிட் அப்ரிடி பகிரங்கமாகக் கூறியுள்ளார். இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் உலகக் கிண்ணத் தொடருக்காக அனைத்து அணிகளும் முழுவீச்சில் தயாராகி வருகின்றன. ஆனால் பாகிஸ்தான் அணி தொடர் தோல்விகளால் துவண்டுள்ளது. அந்த அணி வீரர்கள் விரக்தியின் உச்சத்தில் உள்ளதை அப்ரிடியின் பேச்சு வெளிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது : உலகக் கிண்ணத் தொடர் நெருங்கி வரும் நிலையில் எங்கள் அணியின் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக உள்ளது. துடுப்பாட்ட வீரர்களால் களத்தில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இதே நிலை நீடித்தால் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் வெற்றி பெறுவது சந்தேகம்தான். எங்கள் அணியின் பந்து வீச்சு மட்டும் சற்று ஆறுதலாக இருக்கிறது என்று அவர் கூறினார். (ரி)

# உரிமை ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் வசம்

2015ஆம் ஆண்டில் இருந்து அடுத்த 8 ஆண்டுகளுக்கு சர்வதேச ஆட்டங்களை ஒளிபரப்பும் உரிமையை ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது.

குறித்த நிறுவனம் 2015 தொடக்கம் அடுத்த 8 ஆண்டுகளுக்கான சர்வதேச கிரிக்கெட் தொடர்களை ஒளிபரப்புச் செய்வதற்கான உரிமையை 12ஆயிரம் கோடி ரூபா செலுத்தி சர்வதேச கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த 8 ஆண்டு காலப் பகுதியில் 2019, 2023 உலகக் கிண்ணத் தொடர்கள், 2017, 2021 சம்பியன்ஸ் கிண்ணத் தொடர், 2016, 2020 ரி- 20 உலகக் கிண்ணத் தொடர் போன்ற முக்கியமான தொடர்களை ஒளிபரப்பும் உரிமையை அந்த நிறுவனம் பெற்றுள்ளது. ஏற்கனவே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரை ஒளிபரப்பும் உரிமையையும் குறித்த நிறுவனமே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் அஸ்வின்



மேற்கிந்தியதீவுகளுக்கெதிரான ஒருநாள் தொடரில் எஞ்சியுள்ள இரு போட்டிகளில் இருந்தும் அஸ்வின் புறக்கணிக் கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் விளையாடி வருகிறது. இதில் முதல் இரண்டு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருந்த நிலையில் நேற்று நடைபெறவிருந்த ஆட்டம் ஹீட்ஹீட் புயலின் பாதிப்பினால் கைவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடைசி இரண்டு ஆட்டங்களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஒரேயொரு ரி- 20 ஆட்டத்துக்குமான அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் மூன்று ஆட்டங்களுக்கான அணியில் ஓய்வு என்று கூறி நீக்கப்பட்ட தமிழக வீரர் அஸ்வின் கடைசி இரு ஆட்டங்களில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதுடன், ரி- 20 அணியிலும் இடம்பிடிக்கப்படவில்லை. ஒருநாள் அணியில் அக்சர் பட்டேல் புதிதாக இடம் பிடிக்கவில்லை. அதேவேளை ரி- 20 அணியில் மனிஷ் பான்டேவுடன் அக்சர் பட்டேலும் இடம்பிடித்துள்ளார்.

ஒருநாள் அணி : டோனி, தவான், ரகானே, கோஹ்லி, ரெய்னா, ராயுடு, ஜடேஜா, மிஸ்ரா, புவனேஸ்வர் குமார், சமி, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், முரளி விஜய், குல்தீப் யாதவ்.

ரி- 20 அணி : டோனி, தவான், ரகானே, கோஹ்லி, ரெய்னா, பின்னி, ஜடேஜா, அக்சர் பட்டேல், கரன் சர்மா, புவனேஸ்வர் குமார், சமி, சாம்சன், மனிஷ் பாண்டே, உமேஷ் யாதவ். (ரி)

# சோதனை மேல் சோதனை



ஏற்கனவே ஆஸ்திரேலியாவுக்கு எதிராக படுதோல்வியைச் சந்தித்து மனம் வெதும்பிய நிலையில் இருக்கும் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் தற்போது புதிய சிக்கலில் மாட்டியுள்ளார். 3.9 மில்லியன் இந்திய ரூபாய் வரை அவர் வரி செலுத்தாத காரணத்தால் அவரது வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. மற்றொரு பாகிஸ்தான் வீரர் அசார் அலியின் வங்கிக் கணக்குகளும் வரி செலுத்தாத காரணத்தால் முடக்கப்பட்டுள்ளன. 3.9 மில்லியன் ரூபாய்கள் மிஸ்பா வரி செலுத்தாமல் தப்பியுள்ளதாகக் கூறிய வருவாய்த்துறை, அசார் அலி 1.5 மில்லியன் ரூபாய்கள் வரி செலுத்தவில்லை என்று தெரிவித்துள்ளது. ஆன்னல், வருவாய்த்துறை கூறும் தொகை மீது பிரச்சினை உள்ளது . எனவே இதற்கு எதிராக சட்ட ரீதியாகப் போராடுவேன் என்று மிஸ்பா கூறியுள்ளார். இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட மிஸ்பா உல் ஹக் மற்றும் அசார் அலி ஆகியோர் பாகிஸ்தான் நிதியமைச்சரையே சந்தித்துப் பேசியதாகவும் மிஸ்பாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரி)

# சீனிவாசனுக்கு தடை இல்லை

இந்தியகிரிக்கெட்சபைத்தலைவர்பதவிக்குஎன்.சீனிவாசன்போட்டியிட தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் குறித்து விசாரணை நடத்தி முதல் அறிக்கை தாக்கல் செய்த முத்குல் குழுவினர், என்.சீனிவாசன் உட்பட 13 பேர் மீது குற்றஞ்சாட்டி இருந்தது. இதனை அடுத்து இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து என்.சீனிவாசன் ஒதுங்கி இருக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

செப்ரெம்பர் மாதம் நடக்க இருந்த இந்திய கிரிக்கெட் சபையின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அடுத்த மாதம் 20ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டது. குறித்த பொதுக்குழு கூட்டத்தில்நடக்கவுள்ளபுதியநிர்வாகிகள்தேர்தலில்என்.சீனிவாசன் மீண்டும் தலைவர் பதவிக்கு போட்டியிடுவார் என்று தெரிகிறது. இந்த நிலையில் பீகார் கிரிக்கெட் சங்கம் சார்பில், குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கும் என்.சீனிவாசன் தலைவர் பதவிக்கு போட்டியிட தடை விதிக்க வேண்டும் என்றும், செப்ரெம்பர் மாதத்துக்குள் பொதுக்குழு கூட்டத்தை நடத்தி இருக்க வேண்டும். பொதுக்குழு நடத்தப்படாததால் இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் பதவியில் தொடருவது சட்ட விரோதம் என்றும் அறிவிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்நிலையில், முத்குல் குழுவின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை பொதுக்குழுவுக்கும், என்.சீனிவாசன் தலைவர் பதவிக்கு போட்டியிடவும் தடை விதிக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அத்துடன் அடுத்த உத்தரவு வரும் வரை என்.சீனிவாசன் தலைவர் பதவியை ஏற்க முடியாது என்ற பழைய உத்தரவு நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

# பிளாஸ்டர்ஸ்ஸை வென்றது நோர்த் ஈஸ்ற்

பரபரப்பான ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி அணியை வெற்றி பெற்றது நோர்த் ஏஸ்ற் யுனைற்றட் எப்.சி

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி. அணியை எதிர்த்து நோர்த் ஈஸ்ற் யுனைற்றட் எப்.சி. அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முதல் பாதியில் கடைசி நேரத்தில் நோர்த் ஈஸ்ற் யுனைற்றட் அணி கோல் ஒன்றை அடித்து முன்னிலை பெற்றது. தொடர்து 2ஆவது பாதியில் பரபரப்புடன் ஆட்டம் தொடர்ந்தது. பதில் கோல் அடித்து கோல் கணக்கை சமன் செய்ய கேரளா பிளாஸ்டர்ஸ் வீரர்கள் கடுமையாக முயற்சித்தனர். எனினும் ஆட்டத்தின் முடிவு வரை கோல் எதுவும் கிடைக்கவில்லை. இதையடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் நோர்த் ஈஸ்ற் யுனைற்றட் எப்.சி வெற்றி பெற்றது. (ரி)



# தலைவர் பதவி வேண்டாம்





உலகக்கிண்ணத் தொடருக்கு பாகிஸ்தான் அணியின் தலைவராக இருக்க விரும்பவில்லை என்று பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் கூறியுள்ளார்.

துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட முடியாததால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தின் போது அணியில் இருந்து மிஸ்பா விலகினார். உலகக் கிண்ணத் தொடர் வரை பாகிஸ்தான் அணித்தலைவராக மிஸ்பா உல்ஹக் இருப்பார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்கனவே கூறியுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் தோல்விக்குப் பிறகு மிஸ்பா இது தொடர்பாக கூறுகையில்; சமீபகாலமாக என்னால் அதிக ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை. சிறப்பான ஆட்டத்தை விளையாட முடியவில்லை என்று எனக்கே நன்றாகத் தெரிகிறது. இந்த சூழ்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியையும், நாட்டையும் மனதில் வைத்து முடிவெடுக்க வேண்டியுள்ளது. அணியை கடினமான சூழ்நிலைக்கு தள்ள விரும்பவில்லை. எனவே, இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவெடுக்க வேண்டும். அணியில் தலைவராக தொடர எனக்கு விருப்பமில்லை என்றார்.

மிஸ்பாவின் இந்த அறிவிப்பு குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான் கூறுகையில்; உலகக்கிண்ணத் தொடர் வரை மிஸ்பா உல்ஹக் தலைவராக இருப்பார் என கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது. இதற்குப் பிறகு அவர் வேறு முடிவு எடுப்பது அவரது கையில் உள்ளது. அவர் சரியாக விளையாடவில்லை என்று நாங்கள் எப்போதும் குறை கூறியது இல்லை. மிஸ்பா அணிக்கு தலைமை வகித்தால் அவருக்கு அனைத்து வகையிலும் உதவிகரமாக கிரிக்கெட் சபை இருக்கும் அதே நேரத்தில், அவரை எந்தவகையிலும் நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் விளையாடாமல் இருந்தது மிஸ்பாவின் முடிவுதான் - என்றார். (ரி)

# பணம் கொட்டும் ஐ.எஸ்.எல்





நடைபெற்றுவரும் இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் பெற்றுக் கொள்ளும் பணவிவரம் வெளிவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வீரர்களில் இத்தாலியை சேர்ந்த அலெக்சாண்டரோ டெல்பியரோ ஐ.எஸ்.எல். போட்டியில் அதிக பணம் பெறுகிறார். அவர் டெல்லி டைனமோஸ் அணிக்கு ஒப்பந்தமாகி இருக்கிறார். டெல்பியரோ ரூ.11 கோடி பெறுகிறார். அவர் 2006ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற இத்தாலி அணியில் இடம் பெற்று இருந்தார். இதனால் அவரது மதிப்பு அதிகமாக இருக்கிறது. அவர் சிறந்த முன்கள வீரர் ஆவார்.

அவருக்கு அடுத்தப்படியாக பிரான்ஸ் வீரர் நிகோலஸ் அனேல்கா 5.4 கோடி ரூபாய் பெறுகிறார். அவர் மும்பை சிட்டி அணியில் விளையாடுகிறார். சென்னையின் எப்.சி. அணியில் விளையாடும் பிரேஸில் வீரர் எலனோ 4.8 கோடி ரூபாயும், புனே அணியில் ஆடும் பிரான்ஸ் வீரர் டேவிட் டிரெஸ்கெட் 4.5 கோடி ரூபாயும், கோவா அணியில் ஆடும் மற்றொரு பிரான்ஸ் வீரர் ராபர்ட் பியர்ஸ் 4.1 கோடி ரூபாயும் பெறுகிறார்கள்.

இந்திய வீரர்களில் அதிகபட்சமாக மும்பை அணியின் கபர்தோ பவுல் செய்யது ரகீம், சென்னையின் கவுரமாக்கி சிங் ஆகியோர் தலா 80 லட்சம் ரூபா பெறுகிறார்கள். (ரி)

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள பிடியெடுப்பு



கடைசி ஓவரில் 2 ஓட்டங்ககளை எடுக்க முடியாமல் 2 இலக்குகளைப் பறிகொடுத்த பாகிஸ்தான் தோற்ற 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில்ல் ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் பிடித்த கேட்ச் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 232 ஓடங்களை வெற்றி இலக்கத் துரத்தியது. அப்போது ஆட்டத்தின் 18ஆவது ஓவரில் ஆஸ்திரேலிய வீரர் சேவியர் டோஹெற்றி பந்து வீச அழைக்கப்பட்டார். அவர் வீசிய பந்தை பாகிஸ்தானின் இடது கை துடுப்பாட்ட வீரர் பவாத் அலாம் எதிர்கொண்டார். இடது கை துடுப்பாட்ட வீரருக்கு ஸ்லிப் திசையில் நின்று கொண்டிருந்தார் ஸ்டீவ் ஸ்மித். அலாம் பந்தை ஸ்வீப் செய்ய ஆயத்தமானவுடன் ஸ்லிப் திசையில் நின்று கொண்டிருந்த ஸ்டீவ் ஸ்மித் உடனடியாக லெக் ஸ்லிப்புக்கு ஓடினார். அப்போது பந்து வீசப்பட்டு வந்து கொண்டிருந்தது. ஸ்டீவ் ஸ்மித் லெக்ஸ் லிப்புக்கு செல்வதை அலாம் கவனிக்க வாய்ப்பில்லை. இந்த நிலையில் லெக் ஸ்லிப் திசையில் அவர் அடித்த பந்தை ஸ்மித் பிடியெடுத்தார்.

ஒரு களத்தடுப்பாளர் இப்படிச் செய்ய முடியுமா? விதிமுறை அவருக்குச் சா[illegible]தகமா? என்ற கேள்விகளுடன் அலாம் மைதானத்தை விட்டு வெளியேறாமல் நிற்க, கள நடுவர்கள் ஆலோசனையில் ஈடுபட்டு அதனை ஆட்டமிழப்பு என்று தீர்ப்பளித்தனர்.

ஆ[illegible] [illegible]ால விதிமுறைகளின்படி, பந்து வீசப்பட்டு அது துடுப்பாட்ட வீரரை வந்தடைந்து அவர் அதை ஆடுவதற்கு முன்பாக எந்த ஒரு களத்தடுப்பாளரும் தங்கள் இடத்தை விட்டு நகர்வது கூடாது. இப்படி நடந்ததாக நடுவர்கள் கருதும் அத்தகைய தருணத்தில் பந்தை அனுமதித்திருக்கக் கூடாது. ஆனால் ஐ.சி.சி. சமீபமாக இந்த விதிமுறையை சற்[illegible] தளர்த்தியுள்ளது. அதாவது துடுப்பாட்[illegible]ரரின் பந்துக்கான முன்கூட்டிய நகர்[illegible]லுக்கு ஏற்ப, பந்து அவரை அடையும் முன்பே, அருகில் இருக்கும் களத்தடுப்பாளர் தங்களது நிலையை மாற்றிக் கொள்ளலாம் என்று விதிமுறையை ஐ.சி.சி. தளர்த்தியுள்ளது. அதன்படி ஸ்மித் ஸ்லிப்பிலிருந்து லெக் ஸ்லிப்புக்கு நகர்ந்து பிடியெடுப்பை மேற்கொண்டமை செல்லு[illegible]ாகும் என்று ஐ.சி.சி கூறியுள்ளது. (ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் பாலசுப்பிரமணியம்
### (ஓய்வு பெற்ற ஆசிரியை)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) நேற்று(14.10.2014) செவ்வாய்க்கிழமை அம்பாளின் திருவடியை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற முத்தையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (ஓய்வு பெற்ற உபஅதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், இந்திரா (ஆசிரியை ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), பாலகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அம்மாவும் குலராஜன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தி அதிகார சபை, பருத்தித் துறை), நடேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பான மாமியும் பரமேஸ்வரி, சிவலிங்கம், பராசக்தி, சிவஞானம் (கனடா), சிவானந்தம் சிவராசா(லண்டன்) ஆகியோரின் அன்புக்குரிய மூத்த அக்[illegible]வும், Dr.பற்குணா[illegible] (ஓய்வு பெற்றவர்), காலஞ் சென்ற மகேசன் மற்றும் அம்பிகாதேவி, கனகாம்பிகை (கனடா), அருந்தவமலர், நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமிர்தாயினி (பிரான்ஸ்), சாயிராம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.10.2014) ப[illegible]னக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி[illegible] காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செ[illegible]ப 3 மணியளவில் [illegible]சயயப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உ[illegible]றவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

AIRMARK
Travels & Tours
• அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுகள்
• சுற்றுலா ஏற்பாடுகள்
0777721235
18 YERS
IATA
துணை முகவர்களுக்கு விசேட விலைக்கழிவு
212 Palaly Rd Jaffna. 021 222 4777

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் பணியாற்றும்
ஆசிரியர் திருமதி **தனுஷா புஷ்பாகரன்** அவர்கள்
29.09.2014 கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைமாணி (BA) பட்டம் பெற்றமையைப் பாராட்டுவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்த சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிகழகம்,
மு/உடுப்புக்குளம் த.வி அளம்பில்-முல்லைத்தீவு.
(சி/17008) (4.3.6)



# Vacancies

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும். (age 20-25)

**Assistant Center Manager - Male**

The applicant should posses a computer Degree qualification for Higher Diploma from Government Institution (age 24-30)

**Lecturer for Java, C, C++ - Male / Female**

**Management Trainee - Male / Female**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net


# 27 மாதர் சங்கங்களுக்கு மட்டக்களப்பில் நிதியுதவி

போரதீவுப்பற்று, ஒக். 15

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட 27 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஒரு சங்கத்திற்கு தலா ஒரு லட்ச ரூபா வீதம் 27 லட்சம் ரூபா கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

போரதீவுப் பற்று பிரதேச செய லகத்தில் பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மீள் குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் போரதீவுப்பற்று பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கணேசமூர்த்தி. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கே.உதயகுமார், மீள்குடியேற்றப் பிரதியமைச் சரின் இணைப்புச் செயலாளர் பொன்.ரவீந்திரன் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போரதீவுப் பற்று பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 11 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு மட்பாண்டம் உருவாக்கப் பயன்படும் காற்சக்கர இயந்திரங்கள் தலா ஒன்று வீதம் வழங்கப்பட்டன.

ஒரு பயனாளிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியில் 11 பயனாளிகளுக்கும் 3லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மட்பாண்டம் செய்யும் காற் சக்கர இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிலையில் இந்தத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மீனவருக்கு ஒரு தோணி வீதம் 7 மீனவர்களுக்கு தோணிகள் வழங்கப்பட்டன. ஒரு பயனாளிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியில் 7 மீனவர்களுக்குமாக 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தோணிகளும் இதன் போது வழங்கப்பட்டதாக போரதீவுப்பற்று பிரதேச வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.உதயகுமார் தெரிவித்தார். (த-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற யோகாநந்தக்குருக்கள் வக்சலா தம்பதியினரின் செல்வப்புதல்வன்
**செல்வன் சஞ்சுதசர்மா**
2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 184 புள்ளிகளைப் பெற்று கோட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.
அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் பல கலைகளைப் பெற்று மேன்மேலும் சிறந்து விளங்க நடராஜாஇராமலிங்கேஸ்வரர் அருளுடன் மனமார வாழ்த்துகின்றோம்.

Congratulation

சிவன் வீதி,
ஆவரங்கால். (53233)(5-6-3)

சிறீதரசர்மா மாமா குடும்பத்தினர்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி விஜயசேகரம் வினோதினி

செல்வி அன்ரன் எட்வேட் மேரி எரோமி

எமது பாடசாலையில்
2014 தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற மாணவி செல்வி விஜயசேகரம் வினோதினி அவர்களையும் தேசிய மட்டத்தில் மெய்வன்மைப் போட்டிகளில் (200 m,400m ஓட்டம்) பங்குபற்றி பெருமை சேர்த்த செல்வி அன்ரன் எட்வேட் மேரி எரோமி அவர்களையும் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று உயர்வடைய இன்றைய பரிசில் நாளில் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம் யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்.


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2014* *Date: 15.10.2014.*

### விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணிவரை, 15.10.2014ஆம் திகதி தொடக்கம் 04.11.2014ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல் chairmanvsps@gmail.com web:· vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 15.10.2014 முதல் 04.11.2014 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைக்கேள்விகள் 05.11.2014ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விவரத்தினை கடிதவுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 05.11.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.
06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 23.10.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த [illegible] தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | குப்பிளான் மின்திரை வீதி திருத்தம் | 4.09 | 03 மாதம் | M7/C8 | 40,000.00 |
| 2 | உடுவில் உதயசூரியன் வீதி திருத்தம் | 2.05 | 03 மாதம் | M7/C8 | 20,000.00 |
| 3 | புன்னாலைக்கட்டுவன் விளையாட்டு மைதானம் மதில் அமைத்தல் | 2.89 | 03 மாதம | M7/C8 | 28,000.00 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C17010)


# Blast Freezer Room

## அமைத்தலுக்கான கூறுவிலை

எமது சங்கத்தின் பால்பொருள் உற்பத்திப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மில்க்லொலிகள் Frozen நிலையை விரைவில் அடைவதற்கு பின்வரும் மாதிரி அமைப்புடைய Blast Freezer Room அமைப்பதற்கு கூறுவிலை கோரப்படுகிறது.

External Dimensions: 8ft x 6ft x 8ft high
Temperature: - 10 - -30 degrees C
Freezing time:- <8 hours

எனவே கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் எமது சங்கத்தில் மாதிரி விவரங்களைப் பெற்று தங்களது மூடிய கூறுவிலையை 27.10.2014ஆம் திகதி பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். மேலும் கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் Blast Freezer Room அமைப்பதற்கான கூறுவிலை எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொ.பே.இல:021 321 2926

(சி17005) (12.3.6)



## நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)
## ஆடியபாதம் வீதி திருநெல்வேலி

### பதவி வெற்றிடம்

கீழ்குறிப்பிடப்படும் பதவிக்கு 18 - 45 வயதுக்குட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சங்கத்தினால் கோரப்படும் பிணையை செலுத்துதல் வேண்டும்.

**விற்பனை உதவியாளர் (308/17)**

பதவி : விற்பனை உதவியாளர்
சம்பளக்குறியீடு : 8950 - 65 X 10 - 70 X 10 - 10300
(06/2006இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

* கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

* 08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்பப் படிவங்களை சங்க காரியாலயத்தில் பெற்று, விண்ணப்பங்களை **30.10.2014**ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமை யாளர், நல்லூர், பல நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், தகுதியற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் பல நோ.கூ.சங்கம்.

(சி17006) (12.3.6)

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



## மகாதேவன் முகுந்தன்

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில்
ஆசிரிய பணியை அர்ப்பணிப்புடன் நல்கி,
கற்பித்தலில் இணைப்பாட விதான செயற்பாடு,
பௌதிகவள அபிவிருத்தி, கல்லூரியின் அழகிய
கவின் நிலை போன்ற சகலதுறைகளிலும் அதிக
முன்னேற்றங்களையும் நிலைநாட்டி,
ஆசிரியர்களுக்கான அதியுயர் விருதான
"பிரதீப பிரபா" விருதினைப் பெற்றதையிட்டு
உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(53243)(10)

**பழைய மாணவர் சங்கம்**
**மானி. மகளிர் கல்லூரி**

# மரண அறிவித்தல்



## சாம்பசிவம் தயாளன் (தயா)

யாழ். நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சாம்பசிவம் தயாளன் நேற்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாத்துரை சாம்பசிவம்-சறோஜினி (இந்தியா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வண்ணச்சாமி- இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜீவாவின் (இந்தியா) அன்புக் கணவரும், லோகேந்திரா (லோகா-கனடா), கோபிநாத் (கோபி-இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாஸ்கரன் (பாசு), ஜனகன் (ஜனா-கனடா), கௌதமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பா.சித்திரா, ரகுநாதன் (ரகு-ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், ரனுஜன், அனுஜன், சஞ்சிகா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2014) புதன்கிழமை கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு அருகில் உள்ள S. இன்பம் அந்தியகால சேவை மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக் காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(53244)(10)

தகவல்: குடும்பத்தினர்.
இந்தியா, கனடா.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13.08.1932 — உதிர்வு 27.09.2013

## அமரர் சுப்பிரமணியம் கனகரத்தினம்

ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது
மாண்டு நீர் போனாலும் மனதிலே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர் ஐயா!

எம்மை வழிநடத்திய கலங்கரை விளக்கே!
என்றும் நாம் மறக்கவே மாட்டோம்
உம்மை நினைந்தே நாமிங்கு வாழ்கின்றோம்
உத்தமரே பெற்றிடுக சாந்தி!

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (16.10.2014) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

பிரதான வீதி,
தொண்டமனாறு.

கனகரத்தினம் குடும்பத்தினர்.


# உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## வாசிப்பு மாத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 15

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தையொட்டி எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் முன்பள்ளி மாணவர்களிடையே உயிர்மெய் எழுத்துக்களை இனம் காணுதல், வர்ணம் தீட்டுதல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

கதையும் காட்சியும் மழலைகள் வீடியோ நிகழ்ச்சியும் இனிப்புடனான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன என நூலகர் திருமதி பூ.பாலபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்



## திருமதி தனகுணபதி(சறோ) தம்பிராசா(அப்பையா)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனகுணபதி(சறோ) தம்பிராசா கடந்த(13.10.2014) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-பாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசாவின் (அப்பையா) அன்பு மனைவியும், வசந்தமலர்(வசந்த-கனடா), வசந்தராஜா(வெள்ளை-ஜேர்மனி), வரதராஜா(வவா-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசகுந்தலா, தேவராஜா (கனடா), பரராஜசிங்கம் இராமேஸ்வரி(கிளி), காலஞ்சென்ற மகாராசா மற்றும் தர்மகுலராசா(தறுமு), லோகேஸ்வரி(உசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (பாலு-கனடா), பிரபாரூடா(ஜேர்மன்), பாக்கியலக்சுமி(லலி-கனடா) ஆகியோரின் மாமியாரும் நந்தா, தாஸ், காலஞ்சென்ற நளா, நிர்மல், சபிதா, வினோத்வதனன், டிலானி, டிலக்சன், சுலக்சன், திலக்சன், வரலக்சன் ஆகியோரின் பேர்த்தியும் அபர்னன், லவர்ணன், கிரிஸ்மா, சமினா, நளின், கஸ்மினா, சயித், உதய் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.10.2014) ஞாயிற்றுக்கிழமை அன்று க்னடாவில் நடைபெறும். விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டில் உள்ள சகோதரனின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு
T.P : 0773301940 (53243) (08)

தகவல்:
ப.பரராஜசிங்கம்(சகோதரர்)

# மரண அறிவித்தல்



## ஆவுடையப்பன் அசோக்குமார்(பவா)

(வர்த்தகர்-திருநெல்வேலி சந்தை)

இல.41/1 துரைராஜா வீதி, வண்ணார் பண்ணையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆவுடையப்பன் அசோக்குமார் (பவா) நேற்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆவுடையப்பன்-கொண்டம்மாள்(இந்தியா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கவேலு(துரைச்சாமி-காரைநகர்) மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் பவானந்தியின் "(ஆனந்தி) அன்புக்கணவரும் பிரதீபன்(மருத்துவபீடம், யாழப்பாணம்-2ஆம் வருடம்), தரண்ஜா, விதுஷன்(யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரி-உயர்தரம்), அரவிந் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி(ராணி-இந்தியா), விஜயகுமரன்(லண்டன்), காலஞ்சென்ற உதயகுமார்(பாபு), சியாம்சுந்தர்(இந்தியா), சியாமளா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரா, குமுதினி, மகேஸ்வரன், இந்திரா(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். "

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.10.2014) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக ஓட்டுமடம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 021 2219945 ,
0775118306 , 0785193941
(53242 (08)

தகவல்:
அ.பவானந்தி(மனைவி), பிள்ளைகள்

## கணித விஞ்ஞான ஒலிம்பியாட்-2015

புலமைப் பரிசில் பரீட்சை-2014 இல் தோற்றி உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

15.10.2014(புதன்) மாலை 6.00மணி

SCIENCE GUIDE CENTRE
116/2, RASAVINTHODDA VEETHY, NALLUR, JAFFNA
தொடர்பு-0779005853 / 0766016580

## Computer விற்பனை

நல்ல நிலையில் உள்ள (Dual core processor, 2GB Ram, DVD writer, LED view sonic Moniter, Keyboard, Mouse, Speaker, ups) கணினி குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளது.

0774336247 (53239)


## U.S.A. Green Card Dv Visa Lottery - 2014

அமெரிக்க Green Card Visa விண்ணப்பிப்பதில் 12 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/= முத்திரையொட்டப்பட்ட சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No. 8/3/4/, Bristol Street, Colombo -11 என்னும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவுசெய்யப்படுவோரின் கவனத்திற்கு



தெரிவுசெய்யப்படுவோர் முறைப்படி விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யவேண்டியது மிக முக்கியம். இதில் தவறுகள் இருப்பின் அமெரிக்க தூதுவராலயத்தில் நேர்முகப்பரீட்சையின்போது நிராகரிக்கப்படுவார்கள். இதன்போது உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காமையும் நிராகரிக்கப்படுவதற்கு ஒரு காரணமாகும். நிராகரிக்கப்படுபவர்களுக்கு செலுத்தப்பட்ட விசா கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. பலர் இவ்வித தவறுகளால் தமது வாய்ப்பையும், பணத்தையும் இழந்துள்ளனர். ஆதலால் இது தொடர்பில் நன்கு அனுபவமும் நிபுணத்துவமும் கொண்ட எம்போன்ற ஒரு நிறுவனத்தின் ஆலோசனையை பெற்று விண்ணப்பத்தினை பூர்த்திசெய்வதே சிறப்பான வழிமுறையாகும்.

**BRISTOL CYBER CAFE**
No. 8/3/4, Bristol Street, Colombo-01.
Tel: 011 2393919, 077 4276579 Web: www.bristolcc.biz

எங்கள் நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையில் எப்பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் க.கலியுகன்
அவர்களின் அன்புத் தாய்

## திருமதி லலிதாதேவி கந்தையா

12.10.2014 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/உயரப்புலம் மெதடிஸ்த,
மிசன் வித்தியாலயம்.

(53229) (12.3.6)

# மரண அறிவித்தல்



## சென்சே கந்தையா கேதீஸ்வரன். 5th Dan

(யாழ்.மாவட்ட யப்பான் கராத்தே அசோசியேசன்(JKA)ஸ்தாபகர்,
யாழ்.மாநகரசபை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கேதீஸ்வரன் நேற்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலராணியின் (நிமால்), பாசமிகு கணவரும், சஜீவன், பானுஜன், கிஷோத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33/16, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (53231)(6.4.3)

தகவல்:
குடும்பத்தினர்.


## Computer Repair
நடமாடும் சேவை

- ★ Perfect sollution
- ★ போக்குவரத்து செலவு இல்லை
- ★ நம்பிக்கையான சேவை (53238)

07779 33338


# பணிநிலை வேண்டுகை

## புத்தகம் கட்டுநர்

மேற்குறிப்பிட்ட பணி நிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- வேண்டுகையாளர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வு 2014-10-16,17,18 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளதால் நேரில் வருகை தரவும்.

கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.


## Ranjanas CERAMIC

தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் விலைக்கழிவு

SPECIAL OFFER 30%
Condition Apply

# 212, Palaly Road,
Kantharmadam.
T.P: 021 22 200 33

metro engineering (pvt)ltd.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில்
நடைபெறும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கற்கை
நெறிக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும்
எமது பாடசாலை ஆசிரியைகளாகிய
**செல்வி கார்த்திகாயினி யோகேஸ்வரன்**
**செல்வி நித்யா சிவஞானசுந்தரம்**
ஆகியோரை கற்றலில் மேன்மேலும் சிறப்புற வளரவும்
சேவையில் புகழ்பெற்று ஒளிரவும்
மனமார வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மு/உடையார் கட்டு அ.த.க. பாடசாலை.
(53230) (4.3.0)

## பேஸ்புக் ஊடாக மாணவரை அரசியலில் ஈடுபடுத்தக் கூடாது

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15
பேஸ்புக் சமூக வலையமைப்பு ஊடாக மேற்கொள்ளப்படும் அரசியல் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். சில தரப்பினர் பாடசாலை மாணவ, மாணவியரை அரசியலில் ஈடுபடுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர் என்றும், அதற்கு சமூக வலையமைப்புக்கள் பயன்படுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித் துள்ளார். பண்டுவஸ்நுவர தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

"பாடசாலை மாணவர்களிடம் சமூக வலையமைப்புக்களின் ஊடாக அரசியல் பரப்புரை செய்யும் கலாசாரமொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது. தங்களது அரசியல் நோக்கங்களுக்காக பாடசாலை மாணவ, மாணவியரை பயன்படுத்தக் கூடாது. மாணவர்களை பிழையாக வழிநடத்தி கடந்த காலங்களில் ஏற்பட்ட இடர்களை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் இறுதி நேரத்தில் பாடசாலை மாணவ, மாணவியரை பயன்படுத்தி போரில் ஈடுபடுத்தினார். அரசியல் நோக்கங்களுக்காக பாடசாலை மாணவ மாணவியரை பயன்படுத்திக் கொள்ள இடமளிக்கப்படமாட்டாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## மலேரியாவை கட்டுப்படுத்துவதை அறியவரும் வெளிநாட்டு நிபுணர்

கொழும்பு, ஒக்.15
இலங்கையில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்திய விதம் தொடர்பில் அறிந்துகொள்ளும் நோக்கில் சில நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர். இலங்கையில் மலேரியா தடுப்புக்கு பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பிலான விடயங்களை சக நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதே அவர்களின் நோக்கமாகும். இதேவேளை - இவர்களில் மலேரியா விசேட நிபுணரான ரொபட் பிரிசமும் வருகை தந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இன்று நீர் கொழும்பில் நடைபெறவுள்ள சந்திப்பில் இப்பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

1937 ஆம் ஆண்டில் மலேரிய தொற்றுநோய் காரணமாக இலங்கையில் 80,000 பேர் உயிரிழந்தனர். சுமார் 15 லட்சம் பேர் மலேரிய தொற்றுக் குள்ளாகினர். அதன்பின்னர் அவ்வப்போது மலேரியா ஏற்பட்டதுடன் உயிரிழப்புக்களும் சம்பவித்தன. இறுதியாக 2000 ஆம் ஆண்டிலேயே மலேரியாவினால் அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இது வரை மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் கூட அடையாளம் காணப்படவில்லை. தெற்காசிய வலய நாடுகளில் மலேரியாவை முழுமையாக கட்டுப்படுத்திய நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது. எனினும் 2014ம் ஆண்டில் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களில் 39 பேருக்கு அந் நோயின் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது என அரச தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. அவர்கள் அடையாளங்காணப்பட்டு விமான நிலைய சுகாதாரப் பிரிவினால் தேவையான சிகிச்சை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஆட்சியாளர்களே நாட்டுக்குள் பிரிவினை ஏற்படுத்துகின்றனர்

கொழும்பு, ஒக்.1
ஆட்சியாளர்கள் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தி வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் துணைத் தலைவர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிங்கள மொழி ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

"இது மிகவும் தீர்மானம் மிக்கதோர் சந்தர்ப்பமாகும். இந்த வேளையில் பொறுப்புணர்ச்சியின்றி செயற்பட முடியாது. இனங்களுக்கு இடையில் பல்வேறு வழிகளில் முரண்பாடுகளையும் பிரிவினையையும் இந்தளவுக்கு வேறு எந்தவொரு அரசும் ஏற்படுத்தவில்லை.

அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசொன்று தேவைப்படுகின்றது. அனைத்து இனங்களும் ஒன்றிணைய வேண்டுமென்ற கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியே முன்வைத்தது. இனவாதம் மதவாதம் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே எதிர்கால தலைமுறையினருக்கு நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆட்சி நடத்த முடியும். ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி அனைத்து இன மக்களுக்கும் நன்மைகளை ஏற்படுத்தும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## சுற்றிவளைப்புக்குச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக்.15
சிலாபம் ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுற்றிவளைப்புக்காக சென்றிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் சார்ஜன்ட் ஆகியோரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித் துள்ளார்.

ஆராச்சிக்கட்டு பகுதியிலுள்ள வீடொன்றை சுற்றிவளைப்பதற்காக சென்ற குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அங்கிருந்தவர்கள் மற்றும் பிரதேச வாதிகளால் தாக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்மை தாக்கியதாகக் கூறி ஆராச்சிக் கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## சைபர் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை- சீனா ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.15
இலங்கையின் இணையத்தள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சீனாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ நிறுவனத்தில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



இலங்கை மற்றும் சீனாவின் இணையத்தள துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான அவசர வினையாற்றல் குழுவினர் தமது அரசுகளின் சார்பில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் இணையத் தளப் பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் இணையத்தளப் பாவனையைக் கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் சீனாவின் உதவியைப் பெற்றுக் கொள்ள இலங்கை எதிர் பார்த்துள்ளது.

மேலும், இலங்கை அரசின் முக்கிய இணையத்தளங்களை சைபர் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பையும் சீனா ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில இலங்கையருக்கு சீனா மேலதிக பயிற்சிகளை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### வீதி விளக்கு

வில்லை என்று தெரிவிக்கப் பட்டது. அதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவர்களுக்கு (பிரதேச சபை ஆளுங் கட்சியினருக்கு) வேண்டுமானால் இருளில் இருப்பது விருப்பமாக இருக்கும். ஆனால் மக்கள் அவ்வாறு இருக்க முடியாது.

குறித்த வீதி விளக்குகளுக்கு சூரிய மின்கல விளக்குகளைப் பொருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபையினருக்கு ஜனாதிபதி பணித்தார். இதன் போது வடக்கில் வேறு சில பகுதிகளிலும் இதே பிரச்சினை இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப் பட்டது. அதற்கு ஜனாதிபதி நாட்டின் ஏனைய பகுதிகளில் வீதி விளக்குகளுக்கான கட்டணத்தை மின்சாரசபை தானே செலுத்துகின்றது.

இங்கு கட்டணம் செலுத்த மறுக்கும் பிரதேச சபைகளின் வீதி விளக்குகளுக்குரிய பொறுப்பை இலங்கை மின்சார சபை ஏற்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித் தார். (ற-5)

### பல்கலை

வயதுடையவர். மற்றையவர் வவுனியாவைச் சேர்ந்த 22 வயதுடையவர்.

கடந்த டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி இணுவிலில் உள்ள வீடு ஒன்றுக்குள் நள்ளிரவு நேரம் சென்ற 3 பேர் கொண்ட கொள்ளையர்கள் குழு புகுந்தது. அப்போது நாய் குரைத்ததால் வீட்டிலிருந்த குடும்பஸ்தர் வீட்டின் விறாந்தைப் பகுதிக் கதவைத் திறந்து வெளியே வந்துள்ளார். வீட்டுவளவினுள் மறைந்திருந்த கொள்ளையர் குறித்த குடும்பஸ்தரின் தலையில் ஆயுதத்தால் வெட்டியுள்ளனர்.

அதையடுத்து அவர் அலறிய படி கீழே விழுந்துள்ளார். அந்தச் சத்தத்தைக் கேட்ட குடும்பஸ்தரின் மகன் தந்தையாரைத் தூக்குவதற்காக வீட்டுக்கு வெளியே ஓடிச் சென்ற போதே கொள்ளையர் அவரது மகனின் தலையில் கோடரியால் கொத்தியுள்ளனர். அதனால் மகன் அந்த இடத்திலேயே சரிந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து வீட்டினுள்ளே சென்ற கொள்ளையர் அட்டகாசம் செய்துவிட்டுச் சென்றுள்ளனர். அதன்போது குடும்பஸ்தரின் மனைவிக்கும் வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். காயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், மகன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவர் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்குத் தெரிவாகியிருந்தார்.

அந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அது தொடர்பில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அந்தச் சம்பவத்தின்போது 3 பேர் வந்திருந்தனர் என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்திருந்தார். அதன்படி இன்னும் மற்றையவர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய ஏனையவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

நேற்றுக் கைது செய்யப்பட்டவர்கள் ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒரு கொலை தொடர்பில் தேடப்படுபவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. தவிர அவர்கள் ஏற்கனவே கொள்ளைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. இன்று அவர் கள் இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

### வலி.வடக்கு

ணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பினார். வடக்குப் பயணத்தின் போது பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கெடுத்திருந்தார்.

கிளிநொச்சியில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல், போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு வழங்கல் ஆகியவற்றில் பங்கெடுத்திருந்தார். யாழ். மாவட்டத்தில் மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றியதுடன், பல்வேறு அபிவிருத்தி நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வடபகுதி சிவில் சமூகத்தினர்,

"வலி.வடக்கு மக்கள் 24 வருடங்களாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர் - நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது சொந்த இடங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதன் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் நிறைவு பெற்றுள்ளது என்று குறிப்பிட்டதுடன் இங்கிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட வேண்டும் என்று மாத்திரமே தெரிவித்திருந்தார்.

வலி.வடக்கு மக்களின் மீள் குடியமர்வுக்காக அவர் எந்தவொரு தீர்வையும் முன்வைக்கவில்லை. அத்துடன் வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும், இராணுவத்திற்கு காணி சுவீகரிப்பதற்கான நில அளவை நடவடிக்கை தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தவில்லை.

அத்துடன் தமிழ் மக்களின் மிகப் பிரதானமான பிரச்சினையாகவுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை மற்றும், காணாமற்போனோர் தொடர்பான விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி எந்தவொரு இடத்திலும் தீர்வை முன்வைக்கவில்லை. வடக்கு மக்களின் அடிப்படையானதும் - அத்தியாவசியமானதுமான பிரச்சினைகள் தொடர்பில் அவர் அக்கறை காட்டவில்லை" - என்று குறிப்பிட்டுள்ளனர். (ற-5)

### வடக்குப்

மத்திய மின்பாவனையாளர் மையத்தையும் அவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு மஹிந்தோதய ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார். மதிய உணவின் பின்னர் காரை நகருக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த அங்கு, காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில் நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார். இறுதியாக வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்கும் மஹிந்தோதய ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வடக்குக்கான தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்புக்கு திரும்பினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (ற-5)

### ஆசிரியர்

ரத்து 250. தற்போது 15 ஆயிரத்து 19 பேர் உள்ளனர். இதன் பிரகாரம் 231 பேருக்கான வெற்றிடம் தற்போது உள்ளது.

தற்போது பாடசாலை ரீதியான ஆசிரியர் வெற்றிடம் மீளாய்வு செய்யப்பட்டு வருதாக தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர், இதன் பின்னர் ஆசிரியர் வளப்பங்கீடு சரியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எனது ஊரிலும் ஆசிரியர் பிரச்சினை இருக்கின்றது. கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு அங்கும் ஆசிரியர்கள் இல்லை. இதே பிரச்சினை எல்லா இடங்களிலும் இருக்கின்றது. இதற்கு தேசிய ரீதியிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்று குறிப்பிட் டார். (ற-5)

### இலங்கை

யிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மீன் வகைகளை ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை ஏற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எச்சரிக்கை கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது என்று குறிப்பிட்ட அவர், எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் எந்தவித முன்னேற்றமும் தென்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பிலான சர்வதேச சட்டங்களை இலங்கை மீனவர்கள் பின்பற்றுவதில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையிலிருந்து வருடாந்தம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 74 மில்லியன் யூரோ பெறுமதியான மீன் வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்றும், தமது தட்டில் இருக்கும் உணவு எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றது என்பதனை அறிந்து கொள்ள சகல ஐரோப்பிய பிரசைகளுக்கும் உரிமை இருக்கின்றது என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ற)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.15
யாழ் பல்கலைக்கழக மெய்யியல் உளவியல் துறையின் உளநலவார சிறப்பு உளவியல் கண்காட்சி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டட தொகுதியில் காலை 9மணி தொடக்கம் 3மணிவரையும் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் அரசரட்ணம் வசந்தி கலந்துகொள்வார். (வ)

## குருதிக்கொடை

உலக ஆசிரியர் தின விழாவையொட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றம் நடத்தும் குருதிக்கொடை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இரத்ததானம் வழங்க உள்ளனர்.
இதேவேளை- இன்று முற்பகல் 10 மணிக்கு கலாசாலை மாணவர் மன்றத் தலைவர் [illegible].சயந்தறூபன் தலைமையில் ரதிலஷ்மி மண்டபத்தில் ஆசிரியர் தின விழா இடம்பெறவுள்ளது. (வ)

# சட்டத்துக்கு முரணாக தடுக்கப்படும் அகதிகள்

## ஆஸி. நீதிமன்றில் சட்டத்தரணிகள் வாதம்

மெல்போர்ன், ஒக்.15
தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ஆஸ்திரேலிய சட்டத்தரணிகள் கன்பரா உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். புகலிடக் கோரிக்கையாளர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.


கோப்புப்படம்

"157 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஆஸ்திரேலிய அரசு சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்துள்ளது. அவர்களில் சிறுவர் சிறுமியரும் உள்ளடங்கியுள்ளனர்"- என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தியாவின் பாண்டிச்சேரியிலிருந்து இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலிய கடற்பரப்பை சென்றடைந்திருந்தனர். அந்தப் புகலிடக் கோரிக்கையாளர் கள் குடிவரவு குடியகல்வு மற்றும் கடல் சட்டங்களுக்கு அமைவான வகையில்கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர் என்று அரச தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை- ஆழ் கடலில் புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டமை உரிமை மீறலாகும் என்று கிறீன் கட்சி செனட்டர் சாரா ஹான்சன் தெரிவித்துள்ளார்.
"சர்வதேச சட்டங்களை மீறுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசு இந்த வழக்கில் வாதிட்டு வருகின்றது."- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட்டின், புகலிடக் கோரிக்கையாளர் கொள்கைகள் தொடர்பில் மிக முக்கியமான திருப்பு முனையாக இந்த வழக்கின் தீர்ப்பு அமையும் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.
குறித்த வழக்கு இன்றும் கான்பரா உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பேச்சு என்பது வெறும் பாசாங்கு நடவடிக்கையே

## மு. கா. மீது கிழக்கு மாகாண அமைச்சர் சாட்டை

மட்டக்களப்பு, ஒக். 15
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு என்று வெறும் பாசாங்கையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை செய்து வருகின்றது' என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.
அம்பாறை மாவட்டத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும்கூட்டம்கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;
"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஆதரித்து நிற்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. இவ்வாறான செயற்பாடுகளினூடாக ஆளும் அரசிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ளலாம் என்பதே அவர்களின் கனவாகும்.
ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு அரசு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கையில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அறிக்கை விடுவது எவருக்கும் புரியாத புதிராக இருக்காது என்று நினைக்கின்றேன்..
எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரசின் அமைச்சுப் பதவியை வைத்துக்கொண்டு ஜனாதிபதிக்கு எதிராக எதிர்த் தரப்பு ஜனாதிபதி வேட்பாளருக்கு பரப்புரை செய்ய முடியாது.
இதேவேளை- தானாக தமது அமைச்சுப் பதவியை துறந்து விட்டு எதிரணிக்காக பரப்புரை செய்யும் நிலையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இல்லை என்று தெரிவித்தார். (வ-10)


வரையறுக்கப்பட்ட அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம் சலுகை அடிப்படையில் அரச உத்தியோகத்தர்களுக்கு கணினிகளை வழங்கும் நிகழ்வு பத்தர முல்லையி லுள்ள வோட்டர்ஸ் ஏஜ் விடுதியில் நடைபெற்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (வ)

# முதல் 8 மாத காலத்துள் ரூபா 92 லட்சம் பெறுமதியான போலி நோட்டுக்கள்

## இரகசியப் பொலிஸாரிடம் சிக்கின

கொழும்பு, ஒக்.15
நாடு முழுவதிலும் போலி நாணய நோட்டுக்களின் புழக்கம் அதிகரித்திருப்பதாக இரகசியப் பொலிஸாரின் பரிசோதனைகளில் வெளிப்பட்டுள்ளது.
இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஒகஸ்ட் மாத முடிவு வரையான காலகட்டத்துள் போலி நாணய நோட்டுக்களின் புழக்கத்தைக் கண்டறியும் இரகசியப் பொலிஸ் பிரிவுகள் மூலம் போலி நாணயத் தாள் புழக்கம் மற்றும் அவற்றை அச்சிடுதல் சம்பந்தமாக 102 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு 92 லட்சத்து 22 ஆயிரத்து 520 ரூபாய்கள் பெறுமதியான 4,593 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட் டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
குறித்தகால இடைவெளியில் போலி நாணய நோட்டுக்கள் தொடர்பாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 127 ஆகும்.
குறிப்பிட்ட 8 மாத காலத்துள் 1176-5000 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 562- 2000 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 1622- 1000 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 1184-500 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 42-100 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 6-50 ரூபா போலி நாணய நோட்டுக்களையும், 20 ரூபா போலி நாணய நோட்டு ஒன்றையும் இரகசியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
2013ஆம் ஆண்டில் மாத்திரம் 2கோடியே 48 லட்சத்து 97 ஆயிரத்து 570 ரூபாய்கள் பெறுமதிகொண்ட 5,368 போலி நாணயநோட்டுக்களுடன் 17 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
போலி நாணய நோட்டுக்களை இனங்கண்டு கொள்வது தொடர்பாக முறையான அறிவூட்டல் ஒன்று மேற்கொள்ளப்படாததன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் தமது கைகளுக்குக் கிட்டும் போலி நாணய நோட்டுக்கள் காரணமாக தாமும் பொலிஸ் நிலையங்களில் இருக்கவேண்டி நேர்ந்திருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-22)

## குற்றங்களும் கைதுகளும்

கிளிநொச்சி

### 28 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் 28போத்தல் கசிப்புடன் நபர் ஒருவரை அக்கராயன் பொலிஸார் கடந்த 10 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.
அத்துடன் கசிப்பு விற்பனைக்காக அந்த நபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். [வ—18]

கொழும்பு

### ஹெரோயினுடன் வயோதிபர்

கொழும்பு 14 இல் ஹெரோயின் வைத்திருந்த வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். 61 வயதுடைய வயோதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார்,சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [வ]

கொழும்பு

### மாணிக்கக் கற்களை கடத்த முயன்றவர் வசமாக சிக்கினார்

கொழும்பு, ஒக்.15
இலங்கையிலிருந்து சீனாவுக்கு சட்ட விரோதமான முறையில் மாணிக்கக் கற்களை கடத்த முயற்சித்த நபரொருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.



குறித்த சந்தேக நபரிடமிருந்து 15 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக் கக்கற்களை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.கைது செய்யப்பட்டவர் 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன்,சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். [வ]

அச்சுவேலி

### நெசவு நிலையத்துக்கு எதிராக வழக்கு

அச்சுவேலி அரசினர் நெசவு நிலைய மண்டபத்தில் நடைபெற்றுவரும் செயற்பாடுகளுக்கு எதிராக நெசவு சாலை சுற்றாடலில் வசிக்கும் 11 பேர் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். நெசவு நிலைய மண்டபத்தில் நடைபெற்றுவரும் செயற்பாடுகளால் தமது அமைதிக்கு பக்கம் ஏற்பட்டிருப்பது மற்றும் இடையூறு ஏற்படுத்துவது தொடர்பாக தமது சட்டத்தரணி மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.
கடந்த 5 வருடங்களாக நெசவு நிலைய மண்டபத்தில் ஒலிபெருக்கி மற்றும் இசையுடன் கூடிய மிகை ஒலி எழுப்பிய நிலையில் பிரார்த் தனை நடைபெறுவதற்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. [வ—11]

கொழும்பு

### வாகன உதிரிப்பாகங்களை திருடிய சுங்கத் திணைக்கள அதிகாரிகள்

கொழும்புத் துறைமுக சுங்க வாகனச் சாலையில் வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் உதிரிப்பாகங்களை திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் அந்தப்பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள் இருவரை கைது செய்துள்ளதாக கொழும்புத்துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்புத்துறைமுக சுங்க வாகனப்பிரிவில் உள்ள வாகனங்களில் பக்கக் கண்ணாடிகள் மற்றும் வாகனங்களின் பிரதான கண்ணாடி துடைப்பான்களை திருடுவதாக கடந்த 2 ஆம் திகதி கிடைத்த தகவல்களை அடுத்து, கொழும்புத்துறைமுக பொலிஸார் மறுநாள், வெளிநபரொருவரை கைது செய்தனர்.
அந்த நபர் வழங்கிய தகவல்களையடுத்தே சுங்க பரிசோதகர்கள் இருவரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையக அறிவித்துள்ளது. [வ]

# மூன்றாவது தடவையாகவும் மஹிந்த போட்டியிட முடியுமா?

*சட்ட நிபுணர்களிடம் சட்டத்தரணிகள் சங்கம் ஆலோசனை*

கொழும்பு,ஒக்.15
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியுமா, இல்லையா என்பது குறித்து சட்டத்துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களிடம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விளக்கம் கோரியுள்ளது.

18ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது குறித்து விளக்கம் கோரப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் சட்டபீட விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. குறித்த பேராசிரியரின் விளக்கம் இந்த மாதம் 18ஆம் திகதி சட்டத்தரணிகள் சங்கக் கேட்போர் கூடத்தில் வெளிப்படுத்தப்படும் என சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

குயின்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராகக் கடமையாற்றிவரும் பேராசிரியர் சூரி ரத்னபாலவிடம் இந்த விளக்கம் கோரப்பட்டுள்ளது.

அரசமைப்புத் தொடர்பில் நிபுணத்துவ அறிவுடைய பேராசிரியர் அரசமைப்பு தொடர்பில் நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா, இல்லையா என்பது குறித்து நாட்டில் விவாதிக்கப்பட்டு வருகின்றது எனவும் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எனவே, இது குறித்து சட்டத் துறையில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களிடம் விளக்கம் கோரத் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-சி)

## ஐ.தே.கவில் நவின் ?

கொழும்பு,ஒக்.15
வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது அமைச்சர் நவின் திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு "ஆம்" என்ற தொனியில் அந்தக் கட்சி பதில் வழங்கியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது. இதன்போது, வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போது அமைச்சர் நவின் திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரா என்று ஊடகவியலாளர் ஒருவர் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரான அகிலவிராஜ் காரியவசமிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய அவர், ஜனாதிபதித் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் அரசிலுள்ள பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்குத் தயாராக இருக்கின்றனர். இதற்கான பேச்சுக்கள் தற்போதும் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய பேச்சுக்களை முறியடிப்பதற்கும், அரச தரப்பு உறுப்பினர்கள் ஐ.தே.கவில் இணைவதைத் தடுப்பதற்கும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. எனவே, அரசிலிருந்து ஐ.தே.கவுடன் இணையவுள்ளவர்கள் தொடர்பில் தற்போதே பகிரங்கமாகக் கருத்துக் கூறுவது முறையல்ல என்று குறிப்பிட்டார்.

# ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் திடீர் கோளாறு

*உயிர்தப்பினர் 122 பயணிகள்*

கொழும்பு,ஒக்.15
கொழும்பிலிருந்து சென்னை நோக்கிச் சென்ற ஸ்ரீலங்கா விமானசேவை விமானம் விபத்திலிருந்து தப்பியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று சென்னை விமான நிலையத் தகவல்களை மேற்கோள்காட்டி, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விமானம் தரையிறங்கும் நேரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து விரைவாக செயற்பட்ட விமானிகள், விமான்த்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கியுள்ளனர்.

இதனையடுத்து விமானத்தில் பயணித்த 122 பயணிகளும் உயிர் தப்பியுள்ளதுடன் பாதுகாப்பாக விமானத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை- குறித்த விமானத்தின் ஊடாக நேற்றுப் பிற்பகல் கொழும்புக்கு பயணிக்கவிருந்த 244 பயணிகளும் அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



*யாழ்ப்பாணத்துக்கான தபால் ரயில் சேவை, தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவினால், கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்றிரவு 7.45 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (த)*

### தவிசாளர் சுகவீனம்

வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவகுமார் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாகக் கடந்த சில தினங்களாகப் பிரதேச சபைக்குச் சமுகமளிக்காமல் வீட்டில் ஓய்விலிருந்த தவிசாளர் கடந்த சனிக்கிழமை திடீரென ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-115)

# கொள்கைத்திட்டத்தை நிறைவேற்றாவிடின் மஹிந்தவைத் தோற்கடிக்க முன்நிற்போம்

*இறுதி எச்சரிக்கையை நேற்று விடுத்தது ஹெல உறுமய*

கொழும்பு,ஒக்.15
ஜனாதிபதித் தேர்தல் 2015 ஜனவரி முற்பகுதியில் நடைபெறுவது ஏறத்தாழ உறுதியாகியுள்ள நிலையில், கூட்டணி அரசுக்குள் நெருக்கடிகளும் வலுக்கத் தொடங்கியுள்ளன. இதில் குறிப்பாக சிங்கள, பௌத்த வாக்குப் பலத்தைக்கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமய இறுதி நேரத்தில் பல அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளமை அரசுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், நேற்றைய தினம் ஜனாதிபதிக்கு அந்தக் கட்சி இறுதி எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதனால் தென்னிலங்கை அரசியல் களத்தில் தற்போது பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதாவது, அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டியத் திருத்தங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைத்திட்டத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்யாது ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் செல்வாராயின் அதில் அவரைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் ஜாதிக ஹெல உறுமய முன்னெடுக்கும் என்று அந்தக் கட்சியின் தவிசாளர் அத்துரெலிய ரத்தன தேரர் நேற்று அறிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கம், நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் பிரதமர் முறை உட்பட அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அடங்கிய கொள்கைத் திட்டத்தை அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் என்ற பெயரில் அத்துரெலிய ரத்தன தேரர் நேற்று வெளியிட்டார்.

இதற்கான நிகழ்வு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஆளும், எதிரணி தரப்பிலிருந்து முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். சிவில் அமைப்புக்களில் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சோபித்த தேரர், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, ராஜித சேனாரத்ன எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். இதில் உரையாற்றுகையிலேயே அத்துரெலிய தேரர் மேற்படி எச்சரிக்கையை விடுத்தார். (த-சி)


## தொழிற் பயிற்சிகள்

- Mobile Phone Repairing
சகல Phone களின் Hardware, Software கள் செயன் முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். (காலம் : 3 மாதம்)
- Electronics
றேடியோ, ரெலிவிசன் DVD மற்றும், இலத்திரனியல் பொருள்கள் திருத்தம். (காலம் : 10 மாதம்)
- Air Conditioning
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை, பராமரிக்கும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் : 6 மாதம்)
- Electrical Wiring
வீட்டு மின்சுற்று வேலைகளை Single Phase Three Phase Wiring வீட்டு மின்சார பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். (காலம் : 3 மாதம்)
- Rewinding
மின்விசிறி Motor, Transformer, Three Phase Motor கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் : 6 மாதம்)

பயிற்சிகள் ஆரம்பம் 18.10.2014
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
No. 28, பலாலி வீதி (அப்பலோ ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம். T.P : 077 824 9949
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும். (C/13639) (7.6.3)


# கல்விமான்கள் நெல்லியடியில்கௌரவிப்பு

கரணவாய், ஒக்.15
நாடெங்கிலும் உள்ள 54 மத்திய மகாவித்தியாலயங்களிலும் கல்வி கற்று உயர் பதவிகள் வகித்த கல்விமான்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இலவசக் கல்வித் தந்தை கலாநிதி சி.டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவின் 130 ஆவது ஜனன தினம் நேற்றுமுன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் நாடெங்கிலும் உள்ள 54 மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்று உயர் நிலையில் விளங்கிய கல்விமான்கள் ஜனாதிபதியால் பொன்னாடை போர்த்தி விருதும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வேலணை மகாவித்தியாலயம், வசாவிளான் மகாவித்தியாலயம் மற்றும் தனகரத்தினம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்று உயர் நிலை பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (த-108)


அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

இன்று முதல்
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40% வரையிலான விலைக்குறைப்புடன்
Sofa ~~40400/=~~ 32320/= (10 வருட உத்தரவாதம்)
மெத்தை ~~3620/=~~ 2170/= (2 வருட உத்தரவாதம்)
கண்ணாடி அலுமாரி ~~14750/=~~ 8950/=
கண்ணாடி சாப்பாட்டு மேசை ~~23560/=~~ 18125/=
மரக்கட்டில் ~~8250/=~~ 5900/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 630/=
TV Stand ~~4280/=~~ 2990/=
230, நாவலர் றோட் (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
077 35 83 879, 077 83 14 201
(C/16713)(10.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

15 OCT 2014

அழகும்,
பெருந்தன்மையும்,
நற்குடிப் பிறப்பும்,
நற்புகழும் உடைய
தாய்மையினின்று,
சிறந்த அழகுள்ள
பெண்ணும், உரமான
ஆணும் பிறப்பார்கள்.
- பைரன்.

# புதன் பொய்கை

A

உதயன் 15 ஒக்ரோபர் 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

■ ராஜராஜன்

எனக்கு இந்த வாழ்க்கை வெறுத்துவிட்டது. இதை விட பேசாமல் செத்து விடுவதே மேல்" எம்மில் பலர் இவ்வாறு கூறுவதைக் கேட்கின்றோம். வாழ்க்கையென்றால் என்னவென்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களே இந்த வகையில் நடந்து கொள்கின்றனர்.

நாம் இந்த உலகில் காலடி எடுத்து வைக்கும்போதே எமக்கென ஒரு வாழ்க்கை அமைந்து விடுகின்றது. இதனையே சிலர் தலைவிதி எனக் கூறுகின்றனர். இதனையும் மதியால் வென்று விடலாமெனக் கூறுபவர்களும் இல்லாமலில்லை. ஆனால் நாம் மனது வைத்தால் எமது வாழ்க்கையை இனியதாக மாற்றிவிட முடியும்.

நாம் தூரத்தில் இருந்து பார்க்கும் போது அழகாகத் தெரிவதுடன் குளிர்மையான ஒளியையும் அள்ளி வழங்கும் சந்திரன் மேடு பள்ளங்கள் நிறைந்த வெறும் கட்டாந்தரையாகக் காட்சியளிப்பதாக அங்கு சென்று வந்தவர்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. இதனைப் போன்றுதான் எமது வாழ்க்கையும் மேடு பள்ளங்கள் நிறைந்தது. இவற்றையெல்லாம் தாண்டியே எமது வாழ்க்கைப் பயணம் தொடருகின்றது. மேட்டில் ஏறுவதற்குத் தயங்குபவனும், பள்ளத்தில் காலடி வைப்பதற்குப் பின்னடிப் பவனும் தமது பயணத்தை இழக்க வேண்டியதுதான்.

பல உலகப் பெரியார்களின் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்த்தால் அவை கடுமையான போராட்டங்கள் நிறைந்தனவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடியும். கறுப்பு மக்களின் மேய்ப்பனாக விளங்கிய தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை ஒருபோதுமே இனிமையாக இருந்ததில்லை. போராட்டங்களும் வேதனைகளுமே அவரை ஆட்டிப் படைத்தன. தனிமைச் சிறையில், வெளிச்சத்தைக் காணாத நிலையில் அவர் 26 ஆண்டுகளைக் கழித்தார். இடைப்பட்ட காலத்தில் அவரைச் சிறையில் அடைத்தவர்கள் பல வாக்குறுதிகளை அவர் மீது திணித்து அவரைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு முயன்ற போதிலும் தாம் கொண்ட கொள்கையிலிருந்து பிறழாத மாமனிதராக அவர் திகழ்ந்தார். அவரது தியாகமும், மன வுறுதியும் இறுதியில் வெற்றி பெற்றன. அடிமைத் தளையினால் பிணைக்கப் பட்டிருந்த தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையின கறுப்பு மக்கள் சுதந்திரம் பெற்றனர். நெல்சன் மண்டேலா அந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மண்டேலா தமக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கண்டு துவழாததால் அவர் மறைந்த பின்னரும் கூட உலக மக்களால் போற்றிப் புகழப் படுகின்றார்.

இந்தியாவுக்கு வெள்ளையரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தியின் வாழ்க்கை கூட துயரங்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது. ஆனால் அவர் அந்த வாழ்க்கையை விட்டு விலகி ஓடவில்லை. தமது இறுதி நாள் வரை அதனுள் இருந்தவாறே போராடிக் கொண்டிருந்தார். வெற்றியும் பெற்றார். இவையெல்லாம் எமது வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்தரக்கூடியவை.

இன்றுள்ளவர்களில் அநேகர் பணத்தை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கையைத் தீர்மானித்து விடுகின்றனர். இவர்களின் பார்வையில் கல்வி, ஒழுக்கம், பெருந்தன்மை என்பன பின்தள்ளி வைக்கப்படுகின்றன. பணம் படைத்தவர்களையே இவர்கள் மதிக்கவும் செய்வார்கள். பணம் இல்லாத போது தமது வாழ்க்கையே பறிபோய்விட்டதாக இவர்கள் புலம்பவும் செய்வார்கள். ஆனால் பணம் வாழ்க்கைக்கு உதவுமேயொழிய பணமே வாழ்க்கையாகி விடாது. மேலும் பணம் படைத்தவர்கள் எல்லோருமே மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது. அவர்களிடத்தில் பணம் உள்ள போதிலும் வேறு விடயங்களில் காணப்படும் குறைபாடுகள் அவர்களின் மகிழ்ச்சியைச் சிதைத்து விடுகின்றன. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பணம், நோயற்ற வாழ்வு, குடும்பத்தில் நிலவும் அந்நியோன்னியம் மற்றும் அமைதி என்பன ஓர் இனிமையும், மகிழ்வும் கலந்த வாழ்க்கையை

**வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி சலிப்படைவதன் மூலமாக எம்மால் எதையுமே சாதிக்க முடியாது. பொறுமையும் விடா முயற்சியும் எமது வாழ்க்கைப் பயணத்துக்கு இறுதிவரை உதவக் கூடியவை.**

எமக்கு வழங்குகின்றன. எதற் கெடுத்தாலும் பிறர்மீது குறை காண்பதும், கோபம் கொள்வதும் , வஞ்சம் தீர்க்க முயல்வதும் வாழ்க்கையின் அமைதியைக் குலைத்து துன்பத்தினுள் தள்ளி விடும். எந்த விடயமாக இருந்தாலும் அங்கு நிதானம் கடைப்பிடிக்கப்படுமாயின், துன்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படும்.

பிறரது வாழ்க்கையை ஆராய்ந்து கொண்டிருப்பதே சிலரது வழக்கமாகக் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் தமது சொந்த வாழ்க்கையை மறந்து விடுகின்றனர். இந்த நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும். இன்பமோ அல்லது துன்பமோ எமது வாழ்க்கை எமக்கானதுதான். இதில் எவருமே எவருக்கும் உதவ முடியாது. அங்கு காணப்படும் குறைகளைச் சீர்செய்துகொண்டு முன்னேறிச் செல்வதே எமது ஒரே நோக்கமாக இருத்தல் வேண்டும்.

உயர் பதவியில் இருக்கும் சிலர் அதிலிருந்து இறங்கும் வரையில் இந்த உலகத்தையே மறந்து காணப்படுவார்கள். எவரையும் இவர்கள் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. தமது பக்க நியாயத்தை எடுத்துக் கூறுவதற்குக் கூட இவர்கள் மற்றவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதில்லை. இதனால் பலரது வெறுப்பையும் இவர்கள் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இவர்கள் தமது பதவியிலிருந்து இறங்கிய பின்னர் இவர்களை நாடுவதற்கு எவருமே இல்லாத நிலையில் நடை பிணங்களாகத் திரிவார்கள். அப்போது, தான் வாழ்க்கையின் உண்மையான தத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வார்கள். ஆனால் இதனால் பயன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை.

பரந்த இந்த உலகிலே வாழ்வதற்கான பல சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைக்கின்றன. இவற்றை நாம் பயன்படுத்தும் முறையிலேயே எமது வாழ்க்கையும் சிறப்பாக அமைந்து விடுகின்றது. எமது செயற் பாடுகளில் எந்த வகையாகப் பார்த் தாலும் அங்கு நோக்கம் ஒன்று அமைந் திருத்தல் வேண்டும். நோக்கம் இல்லாத வாழ்க்கை கடிவாளம் இல்லாத குதிரைக்குச் சமனானது. தறிகெட்டுச் சென்று விடும். ஆகவே எமக்கு நாமே கடிவாள மிடுவதன் மூலமாக எதனையும் செம்மையாக்க முடியும்.

ஆகவே வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி சலிப்படைவதன் மூலமாக எம்மால் எதையுமே சாதிக்க முடியாது. பொறுமையும் விடா முயற்சியும் எமது வாழ்க்கைப் பயணத்துக்கு இறுதிவரை உதவக்கூடியவை. தொடர்தோல்விகளை எதிர்கொள்ள நேரிடினும் அவற்றையே கிட்டப் போகும் வெற்றிகளுக்கான படிகளாக நாம் கருத வேண்டும். அதில் ஒவ்வொரு படியாக ஏறிச் செல்லும் போது இறுதியில் வெற்றியின் உச்சத்தை எம்மால் எட்ட முடியும். வாழ நினைத்தால் எம்மால் நிச்சயமாக வாழ முடியும்.



# வாழ நினைத்தால் வாழலாம்...




# ஆணின் தோலில் இருந்து விந்தணு உற்பத்தி!



இன்றைய நவீன அறிவியல் உலகத்தில் நல்ல சத்தான உணவுவகைகளை சமைத்து சாப்பிடக்கூட நேரமின்றி மக்கள் அனைவரும் பரபரப்பாக இயங்கி வருகிறார்கள். இதனால் உணவுப் பழக்கவழக்கங்களும் மாறிவிட்டன. காரணங்களால் ஆண் மலட்டுத்தன்மை பெருகி வருகிறது. பாஸ்ட் புட் போன்ற உணவுவகையில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து குறைவு ஏற்படுவதாக மட்டுமல்ல ஆண்களின் விந்தணு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதனால் குழந்தைப் பேறு பாதிக்கப்படுவதோடு, விவாகரத்துகளும் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகிவிடும். இந்தநிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வுகளில், ஆணின் தோலில் இருந்து விந்தணு உற்பத்தி செய்யும் முயற்சியில் முதல் வெற்றியை பெற்றிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதன் மூலம் குணப்படுத்த இயலாத ஆண் மலட்டுத்தன்மைக்கு தீர்வு காண வழி பிறக்கும் என்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

















# சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கலைவிழா



விஜயதசமியை முன்னிட்டு சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஆலய நிர்வாக சபையின் ஏற்பாட்டில் ஏழாலை தெற்கு சூராவத்தை பகுதியிலுள்ள மாணவ மணிகளின் பங்களிப்பில் கலை விழா சிறப்பாக நடைபெற்றது.

திருவிளக்கேற்றி நந்திக்கொடி வணக்கப் பாடல்களை மாணவமணிகள் இசைக்க நந்திக்கொடி ஏற்றி வைக்கப்பட்டு இறை வணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது.

புஸ்பாஞ்சலி நடனம், பாம்பு நடனம், வேப்பிலை நடனம், காவடி நடனம், கண்ணன் நடனம், கல்வித் தெய்வ நடனம் அத்துடன் இசைநிகழ்ச்சிகள் உட்பட நலந்தரும் நவராத்திரி விரதம், கல்வியின் முக்கியத்துவம் ஆகிய விடயங்கள் பற்றிய மாணவமணிகளின் பேச்சுக்களுடன் ஆலய பிரதம சிவாச்சாரியார் சண்முகானந்தக் குருக்கள், சிவத்திரு சுயம்புலிங்கம், சிவத்திரு குமாரசாமிஜயா ஆகியோரின் அருளுரைகளுடன் வாழ்த்துப்பாக்கள், மங்கலப்பாடல்களுடன் நன்றியுரையுடன் விழாசிறப்பாக நடந்தேறியது.

அனைத்து இசை நடன நிகழ்ச்சிகளுக்கும் கலாவித்தகர் சு.ரவிசங்கரின் மிருதங்கமும் வே.செல்வசந்திரனின் கீபோட்டும் பக்கவாத்தியங்களாக அமைந்து நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின.

அறநெறிப் பாடசாலையின் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தப்பட்டு அது அமைப்பதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக கூட்டுப் பிரார்த்தனையில் பங்குபற்றிய மாணவமணிகள், கலை நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பித்த மாணவமணிகள் ஆகியோருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மாலை 6.30 மணிக்கு ஆரம்பித்த விழா இரவு 9.30 மணிக்கு முடிவடைந்தது.







# மிருதங்க அரங்கேற்றம்

முதுகலைமாணி கணபதிப்பிள்ளை கஜனின் மாணவனும் அருமைநாதன்-நிர்மலாதேவி தம்பதியரின் புதல்வனுமாகிய சண்முகப்பிரியனின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த புதன்கிழமை இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபை கலையரங்கத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமாரன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் மு.இரத்தினேஸ்வரன் மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி இசை ஆசிரியை செல்வி மு.இ.ஜெயகௌரியும் கலந்துகொண்டனர்.

வாழ்த்துரையை சங்கீத வித்துவானான சி.சிவஞானராசாவும், மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருதனார் மடம் நுண்கலைப்பீட விரிவுரையாளர் க.கண்ணதாசனும் வழங்கினார்கள்.

பக்க வாத்தியங்களாக நிகழ்வுக்கு மெருகூட்டியோர் பாட்டு தவமைந்தன் தவநாதன் றொபேட், வயலின்-அம்பலவாணர் ஜெயராமன், கடம்- நாகரத்தினம் மாதவன், கஞ்சிரா-நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா, முகர்சிங்-சிங்கராசா செந்தூரன், தம்புரா - கந்தசாமி ரஜீவன். (வ-86)





# பூதம்

ஒரு விவசாயி ஒரு நாள் தனது குடும்பத்துடன் வெகு தூரத்தில் இருந்த நகரத்தை நோக்கிப் பயணமானார். இரண்டாம் நாள், உச்சி வேளைக்கு சாலை ஓரத்தில் இருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் தங்கினர். அங்கே இரவு வரை தங்கி இளைப்பாறத் தீர்மானித்தனர்.

விவசாயி எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவர். அவரால் சும்மா இருக்க முடியவில்லை. அதனால் ஓய்வு எடுக்கும் நேரத்தில் கயிறு திரிக்கலாமே என்று நினைத்தார். தனது மூத்த மகனை அனுப்பிக் கொஞ்சம் சணல் நார் வாங்கி வரச் சொன்னார். இரண்டாவது மகனை அனுப்பிக் காய்கனிகள் வாங்கி வரச் சொன்னார். மூன்றாவது மகனிடம் சமையலுக்கு மரக்கறிச் சாமான்கள் வாங்கி வரும்படிச் சொல்லி அனுப்பினார்.

மருமகள்களுக்கும் வேலை கொடுத்தார். மூத்த மருமகளை அனுப்பி தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். அடுத்த மருமகளை அனுப்பி விறகு சேகரித்து வரச் சொன்னார். மூன்றாவது மருமகளை ரொட்டி சுட மாவு பிசையும்படிச் சொன்னார். எல்லோரும் அவரவருக்குச் சொன்னபடி கொண்டு வந்ததும் மரத்தடியில் அமர்ந்து சணல் நாரைக் கொண்டு கயிறு திரிக்கத் தொடங்கினார்.

அந்த மரத்தில் ஒரு பூதம் வசித்து வந்தது. விவசாயி வந்து மரத்தடியில் அமர்ந்தது முதல், அது எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தது. இந்த ஆள் ஏன் இவ்வளவு பெரிய கயிற்றைத் திரிக்கிறான் என்று ஆச்சரியப்பட்டது. ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கடைசியில் அது மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தது. விவசாயியின் முன்னால் வந்து அது பற்றி அவரிடம் கேட்டது.

பூதத்தைப் பார்த்ததும் விவசாயிக்குப் பயம் ஏற்பட்டது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வேலையில் கவனமாக இருப்பது போல் நடித்தார். பிறகு நிமிர்ந்து பார்த்து "உன்னைக் கட்டுவதற்குத் தான்" என்றார்.

பூதத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. பார்க்கப் பிரம் மாண்டமாக இருந்தாலும் அது மனதுக்குள் மிகவும் கோழை. எனவே அது பயந்து போய் விவசாயியின் காலில் விழுந்து கருணை காட்டும்படி கெஞ்சியது. என்னை விட்டு விடு உனக்குப் பெரும் புதையல் தருகின்றேன் என்றது. அப்போது விவசாயி சரி, விட்டு விடுகிறேன் என்று சொன்னார். பூதம் அவருக்கு புதையலை கொடுத்தது.

விவசாயிக்குத் தாங்கமுடியாத மகிழ்ச்சி. தனது பயணத்தைத் தொடராமல் பெரும் செல்வத்துடன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினார்.

விவசாயி பெரும் செல்வத்துடன் வீடு திரும்பியதைக் கேள்விப்பட்ட அவரது பக்கத்து வீட்டுக்காரர் விவரத்தைக் கேட்டறிந்தார். தானும் அந்த பூதத்திடமிருந்து பெரும் செல்வத்தைப் பெற்றுவர வேண்டும் என்று பேராசை கொண்டார். அவரும் தனது குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு சென்று அதே ஆலமரத்தடியில் தங்கினார். தனது பிள்ளைகளுக்கும், மருமகள்மாருக்கும் ஆளுக்கு ஒரு வேலை கொடுத்தார்.

ஆனால் அவரது மக்கள் சுத்த சோம்பேறிகள். அவர்கள் அந்த ஆலமரத்தின் குளுமையான நிழல் சுகத்தைத் துறக்க விரும்பவில்லை. அதனால் தந்தை சொன்ன வேலைகளைச் செய்ய மறுத்துவிட்டனர். மருமகள்மாரும் அவரை அலட்சியப்படுத்தினர். எனவே எல்லா வேலைகளையும் அவரே செய்ய வேண்டியிருந்தது. பிறகு சேகரித்து வந்த சணல் நாரைக் கொண்டு கயிறு திரிக்கத் தொடங்கினார். அவர் எதிர்பார்த்தபடியே பூதம் மரத்திலிருந்து இறங்கி வந்தது.

அவர் முன்னால் வந்து இந்தக் கயிற்றை எதற்காகத் திரிக்கிறாய்? என்று பூதம் கேட்டது. உன்னைக் கட்டுவதற்குத் தான் என்றார் அவர். பூதம் சிரித்தது. விவசாயிக்குப் பூதம் பயப்படாமல் சிரிப் பதைக் கண்டு குழப்பம் ஏற்பட்டது.

"ஆக நீ பயப்படவில்லையா?" என்று கேட்டது.

"நான் ஏன் பயப்பட வேண்டும்? உன் குடும்பமே உன்னைக் கண்டு பயப்படாத போது நான் எதற்குப் பயப்பட வேண்டும்? இந்தக் கயிற்றைக் கொண்டு என்னைக் கட்டுவதை விட்டு உன் மகன்மாரையும் மருமகள்மாரையும் கட்ட முயற்சி செய்" என்று சொல்லிச் சிரித்து விட்டு மீண்டும் மரத்தின் மீது ஏறிக் கொண்டது பூதம்.

தன் திட்டம் பலிக்காததை கண்ட பக்கத்து வீட்டுக்காரர் முதலில் தன் குடும்ப உறுப்பினர்களை சரிபடுத்த எண்ணியபடி ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்.




சின்னச்சின்ன பந்து
சிறிய நல்ல பந்து
சின்னத் தம்பி அடித்திடும்
சிவப்பு நிறப் பந்து
வட்ட வட்டப் பந்து
வடிவான பந்து
பத்து ரூபாய்ப் பந்து
பாலர் அடிக்கும் பந்து
உருண்டு ஓடும் பந்து
உள்ளம் மகிழ வைத்திடும்
இருண்ட துன்பம் யாவையும்
இதயம் விட்டுத் துரத்திடும்
உருண்டு உருண்டு வந்திடும்
சோம்பல் விரட்டிக் காத்திடும்
திரண்ட மகிழ்வை எமக்குமே
திகட்டத் திகட்டக் கொடுக்குமே

கி.முகுந்தனா, தரம்-1
புற்றளை ம.வி.

# பொது அறிவு

- உலகிலேயே தங்கத்தை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடு எது?
  தென்னாபிரிக்கா
- கோப்பியை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடு எது?
  பிரேஸில்
- எண்ணெய் வளம் அதிகமாகக் காணப்படும் இடம் எது?
  தென்மேற்கு ஆசியா
- அணுசக்தியால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையத்தை முதலில் அமைத்த நாடு எது?
  ரஷ்யா
- பன்னாட்டு நாணய நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் எது?
  அமெரிக்காவின் வாஷிங்ரன்

நே.வித்யாசாகர்,
கிளிநொச்சி.

# தெரிந்து கொள்ளுங்கள்



பொதுவாக வீட்டின் சமையலறையில் சமைப்பதற்காக சில அலுமினிய பாத்திரங்களை பயன்படுத்துவோம். அவ்வாறு பயன்படுத்துவதில் மிகவும் கவனம் அவசியம். ஏனென்றால் ஒரு மனிதன் உணவு உண்ணப் பயன்படுத்தும் அலுமினிய பாத்திரங்களின் மூலம் தான் அதிகப் படியான அலுமினியம் அவனது உடலில் சேருகிறது. இதனால் உடலுக்கு பாதிப்புகள் தான் ஏற்படுகின்றன. அதுவும் எமது தாத்தா பாட்டிகள் தான் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகளே!

சராசரி மனித உடலில் அலுமினியத்தின் மொத்த அளவு 60 மில்லிகிராம். அதில் மூன்றில் ஒரு பங்கு ஈரலில் காணப்படும். எலும்பிலும் குறிப்பிடத்தக்க அளவு அலுமினியம் இருக்கும். மேலும் எமது உடல் தேவையான அலுமினியத்தை எடுத்து கொண்டு அதிகமானதை சிறுநீர், மலம் மூலம் வெளியேற்றி விடுகிறது. இப்படி பெருமளவு வெளியே சென்றாலும் 5 சதவீதத்துக்கும் அதிகமானது தசைகளில் படிந்து விடுகிறது. இவ்வாறு படியும் அலுமினியத்தின் அளவு வயதானவர்களிடையே தான் அதிகம் காணப்படுகிறது.

மேலும் வயது ஏற ஏற மூளை, சிறுநீரகம் நுரையீரல் என்று ஒவ்வொரு உறுப்புகளிலும் படியும். மூளையில் படியும் போது அவற்றின் செயற்பாடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டு அல்சீமர் போன்ற நோய் ஏற்படும்.


இந்நோய் தாக்கும் ஆரம்ப காலங்களில் சிறு சிறு விடயங்கள் மறந்து போகும். பிறகு நெருங்கிய உறவினர்களின் பெயர்கள் கூட மறந்து போய்விடும்.




மனிதனின் உடலில் மின்சாரம் பாய்ந்தால் தசைகள் அளவுக்கதிகமாகச் சுருங்கி விடுகிறது. எனவே மின் சாரத்தால் தாக்கப்படும் நபர் சுவாசிக்க இயலாமல் போய் விடும். அதைத் தொடர்ந்து இதயத் துடிப்பு சீர் குலைகிறது. இந்த நிலையே அந்த மனிதரை மரணமடையச் செய்கிறது.

அதிக வோல்ட்டேஜ் மின்சாரம் பாயும் போதும் அதனால் தோன்றும் அதிக உஷ்ணம் நரம்புகள், திசுக்கள், தசைகளை கருகிவிடச் செய்வதும் உண்டு. அதனாலும் மரணம் சம்பவிக்கும்.

பொதுவாக மின்சாரம் பாயும் ஒரு கம்பியை ஒரு கையால் தொடும்போது அவர் மின்சாரத்தால் தூக்கி வீசப்படுகிறார். ஆனால் இரு கைகளாலும் தொடும்போது அவரது இதயத்தின் வழியே மின்சாரம் பாய்ந்து மரணம் சம்பவிப்பது நிச்சயம்.





# மருந்தாகும் காய்கறிகள்

வாழைக்காய் வாயுவைத் தூண்டும் குணமுள்ளதால் இதை சமைக்கும்போது அதிகளவில் பூண்டு சேர்த்துக்கொள்வது நல்லது. மலச்சிக்கலைத் தீர்க்கும்.
பாகற்காய் நன்கு பசியைத் தூண்டும். உடலில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும். பீட்ரூட் மலச்சிக்கலைப் போக்கும், இரத்த சோகையை சரிப்படுத்தும்.
வெண்டைக்காய் மூளை வளர்ச்சியைத் தூண்டும். நன்கு பசியை உண்டாக்கும். மலச்சிக்கலைப் போக்கும்.
கோவைக்காய் வயிற்றுப்புண், வாய்ப்புண், மூல நோயின் தாக்குதல் போன்றவற்றை நீக்கும்.

# உங்களைக் காத்துக் கொள்ள...

வெளியில் செல்லும்போது குடை அல்லது ரெயின்கோட் எடுத்துச் செல்வது நல்லது.
வீட்டுக்குள் நுழைந்ததும் கை கால்களைக் கழுவ வேண்டியது அவசியம்.
வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். கைகளை சோப்பு போட்டுக் கழுவி எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
ஐந்து நிமிடங்களுக்காவது நன்றாகக் கொதிக்கவைத்து, ஆறவைத்து வடிகட்டிய தண்ணீரைக் குடிக்க வேண்டும்.
அடிக்கடி தலைக்குக் குளிப்பது, குளிர் பானங்கள், ஐஸ்கிறீம் உண்பது போன்றவற்றைத் தவிர்க்கவும்.
திறந்து வைக்கப்பட்ட, ஈக்கள் மொய்த்த, சாலையோர உணவு வகைகளைத் தவிர்க்கவும்.
சமைத்த உணவு வகைகளையும், குடிதண்ணீர்ப் பாத்திரங்களையும் மூடி பாதுகாக்கவும்.
இருமல், தும்மல் வரும்போது கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ளவும்.
கொசுக்கடியிலிருந்து தப்பிக்க உடல் முழுவதையும் மறைக்கும் ஆடைகளை அணியலாம்; கொசு விரட்டிகளையும் பயன்படுத்தலாம்.



# வெற்றிலையின் மருத்துவக் குணங்கள்

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே வெற்றிலையானது பயன்பாட்டில் இருந்து வருகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக பயன்படுத்தப்படும் தாவரங்களில் வெற்றிலையும் ஒன்றாகும்.
வெற்றிலையில் கல்சியம், இரும்புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது. இது தவிர வெற்றிலையைப் பயன்படுத்தி பல நோய்களையும் குணப்படுத்தலாம்.
இலைகளும், வேர்களும் மருத்துவ பயன் உடையவை. இலைகளில் காணப்படும் எளிதில் ஆவியாகும் எண்ணெய் மூச்சுக்குழல் நோய்களுக்கு மருந்தாகிறது. இலையின் சாறு ஜீரணத்திற்கு உதவுகிறது. வேர்பகுதி பெண்களின் மலட்டுத் தன்மையை போக்குகிறது.
வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்தச் சாற்றில் சிறிதளவு கற்பூ ரத்தைச் சேர்த்துக் குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலைவலி உடனே குணமாகும்.
இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை வைத்து மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கி தேங்காய் துண்டுகள் சிலவற்றை மென்று தின்றால் தேள் விஷம் உடனே முறியும்.



# நன்மை தரும் வாழை



வாழைப்பழம் மட்டுமல்ல அதிலுள்ள பூவும் தண்டும் மருத்துவ குணமுள்ளவை. வாழைப்பூவில் துவர்ப்புச் சத்து இருப்பது அனைவரும் அறிந்த விடயம்தான். அந்தத் துவர்ப்பைத் தண் ணீர் விட்டுப் பல தடவை கசக்கிப் பிழிந்து எடுத்து விடுகிறார்கள் நம்மில் பலர். துவர்ப்பு இருந்தால், சுவையிருக்காது என்று நினைத்து விடுகின்றனர்.
நமது உடலுக்கு நன்மையளிக்கும் பொருள்களில் வாழைப் பூவும் ஒன்றாகும். பெண்களின் கர்ப்பப்பைக்கு நல்ல பலமளிக்க இது உகந்தது.
அந்தத் துவர்ப்பு இருந்தால் ஊட்டச் சத்து வீணாகாமல் உடம்புக்கு 'பி' விற்றமின் கிடைக்கிறது. பல வியாதிகளும் இதனால் நிவர்த்தி அடைகிறது.
வாழைத் தண்டு குடலில் சிக்கிய மணல், கற்களை விடுவிக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். மலச்சிக்கலைப் போக்கும். நரம்புச் சோர்வையும் நீக்கும். வாழைத் தண்டுச் சாற்றை இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் வீதம் தினமும் குடித்து வந்தால், வறட்டு இருமல் நீங்கும்

"வாழைத் தண்டு குடலில் சிக்கிய மணல், கற்களை விடுவிக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். மலச்சிக்கலைப் போக்கும்."

# கொழுப்புத் தொல்லையை போக்கும் கரட்

இயற்கையாகவே இனிப்புத் தன்மை உடைய கரட்டை விரும்பாதவர்கள் எவரும் இல்லை எனலாம். இந்த கரட்டை உணவில் எடுத்துக் கொள் பவர்களுக்கு கொழுப்புத் தொல்லையும், ஆண்மையின்மை பிரச்சினை யும் நெருங்கவே நெருங்காது என்பது முழுக்க முழுக்க உண்மை.
கரட்டை சமைத்து உண்பதை விட, பச்சையாக சாப்பிடும்போது அதில் பெரும்பான்மையான சத்துக்கள் விரயம் ஆகாமல் நம்மை வந்து சேரும்.



இதில் நிறைந்துள்ள பீட்டா கரோட்டின் கொழுப்பை கரைக்கும் வல்லமை பெற்றது. தினமும் ஒரு கரட் சாப்பிடுவதன் மூலம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம் என்பது அறிவியல் பூர்வமான உண்மை.



# தரமான ஹரிஸ்சந்திர உற்பத்திகள்




ரூ. 25.00 தொடக்கம்

தரத்திற்கான நம்பகரமான பெயர்
www.harischandramills.com

(C/16967)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா

தோற்றம்
28 - 08 - 1958

மறைவு
26 - 10 - 2013

திதி: ஸப்தமி

ஓடிவிட்டது ஓராண்டு என்று
காலக்கண்ணாடி கணக்குக் காட்டினாலும்
ஓடிப் போகுமா சூரியனும் சந்திரனும்
இரவில் நிலவாய் பகலில் கதிராய்
மனதின் வானில் மறையாது நிற்கின்றீர்


உணர்வுப் புள்ளிகளால் உம் முகத்தை
அழகான கோலமிட்டே அல்லும் பகலும்
ஆசையுடன் பார்க்கின்றோம்
ஆண்டல்ல கணக்கு....!

கனவிலும் நனவிலும் காணும் பொழுதிலும்
பிரிந்தும் பிரியாது வாழும் விக்னேஸ்வரனே!
மறக்க முடியாத நினைவுகளை ஊற்றி
அணைக்க முடியாத விளக்குகளை ஏற்றி
அன்போடு வணங்குகின்றோம் உம்
ஆத்ம சாந்திக்காய்.....!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வீரசிங்கம் குடும்பம்.
கலைமணி ஒழுங்கை, கட்டப்பிராய்.

(53184) (5.3)



# உருகும் பனிமலைகளால் பூமிக்கும் பேராபத்து!

அண்டார்டிகாவில் உள்ள பனிப்படலம் பெரும் அளவில் குறைந்துள்ளதால், புவி ஈர்ப்பு சக்தியில் மாற்றம் ஏற்படும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


செயற்கைக்கோள் அனுப்பிய தகவல்களை வைத்து ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு செலுத்திய செயற்கைக்கோள் அனுப்பிய தகவல்களை அமெரிக்கா, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தது.

அந்த ஆய்வின் இறுதியில் புவி ஈர்ப்பு சக்தியில் மாற்றம் குறித்து தெரிய வந்துள்ளது.

பூமியின் சுழற்சி, மலைத் தொடர்கள், ஆழ்கடலில் உள்ள பெரும் பள்ளங்கள் போன்ற பல்வேறு காரணங்களால், புவி ஈர்ப்பின் தன்மை வெவ்வேறு பகுதிகளில் வேறுபடுகிறது. அதேபோல், வட துருவ, தென் துருவ பனிப் பிரதேசங்களும் புவி ஈர்ப்பில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அண்டார்டிகா பகுதியின் புவி ஈர்ப்புத் தன்மை குறித்து, 2009 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் முதல் 2012-ஆம் ஆண்டு ஜூன் வரை செயற்கைக்கோள் அளித்த தக வல்களின் அடிப்படையில் ஆய்வு நடத்தப் பட்டது. இதில் அண் டார்டிகா பகுதியில் பனிப் படலம் பெரும் அளவு குறைந்துள்ளதாகத் தெரியவந்திருக்கிறது. இது புவி ஈர்ப்புச் சக்தியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை விஞ் ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அண்டார்டிகாவில் பனிப்படலம் குறைந்து வருவது இப்போதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு தொடக்கம் வரை 125 கன கிலோமீற்றர் அளவிலான பனிப்படலம் குறைந்துள்ளமை ஆய்வில் தெரிய வந்துள்ளது.




# முட்டையை இப்படியும் பயன்படுத்தலாம்



சமையலறையில் பயன்படும் பொருள்களில் முட்டையும் ஒன்று. அந்த முட்டை சமைப்பதற்கு மட்டும் தான் பயன்படுகிறது என்று பலரும் நினைக்கின்றோம். ஆனால் முட்டை சமைக்க மட்டுமின்றி, பல்வேறு வழிகளிலும் எமக்குப் பயன்படுகிறது. அதிலும் இந்த முட்டையை வைத்து வீட்டில் உள்ள பல பிரச்சினைகளுக்கு நல்ல தீர் வைக் காண லாம். உதாரணமாக, வீட்டில் பல்லி அதிகம் இருந்தால், வீட்டின் மூலையில் முட்டையின் ஓட்டை வைத்தால் பல்லி வராமல் இருக்கும். இது போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முட்டையானது தீர்வைத் தருகிறது. சரி, இப்போது அந்த முட்டை எவ்வாறெல்லாம் பயன்படுகிறது என்று பார்ப்போமா?

பூச்சிகளை விரட்டும். சமையலறையில் கரப்பான் பூச்சி, பல்லி போன்றவை வராமல் இருப்பதற்கு, முட்டையின் ஓட்டை அறை யின் மூலைகளில் வைத்துவிட்டால், அவை வருவதைத் தடுக்கலாம்.

முட்டை ஓடு சிறந்த உரம். முட்டையை சமைத்து சாப்பிட்டப் பின்பு, அதன் ஓட்டைத் தூக்கிப் போட்டு விடுவோம். ஆனால் அந்த ஓட்டை குப்பைத் தொட்டியில் போடாமல், பூச் செடிக்கு உரமாகப் போடலாம்.

தோல் பொருள்களை சுத்தம் செய்ய முட்டை யின் வெள்ளைக் கரு மிகவும் சிறந்தது. சாதா ரணமாக தோற்பொருள்களைச் சுத்தம் செய்ய கடைகளில் விற்கப்படும் பொருள்கள் மிகவும் விலைமிக்கவை. ஆனால் அவ்வாறு அதனை வாங்கி பயன்படுத்துவதை விட, வீட்டிலேயே இருக்கும் முட்டையின் வெள் ளைக்கருவைப் பயன்படுத்தி சுத்தம் செய்யலாம்.



முட்டையின் ஓட்டில் கூட சிறு செடிகளை வளர்க் கலாம். உதாரணமாக புல்லை வளர்க்க லாம். இல்லையெனில், செடி களைவளர்க்கவிதைகளை தோட்டத்தில் வைக்கும் முன், அந்த விதையை முட்டையின் ஓட்டில் வைத்து, வளர்த்து, பின் அதனை பெரிய தொட்டிகளில் வளர்க்கலாம்.

முட்டை எப்போதும் வீட்டு பராமரிப்புக்கு மட்டும் பயன்படுவதில்லை. ஒரு அலங் காரப் பொருளாகவும் பயன்படுகிறது. உதார ணமாக, ஒவ்வொரு வருடமும் குழந்தை களுக்கு 'ஈஸ்டர் எக்' என்ற ஒன்றை அலங்க ரித்துக் கொடுப்பது வழக்கம். ஆகவே அத்தகையவற்றிற்கு வீட்டிலேயே அவற் றைத் தயாரித்துக் கொடுக்கலாம்.

முட்டையை தண்ணீரில் வேக வைத்து, அந்த நீரை இதுவரை கீழே தான் ஊற்றி விடுவோம். ஆனால் முட்டையில் உள்ள ஊட்டச்சத் துக்கள் சிறிது தண்ணீரில் வேகவைக்கும்போது சென்று விடும். ஆகவே அந்த நீரை கீழே ஊற்றாமல், செடிக்கு ஊற்றினால், செடிக்கு போதிய சத் துக்கள் கிடைத்து, செடியும் நன்கு வளரும்.

மெழுகுவர்த்தியை வீட்டில் ஏற்றும்போது, அதில் உள்ள மெழுகு உருகி வீணாகிப் போகாமல் இருக்க, முட்டையின் ஓட்டில் அந்த மெழுகுவர்த் தியின் மெழுகை உருக்கி ஓட்டின் உள்ளே ஊற்றி, பின் அதனை ஒரு மெழுகுவர்த்தியாகப் பயன்படுத்தலாம்.

முட்டையின் ஓட்டை அலங்காரப் பொருளா கப் பயன்படுத்தலாம். அதாவது முட்டையின் ஓட்டை சிறு துண்டுகளாக உடைத்து, அதில் பெயிண்ட் செய்து, அவற்றை வைத்து ஒரு மாடர்ன் ஆர்ட் போல் கற்பனைத் திறத்துடன் ஏதேனும் வரையலாம்.

# 1 ஒன்று என்ற எண்..! ஏன் அந்த வடிவத்தில் இருக்கிறது?

ஒன்று என்பது எதற்காக ஒரு கோடு போட்டது போன்றதொரு வடிவத்தில் இருக்கிறது? அது ஏன் வேறு வடிவத்தில் இருந்திருக்கக் கூடாது? இப்படி எல்லாம் குண்டக்க மண்டக்க கேள்வி கேட்கக் கூடாது என்கிறீர்களா? எண்கள் புழக்கத்தில் இல்லா காலம்.. பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர் களுக்கு ஒன்று, இரண்டு, மூன்று என எண்ண வேண்டிய தேவை ஏற்படவில்லை. சாப்பிட என்ன கிடைக்கும் என்று அலைவதே அவர்களுக்கு முழுநாள் வேலை. வயிற்றுக்குப் போதுமானதாக இல்லாமல் இருந்தாலும் கிடைத்ததைச் சாப்பிட்டு, வாழ்ந்த காலம் அந்தக் காலம் வரைக்கும் மனிதர்களுக்கு எண்கள் தேவைப்பட வில்லை. தேவைக்கும் மேலாக மிஞ்சிப் போனால்தான் கூடுதலாக இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்? அதற்கான அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், காலம் மெல்ல மாறியது.

கால்நடைகளை வளர்த்து தங்கள் பிடியில் வைத்துக்கொண்டால், அவற்றால் கிடைக்கும் பயன்களைச் சேமித்து வைத்திருந்து சாப்பிடலாம் என மனிதர்கள் தெரிந்துகொள்ள ஆரம்பித்தனர். சேர்த்து வைத்துள்ள கால்நடைகளை எண்ணிப் பார்க்க வேண்டிய நெருக்கடி வந்தது.

**எண்களின் பிரசவம்..**

அப்போது மனிதர்களின் மூளையிலிருந்து எண்கள் பிரசவமாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மனிதரின் மூளையிலிருந்து கைவிரல்கள் வழியாக எண்கள் பிரசவ




மாகின. கைவிரல்களைப் பயன்படுத்தித்தான் மனிதர்கள் ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணிப் பார்க்கத் தொடங்கினார்கள். அதனால் தான் ஒன்று என்பது ஒரு விரலின் வடிவத்தில் இருக்கிறது.

குண்டக்க மண்டக்க விதத்தில் கேட்கிற கேள்விகளுக்கு உள்ளேதான் விஞ்ஞானம் இருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாத பால்கார அம்மாமார் இன்னமும் கூடப் பால்கணக்கைச் சுவரில் ஒத்தை ஒத்தை விரல்கள் மாதிரி கோடு கோடாகக் கீறி வைத்துக் கணக்கிட்டுப் பின்னர் மொத்தமாகக் கூட்டிக் கணக்குப் பார்ப்பதை நாம் பார்த்திருக்கலாம்.

**பத்துக்களின் ஆரம்பம்**

கையில் உள்ள பத்து விரல்கள்தான் உலகின் முதல் கல்குலேட்டர். பத்து வரைக்கும் எண்ணிப் பார்த்த பிறகு அடுத்து என்ன செய்யலாம் என்று முட்டிக்கொண்டு எண்கள் நின்றன. ஆரம்ப எண்களைப் பிறந்த குழந்தையாக நினைத்துக் கொண்டால் 10 களின் ஆரம்பத்தை எண்களின் தவழும் காலகட்டமாக வைத்துக் கொள்ளலாம்.

பத்து விரல்களையும் எண்ணி முடித்த பின்னர் ஒரு பத்துக்கு ஒரு கூழாங்கல் எனக் கற்களை வைத்து பழங்கால மனிதர்கள் கணக்கை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினர். முதல் பத்து, இரண்டாவது பத்து, என எண்ணி எண்ணி பத்து பத்துக்கு நூறு எனப் பெயர் வைத்து எண்கள் மேலும் வளர்ச்சி அடைந்தன.

இன்னமும் ஆங்கிலத்தின் கால வழக்கில் ஒரு பத்தாண்டு என்று பேசப்படுவதை கவனியுங்கள். என்ன காரணத்தாலோ இந்திய கால வழக்கில் ஒரு பத்தாண்டு என்ற முறை ஆங்கில கால வழக்கு அளவுக்கு அவ்வளவு ஆதிக்கமாக இல்லை. ஆனால் பத்துத் பத்தாகக் கூட்டும் முறை இன்னமும் நவீன கார்கள் உள்ளிட்ட எல்லா தானியங்கி வாகனங்களிலும் தொடர்வதைப் பாருங்கள்.

**அபாகஸ்..**

ஒரு பத்துக்கு ஒரு கல் என்று எடுத்து வைத்த முறைதான் ஒரு மரச்சட்டத்தில் கற்களுக்குப் பதிலாக மணிகளைக் கோர்த்து அவற்றைக் கொண்டு கணக்கிடும் அபாகஸ் மணிச்சட்டக் கருவியாக வளர்ந்தது. ஒன்று என்ற எண்ணுக்கு முன்பாகவும் பின்பாகவும் பல எண்களைக் கொண்ட பெரும் பிரபஞ்சமாய் கணிதம் வளர்வதற்கான மையமாக ஒன்று என்ற எண் நிற்கிறது. அதனைப் பெற்றெடுத்த விரலை நினைவு படுத்தும் விதமாகவே ஒன்று விரலின் வடிவத்தில் இருக்கிறது.

# வடக்கில் அதிகமானவர்கள் இசையில் திறமை மிக்கோர்

## கேரளப் பாடகி மனீசா கூறுகிறார்

இசை என்பது மொழியைச் சார்ந்த ஒன்றல்ல. அது உணர்வுகளோடும் இரசனைகளோடும் சம்பந்தப்பட்டது. வடபகுதியில் இசைத் துறையில் திறமையானவர்கள் பலர் இருக்கின்றனர். அவர் களை இனங் கண்டு அவர்களின் திறமையை மென்மேலும் மெருகேற்றி வெளியுலகத்துக்கு தெரியப்படுத்த வேண்டிய கடமை ஊடகத்துறை யினருக்கு அதிகம் உண்டு எனத் தெரிவித்தார் கேரளப் பாடகி மனீசா.

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் அண் மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே பாடகி மனீசா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;

ஊடகத்துறையில் திறமை வாய்ந்த இளைஞர் களை இனங்கண்டு எமக்குத் தாருங்கள். நாம் மேலும் மேலும் அவர்களை வளப்படுத்துவோம். நான் சங்கீதத்தை முறையாகக் கற்கவில்லை. எனக் கிருந்த கேள்வி ஞானத்தினாலும் ஆற்றலா லுமே நான் வளர்ந்தேன். எனவே சங்கீதத்தை முறைப்படி கற்காதவர்களும் சங்கீதத்தில் ஈடுபட தகுதியானவர்களே என்று மேலும் கூறினார். (வ-ரி)





# 'கந்தபுராண சுருக்கம்' நூல் அறிமுக விழா



ஓமந்தை சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கணேசகுருக் களின் ஆசியுரையுடன் சைவசித் தாந்த வித்தகர், பண்டிதர் அமரர் சிவலிங்கத்தின் 'கந்தபுராண சுருக்கம்' என்ற நூலின் அறிமுக விழா இளைப்பாறிய அதிபர் பொ.சிவஞானம் தலைமையில் அண்மையில் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினர் களாக வட மாகாண சுகாதாரத் துறை அமைச்சர் ப.சத்தியலிங் கம், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா கல்வியல் கல்லூரி முதல்வர் சிதம்பரநாதன், வட மாகாண சபை உறுப்பினர் தியாகராசா, வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தலைவர் சிவலிங்கம், ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் திருஞானசம் பந்தமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ-402)

